REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 டிசம்பர் 6 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வருட. 89 இல. 289 | Monday 06,December, 2021 | 20 பக்கங்கள் | 30/-

இலங்கையர் கொலை சம்பவம்;

## ஜனாதிபதியுடன் டுபாயில் இம்ரான் கான் சந்திப்பு



இலங்கை பிரஜை பாகிஸ்தான் நாட்டில் கொல்லப்பட்டமை குறித்த எனது நாட்டின் கண்டனத்தையும் கவலையையும் தெரிவிப்பதற்காக நேற்று ஐக்கிய அரபு

06

கொவிட் தொற்றுக்கு பின்னரான பொருளாதார மீட்புக்கு

# பிராந்திய நாடுகளுக்கிடையே இணைந்த செயற்பாடு அவசியம்

வல்லரசு நாடுகளின் ஒத்துழைப்பு வறிய நாடுகளின் சவால்களுக்கு உந்து சக்தி

## அபுதாபியில் நடைபெறும் இந்து சமுத்திர மாநாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரை



தொற்றுப் பரவலுக்குப் பின்னர் பொருளாதாரத்தை மீட்டெடுக்க, பிராந்தியத்திலுள்ள அனைவரும் ஒன்றிணைந்துச் செயற்பட வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் நேற்று முன்தினம் (04) மாலை ஆரம்பிக்கப்பட்ட இந்து சமுத்திர மாநாட்டின் ஆரம்ப உரையை நிகழ்த்தும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகப்படியான உயிர்களைக் காப்பாற்றுவது என்பதை விலை மதிக்க முடியாவிட்டாலும், தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதற்கு உலகம் முழுவதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக அதிக செலவை ஏற்கவேண்டி

06

## இலங்கை பிரஜையின் கொலை; சர்வமத தலைவர்கள் கண்டனம்

குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனைக்கும் கோரிக்கை



03

சமூகவலைத்தளங்களில் கொடூர காட்சிகள்;

## உயிரிழந்தவரின் காணொளியை பகிர்வதை உடன் நிறுத்துங்கள்

பிரியந்த குமாரவின் சகோதரர் உருக்கமான கோரிக்கை

பாகிஸ்தானில் இலங்கையரான பிரியந்த படுகொலை செய்யப்பட்ட போது பதிவு செய்யப்பட்ட காணொளி தற்போது சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வருகின்றது. இந்நிலையில், உயிரிழந்த பிரியந்த குமாரவின் சகோதரர் தனது




06

## மனுஷ நாணயக்காரவுக்கு எதிராக நடவடிக்கை



38 MPக்கள் கையொப்பமிட்டு சபாநாயகருக்கு கடிதம்

பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவிற்கு எதிராக அதிகபட்ச ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கோரி 38 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கடிதமொன்று கையளிக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை (03) பிற்பகல் பாராளுமன்ற அமர்வின் போது பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, சபைக்கு தலைமை தாங்கியவரின் உத்தரவை பின்பற்றாது அச்சுறுத்தல் ஏற்படுத்தும்

06

பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட

## பிரியந்தகுமாரவின் சடலம் இன்று நாட்டை வந்தடையும்



அரச செலவில் ஏற்பாடு; வெளிவிவகார அமைச்சு


**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் சடலம் இன்று

06

இரு நாட்டு அரசுகளும் நேர்மையான முறையில்

## எனது கணவரது கொலைக்கு நீதி வழங்க முன்வர வேண்டும்



கொலை செய்யப்பட்டவரின் மனைவி உருக்கம்

உயிரிழந்த தனது கணவரின் கொலைக்கு நீதி வழங்கப்படவேண்டும் என சியால்கோட்டில் கொல்லப்பட்ட இலங்கை

06




ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் ஆரம்பிக்கப்பட்ட இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் மற்றும் முக்கிய அதிதிகளுடன் இருப்பதை படத்தில் காணலாம்.

## சப்புகஸ்கந்த நிலைய செயற்பாடுகள் நாளை முதல்

மின்சக்தி அமைச்சர் உதய கம்மன்பில



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்

06

## தீர்வு தொடர்பா பேச வருமாறு கூட்டமைப்பு அரசுக்கு அழைப்பு



*(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)*

அரசாங்கம் இப்போதாவது எம்முடன் பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வுகளை நோக்கி பயணிக்க தயாராக வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு பேச்சாளரும் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். தமிழர் விவகாரம் இனியும் இது உள்ளக விவகாரம் அல்ல, இது

06

பாகிஸ்தானில் கொல்லப்பட்டவரின்

## குடும்பத்திற்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை

பாக். அமைச்சர் ஃபவாட் சௌத்ரி

சியல்கொட் நகரில் கொல்லப்பட்ட இலங்கையரின் குடும்பத்துக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பாகிஸ்தானின் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ஃபவாட் சௌத்ரி தெரிவித்துள்ளார். இதேவேளை, பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி

06

இலங்கையரை கொலை செய்தோருக்கு

## மரண தண்டனை வழங்க மனோ MP வேண்டுகோள்



பாகிஸ்தானில் இலங்கை பிரஜையைக் கொலை செய்தவர்களிற்கு உச்சபட்ச மரணதண்டனை வழங்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இதனைத்

06

கிண்ணியா படகு விபத்து;

## உயிரிழந்தோரது தொகை எட்டானது



கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்துடன் தொடர்புடைய மற்றுமொரு பெண்ணொருவர் கிளிநொச்சி

06

## ரயிலில் மோதுண்டு குடும்பஸ்தர் பலி

திராய்மடு பகுதியில் சம்பவம்



மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்திற்குட்பட்ட திராய்மடு பகுதியில் ரயிலில்

06

பொறியியலாளர் பிரியந்த குமார படுகொலை ;

## இதுவரை 235 பேர் கைது 900 பேர் மீது குற்றப்பத்திரம்

மேலும் பலருக்கு தண்டனை விதிக்க விசாரணை



கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் கொலை தொடர்பில் இதுவரை பாகிஸ்தானில் 235 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 900 நபர்களுக்கு எதிராக

06

## 'ஒமிக்ரோன்' வைரஸால் இதுவரை உயிரிழப்பு இல்லை

உலக சுகாதார தாபனம் தெரிவிப்பு




உருமாற்றமடைந்த ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் வேகமாக பரவி வருகிறது. அமெரிக்கா, நியூசிலாந்து, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் ஒமிக்ரோன் தொற்று பரவ ஆரம்பித்துவிட்டது. இந்தியாவிலும்

06

## இரத்தம் சிந்திய விடயங்களை மறக்குமாறு சம்பிக்க கோரல்

யாழ். ஊடக சந்திப்பில் பகிரங்கமாக தெரிவிப்பு




இலங்கையில் கடந்த காலத்தில் நடந்த இரத்தம் சிந்திய விடயங்களை மறக்க

06

கண் பார்வையை இழந்தவர்களாக நாம்;

## எமக்கு 35,000 கண்களை தானம் செய்த இலங்கையர்

பாக். கண் மருத்துவர் கவலை வெளியீடு



இலங்கை எங்களிற்கு 35,000 கண்களை தானம் செய்தது. ஆனால் நாங்கள் பார்வையை இழந்துவிட்டோம் என பாகிஸ்தானின் தலைசிறந்த கண்மருத்துவர் நியாஜ் புரோகி கவலை வெளியிட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை இலங்கை பிரஜை கும்பலொன்றினால் படுகொலை செய்யப்பட்ட தருணம் முதல் நான் நாட்டின்

06

லாகூரில் பாகிஸ்தானியர்கள் இணைந்து

## இலங்கையரின் படுகொலைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம்

மன்னிப்பு கோரும் வாசகங்களுடன் பதாகைகள்

பாகிஸ்தானில் இலங்கை பிரஜை படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து லாகூரில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது. குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் குறித்த நபரின்




06

விக்கல் வீராச்சாமி




பாகிஸ்தானில நடந்த கொடூரம் மன்னிக்க முடியாத ஒண்டு, சம்மந்தப்பட்ட வைக்கு கொடுக்கிற தண்டனை ஒரு படிப்பினையா இருக்கணும்....

உண்மைதான், பிரதமர் இம்ரான் கான் விட்ட மனதை உருக்கும் அறிக்கை எல்லாத்தையும் மறக்க வைச்சாலும் இத லேசுல மறக்க முடியாது...!!!

## இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவரிடம்

## 30 மில். பெறுமதியான போதைப்பொருள் மீட்பு



விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் அதிரடி

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 30 மில்லியன் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் தொகையொன்றை

06

89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# இந்து சமுத்திர மாநாட்டில் விசேட அதிதியாக பங்கேற்ற ஜனாதிபதி


















ஹம்பாந்தோட்டை துறைமுக வளாகத்தில் முதலீட்டாளர்களுக்கு வசதி அளிக்கும் நிலையம் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்சவினால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிலையத்தை தொடர்ந்து முன்னெடுப்பது தொடர்பான ஒப்பந்தம் அமைச்சின் கீழுள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கும் எச்ஐபிஜிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. அமைச்சு அதிகாரிகளையும் எச்ஐபிஜி அதிகாரிகளையும் படங்களில் காணலாம்.




கொழும்பு 13 கதிரேசன் மணிமண்டபத்தில் செல்வராஜ் ஹரிசுனின் 'உன்னை காண்பது எப்போ ஐயப்பா' இறுவெட்டு வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஆறு முகம் ரவீந்திரன் சுவாமி, ரவி குருசுவாமி, விஜயானந்தர் சுவாமி, தொழில் அதிபர் சிவசுப்பிரமணியம் வயலின் வித்துவான், கலாநிதி வெங்கடா சுப்பிரமணியம் குருக்கள் ஆகியோர் இறுவெட்டை வெளியிட்டு வைப்பதை காணலாம். படங்கள்: எம்.நசார்






கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் எழுதிய, இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய சிங்கள ஆய்வு நூலான 'திதுலன தாரக்கா' (மின்னும் தாரகை) நூல் நேற்று முன்தினம் (04) கொழும்பு அல்–ஹிதாயா தேசிய கல்லூரி கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். கௌரவ அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன், முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என். எம். அமீன், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம். அன்சார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முதற்பிரதியை கவிதாயினி மதீனா உம்மா பெறுவதையும் இம்ரான் நைனார், மெட்ரோ நியூஸ் ஆசிரியர் சேதுராமன் மற்றும் பொன்மனச் செம்மல் தாஜ்மஹான் ஆகியோர் அதிதிகளிடமிருந்து நூல்களை பெறுவதை காணலாம். கவிஞர் நஜ்முல் ஹுஸைன், சட்டத்தரணி ரசீத் எம் இம்தியாஸ் ஆகியோரையும் காணலாம். (படங்கள்: அஷ்ரப் ஏ சமத்.எம்.நஸார்)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN தිනකරන්

2021 டிசம்பர் 6 திங்கட்கிழமை

தொழுகை நேரம்
04 முதல் 06 வரை
சுபஹ் - 04.48
லுஹர் - 12.02
அஸர் - 03.24
மஃரிப் - 05.54
இஷா - 07.08

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் கார்த்திகை 20
ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை
யோகம்: அமிர்தசித்த யோகம்
திதி: திரிதியை



## பங்காளி கட்சிகளுடன் முரண்படாதீர்கள்

### ஆளுந்தரப்பினரிடம் பிரதமர் மஹிந்த வலியுறுத்து



அரசாங்கத்தின் கூட்டணியில் உள்ள பங்காளி கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளுக்கு தீர்வு கண்டு ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணி என்ற ரீதியில் அரசியலில் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும்.

முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் கருத்துரைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆளும் கட்சி குழு கூட்டத்தின்போது வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் (04) அலரிமாளிகையில் ஆளும் கட்சி குழு கூட்டம் இடம்பெற்றது. அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த பிரதமர், கூட்டணியில் பங்காளி கட்சிகளுக்கிடையில் தோற்றம் பெற்றுள்ள முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும்.

கூட்டணியின் அனைத்து தரப்பினரையும் அரசியல் ரீதியில் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும். அரசாங்கத்தையும் கூட்டணியையும் பலவீனப்படுத்தும் வகையில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் கருத்துரைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆளும் கட்சி உறுப்பினர்களிடம் வலியுறுத்தினார்.

## அபிவிருத்திச் செயற்பாடுகளில் வடக்கு கிழக்கிற்கு அநீதி இழைக்கப்படவில்லை

### இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸா

**லோரன்ஸ் செல்வநாயகம்.ஷம்ஸ் பாஹிம்**

அபிவிருத்திச் செயற்பாடுகளில் வடக்கு கிழக்கிற்கு அநீதி இழைக்கப்படவில்லை என இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸா தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு வழங்குவது தொடர்பில் சுமந்திரன் எம்.பி கருத்துத் தெரிவித்தார்.அது தொடர்பில் எமக்குப் பிரச்சினை கிடையாது. வடக்கு கிழக்கு பகுதிகள் தொடர்பில் முறைகேடு நடப்பதாக அவர் தெரிவித்தார். களனி பாலம் மற்றும் கிண்ணியா பாலம் பற்றி பேசினார். களனி பாலம் நீண்டகாலத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு கிழக்கிற்கு அநீதி நடக்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் பாரிய அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதி நடந்தது. யுத்தம் காரணமாக அப்பகுதி அபிவிருத்தி தடைப்பட்டிருந்தது. அதனை நாம் ஏற்கிறோம். எமது அமைச்சு வடக்கு கிழக்கிற்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளது. நீங்கள் உதவி ஆட்சிக்கு கொண்டு வந்த அரசு கிண்ணியா பாலம் அமைக்க அடிக்கல் நாட்டிய



போதும் பாலம் நிர்மாணிக்கப்படவில்லை. அதற்கு கடந்த அரசே பொறுப்பு கூற வேண்டும். தௌபீக் எம்.பியின் கோரிக்கை படி பாலம் அமைக்க அடிக்கல் நாட்டினோம். பாலப் பாதையை நகர சபையே வழங்கியது.

வடக்கில் 3000 கிலோ மீட்டர் நீள பாதை நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.எமது காலத்தில் வடக்கு கிழக்கிற்கோ வேறு பகுதிக்கோ நாம் அநீதி இழைக்கவில்லை.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசினாலும் அனைத்திற்கும் அரசியலை திணிக்காதீர்கள். எமது அமைச்சு பற்றி தவறான கருத்தை முன்வைக்காதீர்கள் என்றார்.

## 52 போலி 1000 ரூபா நோட்டுக்களுடன் மூவர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

1000 ரூபா போலி நாணயத்தாள்களுடன் மூவரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ரங்கல பொலீஸ் பிரிவில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் ஆயிரம் ரூபாய் நோட்டுகள் 52 உடன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

பொலீசாருக்கு கிடைத்துள்ள தகவலையடுத்து நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது உடவல சந்திக்கு அருகாமையில் வைத்து ஆயிரம் ரூபா நோட்டுக்கள் இரண்டுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளையடுத்து மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து 1000 ரூபா

06

## இலங்கை பிரஜையின் கொலை; சர்வமத தலைவர்கள் கண்டனம்

### குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனைக்கும் கோரிக்கை

**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

இலங்கை பிரஜை பாகிஸ்தானில் கொடூரமாக கொலை செய்யப்பட்டதற்கு சர்வமத தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து



விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நாரஹேன்பிட்ட அபயராமய விகாரையில் நடைபெற்றது.

இதில் சர்வமத தலைவர்களான பௌத்த மத தலைவர்கள், கலாநிதி பாபு சர்மா குருக்கள், கலாநிதி ஹஸன் மௌலானா, மற்றும் கலாநிதி குருகுலசூரிய உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தனர். இதுகுறித்து பாகிஸ்தான் அரசு பூரண விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு உச்சப்பட்ட தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என குருமார்கள் கலந்துகொண்டு இந்நிகழ்வுக்கு கண்டனம் தெரிவித்ததுடன் பாகிஸ்தான் அரசாங்கம் உரிய விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

## இன, மத பேதங்களுக்கு அப்பால் இணைந்து செயற்பட அழைப்பு

### நாட்டை கட்டியெழுப்ப ஞானசார தேரர் அரைகூவல்



இன, மத பேதங்களுக்கு அப்பால் அனைத்து இன மத மக்களும் இணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்பவேண்டும் என்பதே ஒரு நாடு ஒரு சட்டம் செயலணியின் நோக்கம் என ஒரு நாடு ஒரு சட்டம் செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

ஒரு நாடு ஒரு சட்டம் தொடர்பில் கருத்தறியும் வேலைத்திட்டத்தின் கீழ் மக்கள் கருத்தறியும் நடவடிக்கைகள் நேற்று மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் டேபா மண்டபத்தில் இந்த செயலணியின் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது பொதுமக்கள், மதத்தலைவர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டு தமது கருத்துகளை முன்வைத்தனர்.

இந்த செயலணியின் சந்திப்பினை தொடர்ந்து ஞானசார தேரர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் இருக்கின்ற மக்கள் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்கின்றனர். அரசியல் தலையீடுகள், அரச அதிகாரிகளின் தலையீடுகளுக்கு அப்பால் பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இதன்போது முக்கிய பிரச்சினையொன்று முன்வைக்கப்பட்டது.

06

## கலாநிதி நாவின்னே சுகுணதம்ம தேரர் தலைமை பதவிக்கு நியமனம்

பேலியகொட வித்தியலாங்கார பிரிவேனாவின் தலைமை பதவிக்கு கொழும்பு ,சிலாபம் இரண்டு மாவட்டங்களினதும் உபதலைமை சங்க நாயக்கர்,பேலியகொட வித்தியாலங்கார பிரதி பிரிவேனாதிபதி கலாநிதி நாவின்னே சுகுணதம்ம தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன் காரணமாக காலியான இடத்துக்கு வித்தியாலங்கார பிரதி பிரிவேனாதிபதி மற்றும் பணிப்பாளர் பதவிக்கு வித்தியாலங்கார பிரிவேனையின் கலாநிதி வெலமிட்டியாவே ஞானரத்ன தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்

களனி பல்கலைகழகத்தின் வேந்தர், கொழும்பு சிலாபம் இரண்டு மாவட்டங்களின் தலைமை சங்க நாயக்கர், பேலியகொட வித்தியாலங்கார பிரிவேனாதிபதியாக





பதவி வகித்த அக்கமஹா பண்டித, கலாநிதி

வெலமிட்டியாவே குசலதம்ம தேரரின் மறைவுக்குப் பின்னர் கடந்த வெள்ளிக் கிழமை முதற் தடவையாக கூடிய வித்தியாலங்கார நிறைவேற்று சபை இவ் நியமனங்களை வழங்கியதாக இணை செயலாளர் விரிவுரையாளர் உடகலதெனிய தம்மவிமல தேரர் தெரிவித்தார்.

## இராஜாங்க அமைச்சின் செயலாளர்கள் 7 பேர், மாலைதீவு தூதுவரின் நியமனத்திற்கு அனுமதி

### பாராளுமன்ற உயர் பதவி குழு வழங்கியது

ஏழு இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் தூதுவர் ஒருவரின் நியமனத்துக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில்

நடைபெற்ற பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக திருமதி.கே.எம்.எஸ். டி.ஜயசேகரவின் நியமனத்துக்கும், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக .என்.எச்.எம்.சித்ரானந்தவின் நியமனத்துக்கும் உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம்குறிப்பிட்டார்.



சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேதவைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சின் செயலாளராக செல்வி.ஏ.கே. டபிள்யூ.டபிள்யூ.எம்.என்.கே.வீரசேகரவின் நியமனத்துக்கும், பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரபயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக கலாநிதி.டி.பி.எஸ். அமல் ஹர்ஷ.டி.சில்வாவின் நியமனத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக எஸ். ஜீ.விஜயபந்துவின் நியமனத்துக்கும், கிராமிய வீடமைப்பு,நிர்மாணத் துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக பொறியியலாளர் கீர்த்தி ரஞ்சித்

06

## நீதிமன்றங்களின் அண்மைக்கால தீர்ப்புக்கள் சுயாதீனத்தை வெளிப்படுத்துவதாக உள்ளன

நீதிமன்றங்களின் அண்மைக்கால தீர்ப்புக்களை அவதானிக்கின்ற போது, நாட்டின் நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படுவதாகக் கருத முடிகின்றதென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்தார்.

பிரபல பெண் எழுத்தாளர் நூருல் ஐன் எழுதிய முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் ஆய்வு நூலான "திதுலனதாரக"(மின்னும் தாரகை) என்ற சிங்கள நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மருதானை அல்ஹிதாயா பாடசாலையில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது,

நீதி மன்றங்களின் அண்மைக் கால தீர்ப்புக்கள் அவற்றின் சுயாதீனச் செயற்பாடுகளையே காட்டுகின்றன. இது மகிழ்ச்சிப்படக் கூடிய விடயம்.முன்னாள் ஆளுநர் அஸாத்சாலியின் விடுதலை மற்றும் யானைகள் வளர்ப்பது தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கள் முதுகெலும்புள்ள நீதிபதிகளின் செயற்பாடுகளாகவே உள்ளன. அஸாத் சாலிக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கின் உள்நோக்கத்தை அறிந்து கொண்ட நீதிபதி, மனுதாரர்களுக்கு கன்னத்தில் அறைந்தாற்போன்று தீர்ப்பு வழங்கியுள்ளார்.யானைகள் வளர்ப்பு விடயத்திலும்,அமைச்சரவையின் தீர்மானத்துக்கு ஏற்ப,வழக்குகளை வாபஸ் பெற முடியாதுதெனவும்,சமூகப் பொறுப்புடன்



சட்டமா அதிபர் திணைக்களம் செயற்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் பதில் வழங்கியது.

பெண்களின் திறமைகளுக்கு வேலி போடுகின்ற அல்லது அவர்களை மட்டுப்படுத் தும் வகையிலான சிந்தனைகளை, கால வோட்டம் கருதி ஏற்க முடியாத நிலை இன்று ஏற்பட்டு வருகிறது. இதனால், பக்குவமாகவே இவ்விடயங்களை கையாள முடிகின்றது. நூருல்ஐன், லரீனாஹக், இஸ்ஸத் ரிஹானா என்ற 'அனார்' போன்ற பெண் எழுத்தாளர்களின் கற்பனை வளம், இலக்கிய நயங்களினால் நமது சமூகம் பெருமைப்படக்கூடியதாகவுள்ளன. பெண்கள் மீதான ஆண்களின்

06

## திரைக்குப் பின்னாலிருந்து தனது பொறுப்பை நிறைவேற்றியவர்

### சிறிசேன குரே மறைவிற்கு இம்தியாஸ் எம்.பி அனுதாபம்



எப்போதும் திரைக்குப் பின்னால் தனது பொறுப்புகளையும் கடமைகளையும் சரியாக நிறைவேற்றியவர் சிறிசேன குரே என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார். சிறிசேன குரேயின் மறைவு தொடர்பில் அனுதாபச் செய்தியொன்றை வௌியிட்டுள்ள அவர், ரணசிங்க பிரேமதாசவின் அரசியல் பயணத்தின் போது அவருக்கு நிழலாக அவருக்கு நெருக்கமானவராக செயற்பட்டவர் சிறிசேன குரே. அவர் தனது மனதில் நம்பிக்கை வைத்திருந்த தலைமையின் வெற்றிக்காகவும் பாதுகாப்பிற்காகவும் ஏதேனுமொரு எச்சரிக்கையை எதிர்கொண்ட போதிலும், அவரால் நிறைவேற்றப்பட்ட அர்ப்பணிப்பான பணி எனது நினைவுக்கு வருகிறது.

ரணசிங்க பிரேமதாசவின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் பிரதானியாக இவரே இருந்தார். நாட்டின் அன்றைய நிலைமையை புரிந்து கொண்டு , அன்றைய

06

## அஷ்ஷெய்க் முஹம்மத் அல் பாஸி (ரஹ்) அவர்களின் ஞாபகார்த்த மஜ்லிஸ்

**பேருவளை விஷேட நிருபர்**

பேருவளை சீனன் கோட்டை கங்கானங்கொடைநூரானியாஸாவியாவில் ஆத்மீக ஞானி சங்கைக்குறிய அஷ்ஷெய்க் முஹம்மத் அல் பாஸி (ரஹ்) அவர்களின் ஞாபகார்த்த மஜ்லிஸ் எதிர்வரும் 13 ஆம் திகதி அஸர் தொழுகையின் பின் கங்கானங்கொடை ஸாவியாவின் பிரதம இமாம்



மௌலவி முஹம்மத் அஸாத் (அஜ்வாதி) தலைமையில் நடைபெறும்.

கொழும்பு உம்முஸாவியாவில் இயங்கும் அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எஸ்.எம் அஹ்மத் (மஹ்லரி) விஷேட பேச்சாளராக கலந்து கொள்வார். இந்நிகழ்வில் அனைத்து ஜமாஅத்தார்களும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானில் இலங்கையர் கொல்லப்பட்டதற்கு இ.தொ.கா செயலாளர் ஜீவன் கண்டனம்

பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாக



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது பாகிஸ்தானின் சியால்கோட் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் முகாமையாளராக பணிபுரியும் பிரியந்த குமார என்ற இலங்கையர் கொலை செய்யப்பட்டு எரியூட்டியமை கண்டனத்துக்குரியது என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 140.10 | 146.33 |
| கனடியன் டொலர் | 154.48 | 160.62 |
| யூரோ | 223.52 | 232.08 |
| ஜப்பான் யென் | 1.7356 | 1.8048 |
| சிங்கப்பூர் டொலர் | 144.42 | 149.28 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 263.33 | 271.99 |
| சுவிஸ் பிராங்க் | 213.00 | 220.95 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |


| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 535.11 | கட்டார் ரியால் | 55.08 |
| குவைத் டினார் | 666.41 | சவூதி ரியால் | 53.78 |
| ஓமான் ரியால் | 524.04 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.92 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 20ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரபீஉனில் ஆகிர் பிறை 30

**குறள் தரும் சிந்தனை**



மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகும் அறிவு

ஒருவரின் அறிவு அவரது மனத்தின் இயல்பு என்பது போல் தோன்றினாலும், அது அவர் சேர்ந்த கூட்டத்தாரின் தொடர்பால் வெளிப்படுவதேயாகும்.

## நாகரிக சமூகம் வெட்கித்தலைகுனியும் கொடிய காட்டுமிராண்டித்தனம்!

பாகிஸ்தான் நாட்டின் பஞ்சாப் மாநிலத்திலுள்ள சியால்கோட்டின் வசிராபத் வீதியில் அமைந்திருக்கும் தொழிற்சாலையொன்றில் முகாமையாளராகக் கடமையாற்றி வந்த இலங்கையரான பொறியியலாளர் பிரியந்த குமார தியவடன கொடூரமான முறையில் தாக்கப்பட்டு உயிருடன் எரித்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற இச்சம்பவம் பாகிஸ்தான் மற்றும் இலங்கை மக்களை மாத்திரமல்லாமல் மனிதாபிமானத்தையும் மனித நேயத்தையும் நேசிக்கும் அனைத்து தரப்பினரையும் அதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாகியுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகப் பொறியியல் பட்டதாரியான பிரியந்த குமார, 2010 ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தானிலுள்ள தொழிற்சாலையில் கடமையாற்றி வந்துள்ளார். இவர் கும்பலொன்றினால் தாக்கப்படுவதும், அவரது கார் சேதப்படுத்தப்படுவதும், எரிக்கப்படுவதும், அதனை அக்கும்பல் 'செல்பி' எடுப்பதும் சமூக ஊடகங்களிலும் இணைய தளங்களிலும் வெளியாகியுள்ளன. இச்சம்பவமானது முற்றிலும் குரூரமானதும் காட்டுமிராண்டித்தனமானதுமாகும்.

இக்குரூரத் தாக்குதலையையும் படுகொலையையும் பாகிஸ்தான், இலங்கை உட்பட மனித நேயத்தை விரும்பும் அனைத்து தரப்பினரும் வன்மையாகக் கண்டித்துள்ளனர். மனித நேயத்தையும் மனிதாபிமானத்தையும் பெரிதும் போதிக்கும் இஸ்லாம், மதத்தின் பெயரால் எந்தவொரு மனிதனையும் கட்டுமிராண்டித்தனமாகவும் குரூமாகவும் கொலை செய்ய இடமளிக்கும் என்றும் எதிர்பார்க்கவே முடியாது. அதனால் இக்கொடூரப் படுகொலையின் ஊடாக மனிதாபிமானத்தைப் போதிக்கும் மதத்திற்கு களங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

இதேவேளை பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், 'இக்குற்றச்செயலில் ஈடுபட்டவர்களுக்கு கடவுளின் மன்னிப்பும் கிடைக்கப் பெறாது' எனக் குறிப்பிட்டுள்ளதோடு, 'எமது சட்டத்திலும் அவர்களுக்கு மன்னிப்பு கிடைக்கப் பெறாது' என்றும் 'குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனை அளிக்கப்படும்' என்றும் தெரிவித்திருக்கின்றார்.

அதேநேரம் இச்சம்பவத்தை அறிந்ததும் 'பாகிஸ்தானின் வெட்கத்திற்குரிய நாள்' என்று ட்வீட் செய்தியில் குறிப்பிட்ட பிரதமர் இம்ரான் கான், 'தாம் பாகிஸ்தானியர் என்று கூற வெட்கப்படுவதாகவும் பைத்தியக்கார பயங்கரவாத கும்பலொன்றினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இச்செயலுக்காக எம்மை மன்னித்துக் கொள்ளுங்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்டு இச்சம்பவம் தொடர்பில் தம் கவலையைத் தெரிவித்துக் கொண்டதோடு, இச்சம்பவம் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தான் காராச்சியில் கூடிய அந்நாட்டு பிரஜைகள், இப்படுகொலைச் சம்பவத்திற்கு மன்னிப்புக் கோரும் பதாகைகளை ஏந்திய வண்ணம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

இவை இவ்வாறிருக்க, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரியந்த குமாரவின் மனிதாபிமானமற்ற படுகொலையையிட்டு, தாம் பெரிதும் கவலையடைவதாகக் குறிப்பிட்டுள்ளதோடு 'இந்த மனிதாபமானமற்ற செயல் இலங்கைக்கு மாத்திரமல்லாமல் மனித நேயமுள்ள உலகின் அனைவருக்குமே பாரிய அதிர்ச்சியாகும். இச்சம்பவத்தையிட்டு நீதியை நிலைநாட்ட உடனடியாக நடவடிக்கைகளை ஆரம்பித்த பாகிஸ்தானை அதன் நீண்டகால நட்புறவு நாடு என்ற வகையில் பாராட்டுவதோடு, இது தொடர்பில் பாகிஸ்தான் முன்னெடுக்கும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இலங்கை அரசாங்கமும் நாட்டு மக்களும் பாரிய நம்பிக்கையுடன் எதிர்பார்த்துள்ளோம்' என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையும் பாகிஸ்தானும் பிராந்தியத்தில் மாத்திரமல்லாமல் சர்வதேச மட்டத்திலும் நட்புறவுடன் செயற்பட்டு வரும் நாடுகளாகும். அதனால் தம் நேச நாட்டின் பிரஜையொருவருக்கு தம் நாட்டில் ஏற்பட்டுள்ள கொடூரத்திற்கு நீதி நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க பாகிஸ்தான் தயங்காது என்ற எதிர்பார்ப்பு இலங்கை பிரஜைகள் மத்தியில் நிலவுகின்றது. இதற்கு இச்சம்பவம் குறித்து இலங்கை, பாகிஸ்தான் தலைவர்கள் முன்னெடுக்கும் நகர்வுகள் வலு சேர்ப்பதாக உள்ளன.

இப்படுகொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்று வரையும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், சம்பவத்துடன் தொடர்புபட்டு தலைமறைவாகியுள்ள நபர்களை தேடும் நடவடிக்கைகளை அந்நாட்டு பொலிஸார் சி.சி.ரி.வி ஒளிப்பதிவுகளின் உதவியோடு முன்னெடுத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே இக்குரூர கொலையுடன் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு சட்டத்தின் ஊடாக உச்சபட்ச தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அதுவே பிரியந்த குமாரவின் படுகொலைக்காகப் பெற்றுக் கொடுக்கப்படும் நியாயமாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# மதஅடிப்படைவாத வெறித்தனத்தை உலகிலிருந்து ஒழிக்க சர்வதேச ரீதியில் நடவடிக்கை அவசியம்



## பாகிஸ்தானில் இலங்கையர் எரிக்கப்பட்ட மிலேச்சத்தனமானது உலகின் நாகரிக சமூகம் வெட்கித் தலைகுனியத்தக்க செயல்

மதம் என்பது வெறியாக மாறக் கூடாது என்பதற்கு சரியான எடுத்துக்காட்டு எமக்கு பெரும் துயரமான சம்பவத்துடன் கிடைத்துள்ளது.

அது பாகிஸ்தானில் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற சம்பவம் ஆகும். அங்கு பணிபுரிந்த முகாமையாளர் ஒருவர் மிலேச்சதனமான முறையில் கொலை செய்யப்பட்டு, எரிக்கப்பட்ட சம்பவமே அதுவாகும். அடிப்படைவாத மதவாதிகளின் வெறித்தனமான இந்த மிலேச்சத்தனம் வெட்கித் தலைகுனியத்தக்கதும், உலகின் நாகரிக சமூகம் வன்மையாக கண்டிக்கத்தக்கதுமான செயலாகும்.

இந்த கொடூரமான சம்பவத்தால் இலங்கையின் நீண்ட கால நட்பு நாடாக விளங்கிய பாகிஸ்தானை பகைநாடாக கொள்ளத் தேவையில்லை என்று கருதினாலும், மத அடிப்படைவாதத்தை உலகில் இருந்து முற்றாக ஒழிப்பதற்கு இதை சந்தர்ப்பமாக்கிக் கொள்வது முக்கியமாகும்.

பொதுமக்களின் வாக்குகள் மூலம் அதிகாரத்துக்கு வந்த பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான்கான், இந்த மிலேச்சத்தனமான சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், மேற்படி சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளார். தெற்காசிய பிராந்தியத்தின் மிகப் பெரிய இஸ்லாமிய நாடு மத அடிப்படைவாதத்தின் பிடியில் சிக்குவது பாகிஸ்தானின் அமைதி ,நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமைக்கு சாதகமாக அமையாததோடு, அது பிராந்தியத்தின் ஒத்துழைப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை புரிந்து கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

மேற்படி சம்பவம் தொடர்பாக பாகிஸ்தானின் பிரதமர் மற்றும் அந்நாடும் மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகள் பாராட்டுக்குரியதாகும். மரணமான இலங்கை முகாமையாளரின் மனைவிக்கு பிள்ளைகளுக்கும் மற்றும் குடும்பத்தாருக்கும் நியாயத்தை பெற்றுக் கொடுப்பதற்காக வெளிவிவகார அமைச்சு, பாகிஸ்தானின் இலங்கை உயர்ஸ்தானிகராலயம் என்பவற்றின் தலையீடு அவசியமாகும். இவ்வாறு குரூரமான மனித படுகொலையை செய்த அடிப்படைவாத மதவெறியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு சர்வதேச மனித உரிமைகள் கவுன்சிலுக்கு உள்ளது. இது போன்ற சம்பவங்களுக்கு எதிராக குரல் எழுப்பிய சிவில் அமைப்புகளுக்கும் அதற்கான பெரும் பொறுப்பு உண்டு. இந்த மனிதப் படுகொலை மற்றும் இதனுடன் தொடர்புடையகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசும் இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கியமாகும்.

இச்சம்பவத்திற்குப் பின்னர் பாகிஸ்தானில் பணிபுரியும் அனைத்து இலங்கையர்களின் பாதுகாப்புக்காக நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு பாகிஸ்தானின் இலங்கை உயர்ஸ்தானிகர் காரியாலயத்திற்கு உள்ளது. அதே போன்று இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சும் இதற்காக இராஜதந்திர ரீதியில் தலையிட்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இதற்கு முன்னர் இலங்கை கிரிக்கெட் அணியினர் பாகிஸ்தானில் விஜயம் மேற்கொண்டிருந்த வேளையில், இதே போன்ற பயங்கரவாத தாக்குதலுக்கு உள்ளானார்கள். அவ்வேளையில் இலங்கை கிரிக்கெட் அணியை பாதுகாப்பாக அழைத்துச் செல்வதற்கு அச்சந்தர்ப்பத்தில் பஸ் வண்டியை செலுத்திய பாகிஸ்தான் சாரதியே உதவினார். அவர் தனது உயிரை பணயமாக வைத்து புரிந்த சேவைக்காக அதனை பாராட்டும் வகையில் அவர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அது



எம் நாட்டவர் அவருக்களித்த நன்றிக் கடன் ஆகும். இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் இரண்டு நாடுகளுக்கும் இடையே இராஜதந்திர தொடர்புக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சம்பவம் என்றாலும், புத்திசாலியான தனிமனிதனின் தலையீடு இரண்டு நாடுகளுக்கும் இடையேயான உறவை பலப்படுத்த உதவியாக இருந்தது.

குரூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையின் இளம் முகாமையாளரின் மரணத்தால் அவரின் மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் தாங்கொணா துயரத்திற்கு ஆளாகியுள்ளார்கள். அது ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவர்களுக்கு நிச்சயம் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். உணர்ச்சிபூர்வமாக இத்தாக்குதல் சம்பவத்தை நோக்காது உலகம் பூராவும் பரவியுள்ள இவ்வாறான மத அடிப்படைவாதத்தை உலகில் இருந்து முற்றாக ஒழிப்பதற்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக நடவடிக்கைகளை செயல்படுத்த வேண்டும்.

இனப்பிரச்சினை பயங்கரவாதமாக மாறி முப்பது வருடத்துக்கு இந்நாடு முகம் கொடுத்துள்ளது. ஆயிரக்கணக்கான உயிர்கள் அன்று புலிகள் இயக்க பயங்கரவாதிகளின் தாக்குதல்களால் அழிக்கப்பட்டன. தேசிய சொத்துக்கள் தேசிய வளங்கள் பயங்கரவாதத்தால் அழிவடைந்தன. அதனை ஒழிப்பதற்காக நாடே ஒருங்கிணைந்தது போல இந்த மத அடிப்படைவாதத்தை ஒழிக்கவும் முழு உலகமுமே ஒன்றாக இணைய வேண்டும். புலிப் பயங்கரவாதத்தை ஒழித்து பத்து வருடம் கடந்து பின்னர் அடிப்படை மதவாதிகளின் தாக்குதலால் முழு நாடுமே பீதியில் உறைந்தது. அது 2019 ஏப்ரல் மாத ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலாகும். கிறிஸ்தவ தேவாலயங்களில் மத வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த அப்பாவி மக்கள் 200 பேருக்கும் அதிகமானோர் இத்தாக்குதலால் மரணமடைந்தார்கள். பெருமளவானோர் காயமடைந்தார்கள். அந்த பயங்கரமான சம்பவத்தை மீண்டும் பாகிஸ்தானில் பிரியந்த குமார தியவடன கொலை செய்யப்பட்ட சம்பவம் ஞாபகத்துக்கு கொண்டு வந்துள்ளது.

பல தசாப்தத்துக்கு முன்னர் அடிப்படைவாதம் இனவாத ரூபத்தில் செயல்பட்டது. தற்போது இனவாதம் மத அடிப்படைவாதம் ஆக மாறியுள்ளது. அதற்கு உதாரணம் கடந்த 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலாகும். பாகிஸ்தானில் மரணமடைந்த இலங்கை முகாமையாளரும் இந்த அடிப்படைவாத மதவாதத்துக்கே இரையாகியுள்ளார். இன்று முழு உலகமுமே மத அடிப்படைவாதத்திற்கு முகம் கொடுத்துள்ளது. ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமின்றி உலகில் பல நாடுகள் அடிப்படைவாத மதப் பயங்கரவாதத்துக்கு இரையாகியுள்ளதாக தெரிகின்றது. அதனை ஒரு நாடாகவோ ஒரு இனமாகவோ தனித்து நின்று ஒழிக்க முடியாது. ஒசாமா பின்லேடன் அமெரிக்க படைகளால் கொல்லப்பட்டாலும் இன்றும் அடிப்படை மத பயங்கரவாதம் முடிவுக்கு வரவில்லை. இன்றும் உலகை பயமுறுத்தும் அடிப்படைவாத மத பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படவில்ல.

தற்போது உலகெங்கும் அடிப்படைவாத மத பயங்கரவாத அணிகள் நூற்றுக்கணக்கில் செயற்பட்டு வருகின்றன. இந்த அமைப்புகள் உலகின் அமைதிக்கு, நல்லிணக்கத்திற்கு மற்றும் இயல்பு வாழ்க்கைக்கு பெரும் தடையாக உள்ளன. அறிக்கைகள், கண்டனங்கள் போன்ற செயல்களுக்கு அப்பாற் சென்று உலகமயமாக்க மூலோபாய முறைகள் மூலம் அதனை தோல்வியுறச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானில் கொல்லப்பட்ட இலங்கை முகாமையாளரின் மரணம் தொடர்பாக இந்நாட்டு சில அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் செயல்படும் விதம் ஆச்சரியமூட்டக் கூடியதாக உள்ளது. பாகிஸ்தானுக்கு எதிராக செய்திகளை தெரிவிப்பதை விட தற்போது உலகளாவிய ரீதியில் அடிப்படைவாத மத பயங்கரவாதத்துக்கு எதிராக ஒருங்கிணைந்து குரல் எழுப்புவதே அவசியமாகும். கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவரான பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இச்சம்பவம் தொடர்பாக கண்டனம் தெரிவித்திருப்பது குறித்து அவரை முதுகெலும்புள்ள நபர் எனப் பாராட்டலாம்.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் பங்குபற்ற பயங்கரவாத நடவடிக்கை காரணமாக இலங்கைக்கு அவுஸ்திரேலியா மேற்கிந்திய அணிகள் வருகை தராத சந்தர்ப்பத்தில் தைரியமாக இலங்கைக்கு வந்த நாடுகளில் பாகிஸ்தானும் அடங்கும். அடிப்படை மதவாத பயங்கரவாதிகள் ஒரு சிலரின் தாக்குதல் காரணமாக இராஜதந்திர தொடர்புகளுக்கு தடைகளை ஏற்படுத்தக் கூடாது. இவ்வாறான இழிசெயல்களை உலகிலிருந்து ஒழிக்க இந்த சம்பவத்தை ஆரம்பமாக கொள்வது உலகளாவிய சமாதானம், நல்லிணக்கம் மற்றும் நல்வாழ்வை எதிர்பார்க்கும் அனைத்து இராச்சியங்களினதும் பொறுப்பாகும்.

பாகிஸ்தானில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட சம்பவத்தால் உயிரிழந்த இலங்கை முகாமையாளரின் சம்பவத்தை அரசியல் நிகழ்வாக கருதுவதற்கு பதிலாக அவ்வாறான பயங்கரவாத சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கான சர்வதேச இணைப்பொன்றை வலுப்படுத்த நடவடிக்கை எடுப்பதே அவசியமாகும்.

## பாகிஸ்தான் மீது வெறுப்பு கொள்ள வேண்டியதில்லை. பலியான முகாமையாளரின் குடும்பத்தினருக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்



எரித்துக் கொலை செய்யப்பட்ட பிரியந்த குமார தியவதனவின் மனைவி

இந்திக்க ஜயரத்ன
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# அரசியல் ஆளுமைக்கான அடையாளம் ஜெயலலிதா



இரும்பு பெண்மணி முதல்வர் ஜெயலலிதாவின் 5 ஆண்டு நினைவு தினம் நேற்றாகும். அம்மா என்றும் , புரட்சித் தலைவி என்றும் அ.தி.மு.கவினராலும் தமிழக மக்களாலும் அழைக்கப்பட்ட ஜெயலலிதா மறைந்து நேற்றுடன் ஐந்தாண்டுகள் நிறைவடைந்து விட்டது.

ஜெயலலிதாவின் தாயார் சந்தியா, 1971ம் ஆண்டு காலமானார். பதினைந்து

**5 ஆம் ஆண்டு நினைவு தினம்**

வயதில் திரை நட்சத்திரமாகத் தனது வாழ்வைத் தொடங்கியவர் ஜெயலலிதா. அவர் மொத்தம் 127 திரைப்படங்களில் நடித்திருக்கிறார். எம்.ஜி.ஆருடன் மட்டும் 28 படங்களில் இணைந்து நடித்தார்.

ஜெயலலிதா நிறைய வாசிப்பவர். நாவல் எழுதியவர். சிறுகதைகள் எழுதியவர். துக்ளக் பத்திரிகையில் இவர் கட்டுரைகளையும், புத்தக விமர்சனங்களையும் எழுதியவர்.1980ம் ஆண்டு எம்.ஜி.ராமச்சந்திரன் அ.இ.அ.தி.மு.க., பிரசார செயலாளராக ஜெயலலிதாவை நியமித்தார். மேலும் 1983ம் ஆண்டு அதிமுகவின் கொள்கை பரப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டார் ஜெயலலிதா. நான்கு ஆண்டுகளுக்கு பின்னர், அவர் மாநிலங்களவைக்கு நியமிக்கப்பட்டார். பின்னர், அவர் தீவிரமாக அ.இ.அ.தி.மு.க., அரசியல் கட்சி உறுப்பினராக ஈடுபட்டார்.

ஜெயலலிதாவை, 1984இல் ராஜ்ய சபா உறுப்பினராக்கி, பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தார். நாடாளுமன்ற அ.தி.மு.க. துணைத் தலைவராகவும் ஆக்கினார். ராஜ்ய சபையில் ஜெயலலிதா பேசிய பேச்சுகள், அவருக்குப் புகழ் தேடித் தந்தன.

இவர் தமிழக முதலமைச்சராக 1991 முதல் 1996 வரை இருந்தார். 1991 முதல் 1996 வரை அவர் ஆட்சி புரிந்த விதம் தமிழக வரலாற்றில் மறக்க முடியாத ஒன்று. 1996ம் ஆண்டில் நடந்த தேர்தலில் ஆட்சியை பறிகொடுத்தார் ஜெயலலிதா. அதன் பின்னர் 2001ல் மீண்டும் ஆட்சியைப் பிடித்தார். அதை 2006இல் பறிகொடுத்தார்.

2011ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை பெற்றது அதிமுக. மீண்டும் முதல்வரானார் ஜெயலலிதா. இந்த நிலையில்தான் 2014ம் ஆண்டு சொத்துக் குவிப்பு வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டார் ஜெயலலிதா. தான் பிறந்த கர்நாடக மாநிலத்தில் உள்ள சிறையில் அவர் அடைக்கப்பட்டது அவரது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒன்று. 2015 மே 11 அன்று சொத்துக்குவிப்பு வழக்கில் இருந்து ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரையும் விடுவித்து கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி சி.ஆர்.குமாரசாமி தீர்ப்பு வழங்கினார். இதனைத் தொடர்ந்து 5வது முறையாக ஜெயலலிதா மீண்டும் தமிழகத்தின் முதல்வராக பதவி ஏற்றுக் கொண்டார்.

எம்.ஜி.ஆரைப் போலவே ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த சில மாதங்களிலேயே உடல்நலக் குறைவால் அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் சுமார் 75 நாள் சிகிச்சைக்குப் பிறகு காலமானார்.

# இனிமேலும் அமைதியாக இருக்க என்னால் முடியாது!



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொண்டர்களுக்கான ஒரு இயக்கமாகவும், ஏழை எளிய மக்களுக்கான ஒரு இயக்கமாகவும் நம் இரு பெரும் தலைவர்களின் தலைமையில் செயல்பட்டு வந்தது. நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சியினரும் பார்த்து பொறாமைப்படும் அளவுக்கு ஒளிர்ந்த நம் இயக்கத்தின் இன்றைய நிகழ்வுகளைப் பார்க்கும் போது ஒவ்வொரு தொண்டனும் வெட்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

என்றைக்கு நம் புரட்சித் தலைவி நம்மை விட்டு சென்றார்களோ அன்று முதல் இன்று வரை நம் இயக்கத்தில் நடைபெறும் செயல்களை பார்க்கும் போது என் மனம் மிகவும் வேதனைப்படுகிறது. எந்த ஒரு இயக்கமாக இருந்தாலும் தொண்டர்களை மதித்து அவர்களுடைய நலனில் அக்கறை காட்டும் போதுதான், அதை பார்க்கும் மற்றவர்களுக்கும் அந்த இயக்கத்தின் மீது ஒரு நல்ல எண்ணமும், நம்பிக்கையும் வரும். எந்த ஒரு இயக்கத்திற்கும் கொடி பிடிக்கும் தொண்டர்கள் தான் தேவையே ஒழிய, தடி எடுக்கும் குண்டர்கள் அல்ல.

இருபெரும் தலைவர்களும் கட்டி காத்த இந்த இயக்கத்தை சிரழித்து விடாதீர்கள். இனியும் இதை எல்லாம் பார்த்துக் கொண்டு என்னை போன்றவர்களால் சும்மா இருக்க முடியாது. தொண்டர்கள் மீது விழும் ஒவ்வொரு அடியும் ஒட்டுமொத்த கழக உடன்பிறப்புகளின் மீது விழுந்த அடியாகவும், என் மீது விழுந்த அடியாகவும்தான் நான் நினைக்கிறேன். ஒவ்வொருவரும் மனதில் வைத்து, நம் தலைவர்கள் காட்டிய வழியில், ஒற்றுமையுடன் இருந்தால் தான் எதிர்வரும் நாட்களில், நம் எதிரிகளை வெல்ல முடியும் என்பதன் அவசியத்தை உணர்ந்தாக வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு சசிகலா தெரிவித்துள்ளார்.

# கெச்சிமலை தர்காவில் இன்று ஸஹீஹுல் புகாரி ஆரம்பம்



வரலாற்றுப் புகழ்மிகு பேருவளை கெச்சிமலை தர்காவில் வருடாந்தம் நடைபெறும் புனித ஸஹீஹுல் புகாரி ஸஹீஹுல் முஸ்லிம் ஹதீஸ் கிரந்தங்களின் பராயன மஜ்லிஸின் ஆரம்ப நிகழ்வு இன்று 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறுகின்றது.

சங்கைக்குரிய காலிப் அலவி ஹாஜியார் பின் அஷ் ஷெய்க் அப்துல்லாஹ் ஹாஜியார் அலவியதுல் காதிரி தலைமையில் கொவிட் 19 சுகாதார வழிகாட்டல்களை பேணி வரையறுக்கப்பட்டோரின் பங்கு பற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகும்.

தொடர்ந்து ஒரு மாத காலம் இடம்பெறும் இம்மஜ்லிஸில் உள்நாட்டு வெளிநாட்டு இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள், அலவியா தரீக்காவின் முரீதீன்கள் மற்றும் முஸ்லிம்கள் பலரும் பங்குபற்றுவர்.

வெள்ளிக்கிழமை தவிர தொடர்ந்து 29 நாட்கள் ஹதீஸ் பராயணம் செய்யப்பட்டு உலமாக்ளினால் ஹதீஸ் விளக்கவுரை நிகழ்த்தப்படும். ஜனவரி 8 ஆம் திகதி இரவு ஹத்தாத் ராத்திப், மார்க்கச் சொற்பொழிவு, துஆப் பிரார்த்தனை, ஸியாரத் நிகழ்வு, அல்குர்ஆன் தமாம் நிகழ்வுகள் இடம்பெறுவதோடு 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தமாம் மஜ்லிஸ் இடம்பெறும்.

தமாம் நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி முஸ்லிம் சேவை நேரடியாக அஞ்சல் செய்யவுள்ளது.

பேருவளை விஷேட நிருபர் ...

# அறிவும் ஆற்றலும் நிரம்பிய தழும்பாத நிறைகுடம் அமரர் செ.கணேசலிங்கன்

யாழ் உரும்பிராயில் 1928 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி பிறந்தவர் அமரர் செ. கணேசலிங்கன். அவர் தனது 93 ஆவது அகவையில் நேற்றுமுன்தினம் 04 ஆம் திகதி சென்னையில் காலமானார். சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட நாவல்கள், பல சிறுகதைகள், கட்டுரைகள், விமர்சன நூல்கள், சிறுவர் இலக்கியம், பயண இலக்கியம் என்றெல்லாம் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை தமிழ் இலக்கிய உலகுக்குத் தந்தவர் அமரர் கணேசலிங்கன்.

அவரது தற்போதைய வயதை வைத்துப் பார்க்கும் போது வருடத்துக்கு ஒரு புத்தகத்தை அவர் எழுதியிருப்பதாக கூற முடியும். அதிகளவு புத்தகங்களை அவர் எழுதியிருக்கின்றார்.

மூத்த தமிழ் அறிஞர் மு.வரதராசன் (மு.வ) இவரது நெருங்கிய நண்பர். மு.வ. மறைந்த பின்பு அவரது நினைவாகவும் ஒரு நூலை எழுதியிருக்கின்றார். 'செவ்வானம்' நாவல் பேராசிரியர் கைலாசபதியின் முன்னுரையுடன் வெளியானது. குறிப்பிட்ட நீண்ட முன்னுரையே பின்னாளில் தமிழ் நாவல் இலக்கியம் என்ற விரிவான நூலாகியது.

சர்வதேசப் புகழ் பெற்ற கவிஞர் பாப்லோ நெருடா (இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்றவர்) இலங்கை வந்த சமயம் அவரை வரவேற்கும் எழுத்தாளர்களின் கூட்டத்திற்கு தலைமை தாங்கிச் சிறப்பித்த பெருமையும் கணேசலிங்கனுக்குண்டு. புனா திரைப் படக் கல்லூரியிலும் அவர் சிறிது காலம் பயிற்சி பெற்றவர். அங்கு பிரபல இயக்குநர் மிருணாள் சென் போன்றவர்களுடன் நட்புறவு கொண்டவர். கமல்ஹாஸன் நடித்து பாலுமகேந்திராவின் இயக்கத்தில் வெளியான கோகிலா (கன்னடம்) திரைப்படத்தின் தயாரிப்பு நிர்வாகியாகவும் இயங்கியிருக்கும் கணேசலிங்கன், தமிழக சினிமா உலகின் கோலங்களை தமது கவர்ச்சிக் கலையின் மறுபக்கம் என்ற நாவலில் சித்திரித்துள்ளார்.

நான் வதியும் அவுஸ்திரேலியாவில் பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சைக்கு தமிழும் ஒரு பாடம். தமிழ்மொழிப் பாடப் பரீட்சைக்கு தோற்றும் பல மாணவர்களுக்கு பெண்கள் தொடர்பாக வரும் நேர்முக எழுத்துப் பரீட்சைகளுக்கு கணேசலிங்கனின் 'பெண்ணடிமை தீர' என்ற நூல் உசாத்துணையாகப் பயன்பட்டது என்ற புதிய தகவலையும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த நூலும், குமரனுக்கு கடிதங்கள், குந்தவைக்கு கடிதங்கள் முதலான நூல்களும் பல ஆயிரம் பிரதிகள் வாசகர் மத்தியில் சென்றுள்ளன.

சாரு மஜூம்தார் என்ற இந்திய சுதந்திர போராட்டப் போராளி, பின்னாளில் இடதுசாரி இயக்கங்களில் ஈடுபட்டு, நக்சல்பாரி என்ற ஆயுதப் போராட்ட இயக்கத்தை உருவாக்கியவர். அவரது சிந்தனையின் தாக்கத்தினால், கணேசலிங்கன் எழுதிய 'மண்ணும் மக்களும்' என்ற நாவல் இந்திய அரசினால் தடை செய்யப்பட்டது.

நிலமானிய சமூக ஒடுக்குமுறையைச் சித்திரித்தே 'மண்ணும் மக்களும்' நாவலை அவர் எழுதினார். ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் செ.கணேசலிங்கனின் சிறுகதைகள், நாவல்கள் பல முக்கியமானவை. தடம் பதித்தவை. 'ஆண்மையில்லாதவன்' போன்ற இவரது பல சிறுகதைகள் குறிப்பிடப்பட வேண்டியவை. நாவல்களிலும் 'சடங்கு', 'செவ்வானம்', 'நீண்ட பயணம்', 'மண்ணும் மக்களும்' போன்றவை முக்கியமானவை. இவரது நாவல்களை வெறும் பிரசாரப் படைப்புகளாக ஒதுக்கி விட முடியாது.

ட்ரோல்ஸ்ரோய், தாஸ்தாவஸ்கி போன்றவர்கள் தங்களது படைப்புகளில் கையாண்ட மத போதனைகளை வைத்து மட்டும் எவ்விதம் அவர்களது படைப்புகளைக் கணிப்பிட முடியாதோ, அவ்விதமே செ.கணேசலிங்கனின் படைப்புகளில் ஊடுருவியிருக்கும் பொருளின் தீவிரத்தை வைத்து மட்டும் அவரது படைப்புகளை எடை போட முடியாது.

இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் 'குமரன் பதிப்பகம்' என்ற பெயரில் நூல் வெளியீட்டு நிறுவனத்தையும் நடத்திக் கொண்டு Front Line சஞ்சிகை ஆசிரியர் இந்து ராமின் நண்பராகவும் திகழ்ந்த கணேசலிங்கன், இந்து குழுமத்தின் நூலகத்திலும் சிறிது காலம் பணியாற்றினார்.



## இலங்கை முற்போக்கு இலக்கியக் குடும்பத்தின் மூத்த சகோதரரின் மறைவு ஏற்படுத்திய வேதனை


















தமிழில் அரசியல் சார்ந்த நாவல்களை எழுதும் ஆற்றல் மிக்கவராக இனம் காணப்பட்டவர். மாக்ஸீய சிந்தனைகளினால் ஆகர்ஷிக்கப்பட்ட கணேசலிங்கன் சிறந்த மனிதநேயவாதி எனவும் விதந்து பேசப்படுபவர். ஆங்கிலத்திலும் நல்ல புலமைமிக்க கணேசலிங்கன், ஸ்ரிபன் செவாக் (Stefan Zweig) எழுதிய Letter from an Unknown Woman என்ற குறுநாவலை தமிழில் 'அபலையின் கடிதம்' என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.

கணேசலிங்கனின் முதலாவது நாவல் 'நீண்ட பயணம்' வடமாகாண சாதி ஒடுக்குமுறையை சித்திரித்தது, மற்றுமொரு பிரசித்தி பெற்ற நாவலான 'சடங்கு' பேராசிரியர் கா. சிவத்தம்பியின் முன்னுரையுடன் வெளிவந்து வாசகர்களின் கவனத்தைப் பெற்றது.

வெள்ளவத்தையில் இயங்கிய கணேசலிங்கனின் விஜயலஷ்மி புத்தகசாலை 1983 ஆடிக்கலவரத்தில் முற்றாக எரிந்து நாசமாகியது. இலங்கையில் எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் பெரிதும் உதவிய இந்த புத்தகசாலையை கொடியவர்களிடம் இழந்த போதிலும், சென்னையில் புகலிடம் பெற்று, ஈழத்து படைப்பாளிகளின் நூல்கள் தொடர்ந்து வெளிவருவதற்கு அயராமல் உழைத்தார்.

கொழும்பில் நீண்ட காலம் 'குமரன்' மாத இதழை நடத்தினார். அவ்விதழ் கலை, இலக்கிய, அரசியல், அறிவியல் ஏடாக வெளியானது. இலங்கையில் மிகுந்த கவனத்தைப் பெற்ற கவிஞரான புதுவை இரத்தினதுரை ஒரு காலத்தில் 'வரதபாக்கியான்' என்ற புனைபெயரில் பல கவிதைகளை எழுதியதும் இந்த குமரன் இதழில்தான். ஹெலிகொப்டர் விபத்தில் கொல்லப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப், தான் குமரன் இதழ்களைத் தொடர்ந்து படித்தே அரசியல் அறிவு பெற்றதாக ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தின் முன்னோடி முற்போக்கு எழுத்தாளர் அ.ந. கந்தசாமி அந்திம காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் அவருக்கு அருகே இருந்து பலவிதத்திலும் பணிவிடை புரிந்த முன்மாதிரியாளர் இந்த கணேசலிங்கன்தான். அ.ந.கந்தசாமி எழுதிய வாழ்வுக்கு வழிகாட்டும் உளவியல் நூலான 'வெற்றியின் இரகசியங்கள்' தமிழகத்தில் பாரி நிலைய வெளியீடாக வெளிவரக் காரணமாகவிருந்தார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பக வெளியீடாக வந்த அ.ந.க.வின் 'மதமாற்றம் நாடகம்' நூலாக வெளிவரவும் கணிசமான ஒத்துழைப்பு நல்கியதோடு, அந்நூலுக்கு நல்லதொரு முகவுரையினையும் எழுதியவர். அ.ந.க.வின் வெளிவராத நாவலான செ.க.வின் வசமிருந்த 'களனி வெள்ளம்' 1983 ஆடிக் கலவரத்தில் செ.க.வின் எரிந்த உடைமைகளுடன் எரிந்து போனதா கவும் அறியப்படுகிறது. இலங்கையில் கார்ல்மார்க்ஸ் நூற்றாண்டு கொண்டாடப்பட்ட வேளையில் கணேசலிங்கன் வழங்கிய ஆக்கபூர்வமான உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் நேரடியாக கண்ட தோழர் என். சண்முகதாஸன் அவரை மனம் திறந்து பாராட்டியுள்ளார்.

கணேசலிங்கன், பெண்ணடிமைத்தனத்திற்கு திருக்குறள் விமோசனம் அளிக்கவில்லை என்பதை ஆய்வு மூலம் நிரூபிக்கும் நூல் ஒன்றையும் எழுதி விமர்சகர்களின் கவனத்தை ஈர்த்தவர். பேராசிரியர்கள் க. கைலாசபதி, இந்திரபாலா உட்பட பல முன்னணி விமர்சகர்கள், ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் நூல்களை பதிப்பித்துமுள்ள கணேசலிங்கனின் மிகப் பெரிய பலம் அவரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்த அமைதியும் அடக்கமும்தான். ஒருவகையில் அவர் ஒரு நிறைகுடம்.



எங்கள் முற்போக்கு இலக்கியக் குடும்பத்தின் மூத்த சகோதரர் செ. கணேசலிங்கன் அவர்களுக்கு சிரம் தாழ்த்தி அஞ்சலி செலுத்துகின்றேன்.

லெ. முருகபூபதி...
(ஊடகவியலாளர், எழுத்தாளர்)
அவுஸ்திரேலியா

# முற்போக்கு இலக்கிய தலைமுறையில் இறுதி அன்பரும் எம்மை விட்டு பிரிந்தார்

செ. கணேசலிங்கம் காலமானதாக சென்னையிலிருந்து செய்தி வந்தது. அவரை நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் கண்டு அளவளாவியமை ஞாபகம் வந்தது. துயரம் மனதைக் கௌவியது.

இலங்கையில் முற்போக்கு இலக்கிய பாரம்பரியம் ஒன்று 1950 களில் உருவாகி 60, 70 களில் ஆக்கபூர்வமான பல காரியங்கள் செய்தது. சமூகத்தின் மௌனித்த குரல்கள் பேசத் தொடங்கின. விளிம்பு நிலை மாந்தர் கதைநாயகர் ஆகினர், இலக்கியம் மக்களுக்கானது என்ற கோசங்கள் எழுந்தன.

## இலங்கையில் முதன் முதலில் புத்தகப் பண்பாட்டை உருவாக்கிய கணேசலிங்கன்

பல புதிய எழுத்தாளர்கள் தோன்றினர். புதிய இலக்கிய விவாதங்கள் எழுந்தன. அந்தத் தலைமுறையின் இறுதி மனிதர் கணேசலிங்கன் காலமானார்.

1960 களிலிருந்து அவர் நாவல்களால் நாம் கவரப்பட்டோம், அன்று நாங்கள் இளைஞர்கள். இடதுசாரி எழுத்தாளர்களின் அறிவுஜீவியாக அவர் விளங்கினார். அவரது நாவல்கள் கோட்பாடுகளை அறிமுகம் செய்தன.

நீண்ட பயணம், சடங்கு, தரையும் தாரகையும், செவ்வானம் ஆகிய அவர் நாவல்கள் ஈழத்து இலக்கிய முற்போக்கு வரலாற்றில் முக்கியமான நாவல்களாகும்.

மாக்ஸிசம் மாத்திரம் அறிந்தவரல்ல அவர். அவரோடு உரையாடினால் அவர் பல துறைகளிலும் எவ்வளவு ஆழ்ந்தகன்ற வாசகர் என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

அந்தத் தலைமுறையானது வாசிப்பு வேகம் மிகுந்த தலைமுறையாக இருந்தது. அந்த தலைமுறையின் இறுதி மனிதர் கணேசலிங்கம் ஆவார். அவரும் எம்மை விட்டுப் பிரிந்தார்.

பழகுவதற்கு இனியர், பண்பாளர். அவரை அக்காலத்தில் கொழும்பில் அந்த வெள்ளவத்தை விஜயலக்சுமி புத்தகசாலையில் எப்போதும் காணலாம். எழுத்தாளர்கள் திரளும் இடம் அது.

அவரை நான் 1960 இலிருந்து அறிவேன். அவரது மகள் குந்தவி எமது நாடகத்தில் நடித்தவள். மகன் குமரனை சிறு வயதிலிருந்து அறிவோம். தந்தையின் வழியில் புத்தகப் பண்பாட்டை பரப்பி வருகிறார் மகன்.

அவர் பேசுவது கணேசலிங்கம் பேசுவது போல இருக்கும். அதே சாயல், அதே நடை. குமரன் தந்தை போல பண்பும் ஆழமான வாசிப்பும் அறிவும் கொண்டவர். குமரன் வெளியீடு தரமானது என்ற அபிப்பிராயத்தை உருவாக்கியுள்ளார் குமரன்.

நல்ல நூல்களை மாத்திரம் விட்டுச் சென்றவரல்லர் கணேசலிங்கம். நல்லதொரு புத்தகப் பண்பாட்டு நிறுவனத்தையும் விட்டுச் சென்றுள்ளார். எப்போதும் சிந்தித்துக் கொண்டிருந்த அந்த இனிய உள்ளம் கடைசி மூன்று மாதங்களாக நி னைவின்றி இருந்தது என்பத னை எண்ணும் போது மிகுந்த வேதனையுண்டாகிறது. தனது 93 ஆவது வயதில் அவர் நம்மை விட்டுச் சென்றார்.

அவரோடு பழகிய அந்த நாட்கள் மீண்டும் நினைவுக்கு வருகின்றன, துயரம் தருகின்றன.

ஆழ்ந்த அஞ்சலிகள்! சென்று வாருங்கள் மூத்தவரே!



பேராசிரியர்
சின்னையா மௌனகுரு...

## திரைக்குப் பின்னாலிருந்து... (03 ஆம் பக்கத் தொடர்)

நடவடிக்கையில் அவரது வகிபாகத்திற்கு மதிப்பளிக்க வேண்டும்.

அன்று எமது நாட்டின் ஜனநாயகம் பாரதூரமான வகையில் பாதிக்கப்பட்டிருந்த நிலைமையே காணப்பட்டது. ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் கலந்துகொண்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு அவர்களது சடலங்கள் காட்சிப்படுத்தப்பட்ட நிலைமை கூட காணப்பட்டது. படுகொலைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதித் தேர்தலுக்கான நடவடிக்கையை சிறிசேன குரே வழிநடத்தினார்.

சவால்கள் மற்றும் நெருக்கடிகளை எதிர்கொண்டு தனது அணியின் பாதுகாப்பில் விடாமுயற்சியுடன் செயல்பட்ட அவர், நம் நாட்டில் ஜனநாயக அமைப்பு நிலைத்திருப்பதற்கு ஆற்றிய விலை மதிப்பற்ற பங்களிப்பை நான் நினைவுபடுத்துகின்றேன்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் தலைமையின் கீழ், வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக்கான அமைச்சரவை அமைச்சு அவரிடம் ஒப்படைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அமைச்சின் இராஜாங்க அமைச்சர் பதவிக்கு நான் தெரிவு செய்யப்பட்டேன். அமைச்சர் சிறிசேன குரேயின் கீழ் இராஜாங்க அமைச்சராக நான் பெற்ற அனுபவமும் எனது அரசியல் வாழ்க்கைக்கு பலமாக அமைந்தது.

தன் தலைவரிடம் கூட சொல்ல வேண்டியதை நேரடியாகச் சொல்லும் வலிமை அவருக்கு இருந்தது. தலைமையும் அவரது நம்பகத்தன்மையை நன்கு உணர்ந்திருந்தது.

சிறிசேன குரே அவர்கள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் வாழ்நாளில் மகிழ்ச்சியான தருணங்களைப் போலவே சோகமான தருணங்களிலும் உற்ற நண்பராகவும் இருந்தார். குறிப்பாக அரசியலில் இத்தகைய பார்வை அரிதாகவே உள்ளது.அவர் நம்பிய கொள்கைகள் மற்றும் அவர் நம்பிய தலைமைத்துவத்துடன் அவர் மேற்கொண்ட பயணம் அரசியலில் எமக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக அமைந்தது.

## இன, மத பேதங்களுக்கு அப்பால்... (03 ஆ ம் பக்கத் தொடர்)

யுத்ததிற்கு பின்னர் தமிழராகயிருக்கலாம், முஸ்லிமாகயிருக்கலாம், சிங்களவராகயிருக்கலாம் பாரியளவான பிரச்சினைகளையே எதிர்கொண்டுவருகின்றனர். கிராம சேவையாளர்கள், பிரதேச செயலாளர்களின் செயற்பாடுகள் குறித்து ஆராயும் வகையில் புதிய ஆணைக் குழுவொன்றை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையினை மக்கள் எங்களிடம் முன்வைத்துள்ளனர். அரசாங்கம் வழங்கும் சலுகைகள் மக்களுக்கு கிடைக்கவில்லையென்றால் அதனை மக்கள் யாரிடம் சென்று முறையிடுவது. இது தொடர்பில் மக்களின் குறைகளை நாங்கள் உள்வாங்கியுள்ளோம்.

இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு அந்த பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும். மக்களின் பிரச்சினைகளை முறையாக அணுகப்படாத காரணத்தினாலேயே மக்கள் எங்களிடம் பிரச்சினைகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்த அதிகாரிகள் முறையான தமது சேவையினை முன்னெடுக்காவிட்டால் நாங்கள் அதற்கான நடவடிக்கையினையெடுத்து அந்த சேவையினைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய நிலையேற்படும்.

வடக்கிற்கு நாங்கள் சென்றபோதும் கிழக்கு மாகாணத்திற்கு வந்தபோதும் மக்கள் எங்களிடம் பல்வேறு பிரச்சினைகளை தெரிவிக்கவருகின்றனர். இன்று வாழைச்சேனைக்கு வந்தபோது பெருமளவான மக்கள் எங்களிடம் வந்து தங்களது பிரச்சினைகளை முன்வைத்தனர்.

ஒரு நாடு ஒரு சட்டம் என்னும் செயலணி ஊடாக தமிழர் என்றோ, சிங்களவர் என்றோ, முஸ்லிம்கள் என்றோ முக்கியத்துவப்படுத்துவதில்லை.

இன, மத பேதங்களுக்கு அப்பால் அனைத்து இன மத மக்களும் இணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்பவேண்டும் என்பதே இந்த செயலணியின் நோக்கமாகும்.

ஒரு நாடு ஒரு சட்டம் என்னும் செயலணி ஊடாக பெறப்படும் மக்கள் கருத்துகள் ஜனாதிபதியிடம் கொண்டுசெல்லப்பட்டு அந்த மக்களுக்கான சுபீட்சமான வாழ்க்கையினை வழங்குவதே எமது நோக்கமாகும் என்றார்.

## இராஜாங்க அமைச்சின்... (03 ஆம் பக்கத் தொடர்)

அபேசிறிவர்த்தனவின்நியமனத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்ப்பு, கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஜயந்த சந்திரசோமவின் நியமனத்துக்கும் உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

மாலைதீவுக்கான இலங்கை தூதுவராக ஏ.எம்.ஜே.சாதிக்கை நியமிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## ரயிலில் மோதுண்டு ...

மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு திராய்மடு மூன்றாம் குறுக்கு வீதியில் வசிக்கும் செல்லையா அசோக்குமார் எனும் 43 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதிக்கு வந்த மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடயவியல் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த அதேநேரம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதியின் பணிப்புரைக்கு அமைய களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் பிரேதத்தைப் பார்வையிட்டுள்ளார்.

அத்துடன் விசாரணைகளை முன்னெடுத்து, பிரேதத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மரண தண்டனை...

தெரிவித்துள்ளார். அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில்,

சியால்கோட்டில் இலங்கை நிர்வாக அதிகாரி பிரியந்த குமாரவை அடித்து, எரித்து, கொலை செய்த அடிப்படைவாத கும்பலுக்கு, குறிப்பிட்ட காலவரைக்குள், அதிவேக சட்ட நடவடிக்கை மூலம், உச்சபட்ச மரண தண்டனை வழங்கப்படுவதைத் தவிர எதுவும் எங்களை ஆறுதல் படுத்தாது 'மிஸ்டர் பிரைம் மினிஸ்டர்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## இதுவரை 235 பேர்...

குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில் சியால்கோட் பொலிஸார் 900 சந்தேகத்திற்குரிய சந்தேக நபர்களை கைது செய்வதற்காக நகரம், அருகிலுள்ள கிராமங்கள் உள்ளிட்ட பல இடங்களில் சோதனை நடத்தி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட 235 பேரில் இரண்டு முக்கிய சந்தேக நபர்களான மொஹமட் தல்ஹா மற்றும் ஃபர்ஹான் இத்ரீஸ் ஆகியோர் அடங்குவர்.

பிரியந்த குமாராவின் பிரேத பரிசோதனை சியால்கோட்டின் அராமா இக்பால் போதனா வைத்தியசாலையில் நிறைவடைந்துள்ளது.

பின்னர் பிரியந்த குமாராவின் உடல் 1122 ஆம்பியூலன்ஸ் மூலம் பலத்த பாதுகாப்புடன் லாகூர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக துணை தலைமை அமைச்சரவை செயலாளர் சியால்கோட் தாஹிர் ஃபரூக் தெரிவித்தார். சட்ட ரீதியான நடைமுறைகள் முடிந்த பின்னர் பிரியந்த குமாராவின் சடலத்தை கொழும்புக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சப்புகஸ்கந்த நிலைய ...

மீண்டும் நாளைய தினம் திறக்கப்படவுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மசகு எண்ணெய்யை கொள்வனவு செய்வதை நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்த நிலையில் மேற்படி சப்புகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையம் கடந்த நவம்பர் முதல் வாரத்தில் மூடப்பட்டது.

தொடர்ச்சியாக 50 தினங்களுக்கு மேற்படி சுத்திகரிப்பு நிலையம் மூடப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்த நிலையில் அந்த தீர்மானம் மாற்றப்பட்டுஅதற்கிணங்க 22 தினங்களுக்கு பிறகு நாளைய தினம் மேற்படி சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் திறக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். அதேவேளை, எரிபொருளை தட்டுப்பாடின்றி விற்பனை செய்யும் வகையில் மேலும் ஒரு தொகை எரிபொருள் நாட்டுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள நிலையில் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதையடுத்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் அதனை மீண்டும் நாளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## பிரியந்தகுமாரவின் சடலம் ...

இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

2021 டிசம்பர் 03 ஆம் திகதி பாகிஸ்தானில் சியால்கோட் பகுதியில் கலகக் கும்பலால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு, கொலை செய்யப்பட்ட திரு. தியவடனகே தொன் நந்தசிறி பிரியந்த குமாரவின் சடலம் இன்று 06 ஆம் திகதி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை ஊடாக அரச செலவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

சடலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அவரது அடுத்த நிலை உறவினர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

வெளிநாட்டு அமைச்சு இந்த விடயத்தை ஒருங்கிணைத்து வருகின்றது.

பிரியந்த குமாரவின் மரணம் தொடர்பிலான விசாரணை அறிக்கை ஒன்றை வழங்குமாறு இஸ்லாமாபாத்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சிடம் கோரியுள்ளது.

## எனது கணவரது கொலைக்கு ...

பொறியியலாளர் பிரியந்த குமாரவின் மனைவி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தோடு, தனது கணவரின் மரணம் குறித்து பாகிஸ்தான் இலங்கை அரசாங்கங்கள் நேர்மையான முறையில் விசாரணையை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

செய்திகள் மூலமே அவர் கொடூரமான விதத்தில் கொல்லப்பட்டதை தாங்கள் அறிந்ததாகவும், அதன் பின்னர் இணையத்திலும் சம்பவம் குறித்து பார்த்ததாகவும் பிரியந்த குமாரவின் மனைவி தெரிவித்துள்ளார். மேலும் அவர் மிகவும் அமைதியான மனிதர் என தெரிவித்த பிரியந்த குமாரவின் மனைவி, குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதன் மூலம் தனது கணவருக்கும் தனது இரு பிள்ளைகளிற்கும் நீதியை வழங்குமாறு இரு நாடுகளினதும் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## குடும்பத்திற்கு...

கோட்டாபய ராஜபக்ஷவிடம் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தமது வருத்தத்தைத் தெரிவித்துள்ளார். இலங்கையரான பிரியந்த குமார தியவடனவின் கொலையுடன் தொடர்புடைய அனைத்துக் குற்றவாளிகளுக்கும் எதிராகச் சட்டத்தை நிலைநாட்டுவதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் தொலைபேசி மூலம் உரையாடிய பாகிஸ்தான் பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் நம்பிக்கை என்பன ஒரு போதும் பாதிப்படைய இடமளிக்கப்படமாட்டாது என தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த செயலுடன் தொடர்புடைய அனைத்து காணொளி காட்சிகளும், தகவல்களும் தற்போது பாகிஸ்தான் பாதுகாப்புப் பிரிவினரால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

## உயிரிழந்தவரின்...

பேஸ்புக் பக்கத்தில் காணொளி ஒன்றை வெளியிட்டு, தனது சகோதரர் கொல்லப்பட்ட காட்சிகள் அடங்கிய காணொளிகளை பகிர்வதை நிறுத்துமாறு ஊடகங்கள் மற்றும் சமூகவலைத்தள பயனாளிகளிடம் கோரியுள்ளார்.

மேலும், தனது சகோதரரின் கொலை தொடர்பான காணொளிகள் சமூகவலைத்தளங்களில் பரவி வருவது தனது குடும்பத்திற்கும், குறிப்பாக பிரியந்தவின் மனைவிக்கும், அவரது இரு பிள்ளைகளுக்கும் பாதிப்பையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்காரணமாக, ஏற்கனவே பகிரப்பட்டு வரும் காணொளிகளை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்குமாறு சமூகவலைத்தளங்களுக்கு பொறுப்பான அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரத்தம் சிந்திய விடயங்களை ...

முடியாவிட்டாலும் மறந்து அதற்கு மன்னிப்புக் கொடுத்து தற்போது உள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க முடியும் என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும் என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு, புலம்பெயர்ந்தவர்கள் தம்முடன் மீண்டும் இணைந்து கைகோர்க்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் 2023ஆம் ஆண்டு இடம்பெறும் என தெரிவித்த சம்பிக்க, அந்த நேரத்தில் நேர்மையான துஷ்பிரயோகத்திற்கு எதிராக செயற்படுகின்ற ஒருவர் களமிறக்கப்படுவார் எனவும் தெரிவித்துள்ளார்.

## 52 போலி 1000 ரூபா... (03 ஆம் பக்கத் தொடர்)

நோட்டுகள் ஐம்பதை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி சந்தேக நபர்கள் 35 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் ரங்கல பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை நேற்றையதினம் மேலதிக விசாரணைகளுக்காக குற்றத் தடுப்பு விசாரணை திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.(ஸ)

## பாகிஸ்தானில் இலங்கையர்... (03 ஆம் பக்கத் தொடர்)

அத்தோடு இச்சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் அரசு உடனடியாக பொறுப்பு கூற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும் காட்டுமிராண்டித்தனமான செயலை வன்மையாகக் கண்டிப்பதோடு குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டு என இராஜாங்க அமைச்சர் மேலும் கேட்டுக்கொண்டார்.

## நீதிமன்றங்களின்.. (03 ஆம் பக்கத் தொடர்)

நிர்வாகம் குடும்ப விடயத்தில்தான் என்பதாகவே,இஸ்லாத்தின் சட்டத்துக்கு பொருள்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டில் எது நடந்தாலும் முஸ்லிம்களின் தனியார் சட்டத்தை குறைகூறுவதற்கென்றே ஒரு கூட்டம் ஓடித் திரிகின்ற காலமிது.இதைத் தீர்ப்பதில்,அரசியல் தலைமைகளுக்கும் ஆன்மீகத் தலைமைகளுக்கும் இடையில் ஏற்பட்ட இழுபறிகள்தான்,இன்று குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்த நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. நான், நீதியமைச்சராக இருந்த காலத்திலும் இந்தப் பிரச்சினையை தீர்க்க முயற்சிக்கப்பட்டு 19 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

## மனுஷ நாணயக்காரவுக்கு ...

வகையில் செயற்பட்டதாக தெரிவித்து இந்த கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் பக்கசார்பற்ற விசாரணை நடத்தி, இவ்வாறான விடயம் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியுடன் டுபாயில் ...

இராச்சியத்தில் இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டேன் என இம்ரான்கான் டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

100 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிற்கு எதிராக சட்டத்தின் அடிப்படையில் முழுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தேன் என இம்ரான்கான் இதன்போது தெரிவித்துள்ளார்.

## உயிரிழந்தோரது ...

மாவட்ட வைத்தியசாலையில் சனிக்கிழமை இரவு (04) உயிரிழந்துள்ளதாக பொலிஸார்தெரிவித்தனர். இவ்வாறு உயிரிழந்த பெண் கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான சக்கரிய்யா காலிஸா (42) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கையரின்...

கொலையைக் கண்டித்ததுடன், இந்த சம்பவத்திற்காக மன்னிப்பு கோரும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

மதத்தை அவமதித்த குற்றச்சாட்டில் பிரியந்த குமார என்ற இலங்கையர் கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தானில் கொடூரமாகத் தாக்கப்பட்டு எரித்து படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் பல பாகிஸ்தானியர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மனிதாபிமானமற்ற இந்த சம்பவத்திற்கு அவர்கள் தங்கள் டுவிட்டர் கணக்குகளில் இலங்கையிடம் மன்னிப்பு கோரியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'ஒமிக்ரோன்' வைரஸால்...

ஒமிக்ரோன் வைரஸ் கால் பதித்து விட்டது. இந்தியாவில் கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் 4 பேர் ஒமிக்ரோன் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஒமிக்ரோன் வைரஸால் ஆபத்திலுள்ள நாடுகள் பட்டியலில் தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து, பிரேசில், போட்ஸ்வானா, சீனா, மொரிஷியஸ், நியூசிலாந்து, ஜிம்பாப்வே, சிங்கப்பூர், ஹாங்காங், இஸ்ரேல் ஆகிய நாடுகளும் உள்ளன. அதன்படி, ஆபத்தில் உள்ள நாடுகளில் இருந்து இந்தியா வந்தடைந்த 15 பேர், நாட்டின் தலைநகரில் உள்ள எல்.என்.ஜே.பி. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஒன்பது பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியாகிவிட்டது.

இவர்களுடன் அறிகுறிகள் உள்ள மற்றவர்களின் மாதிரிகள் ஒமிக்ரோன் தொற்று சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அம்மருத்துவமனையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். மேலும், புதிய விதிமுறையின்படி, ஆபத்தில் உள்ள நாடுகளில் இருந்து இந்தியா வரும் பயணிகளுக்கு கொரோனா சோதனைகள் கட்டாயம் எடுக்கப்படுகிறது. அதன் முடிவுகள் வந்த பின்னரே அவர்கள் விமான நிலையத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுகின்றனர்.

## 30 மில். பெறுமதியான ...

சுங்க போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து இலங்கை வர்த்தகர் ஒருவரினால் இந்த போதைப்பொருள் கொண்டுவரப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் பிரதி சுங்கப் பணிப்பாளர் சுதத் சில்வா தெரிவித்துள்ளார். அவரிடம் இருந்து 1.5 கிலோ ஐஸ் போதை பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. சந்தேக நபர் கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

## எமக்கு 35,000...

ஏனைய பலரை போல துயரத்தில் சிக்குண்டுள்ளேன் என குறிப்பிட்டுள்ள அவர், அவமானம் தாங்காமல் வெட்கி தலைகுனிகின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள இலங்கை கண்தான அமைப்பின் முக்கிய உறுப்பினரான அவர் அந்த அமைப்பிற்கு எழுதியுள்ள கடிதத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

சாமா டிஜிட்டலிற்கு கருத்து தெரிவித்துள்ள அவர், இலங்கை 83,200 விழிவெண்படலங்களை உலகின் பல நாடுகளிற்கு தானம் செய்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இவற்றில் பெருமளவானவற்றை பாகிஸ்தானே சுமார் 40 வீதத்தினை பெற்றுக்கொண்டுள்ளது என தெரிவித்துள்ள அவர், 1967 முதல் கண்தான சங்கம் பாகிஸ்தானிற்கு 35,000 விழிவெண்படலங்களை தானம் செய்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எங்களிற்கு கண்களை தானம் செய்தது. நாங்கள் பார்வையை இழந்துவிட்டோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## பிராந்திய நாடுகளுக்கிடையே ...

ஏற்பட்டுள்ளது. பொருளாதாரச் செயற்பாடுகளின் மந்தகதியால், உலகளாவிய சுற்றுலா, வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்ற கடுமையான சவால்களை எதிர்கொண்டுள்ளன என்று தெரிவித்த ஜனாதிபதி , அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு வல்லரசு நாடுகளால் வழங்கப்படும் ஒத்துழைப்புகளால் மாத்திரமே, அவ்வாறான சவால்களை எதிர்கொள்ள முடியும் என்றார்.

அனைத்துப் பிரஜைகளுக்கும் தடுப்பூசி ஏற்றப்படும் வரையில், கொவிட் – 19 தொற்றுப் பரவல் இல்லாமல் போகப்போவதில்லை என்று தெரிவித்த ஜனாதிபதி , அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு, வல்லரசு நாடுகள் உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

உலகளாவிய தொற்றுப் பரவலைத் தடுக்கும் வேலைத்திட்டத்துக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தலைமைத்துவம் வழங்கி வருகின்ற போதிலும், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளின் பொருளாதார மீட்சிக்கு, எந்தவோர் உலக அமைப்பும் உதவ முன்வரவில்லை. தொற்றுப் பரவலென்பது, வறிய மற்றும் வல்லரசு நாடுகளை ஒரே விதத்தில் பாதிப்படையச் செய்திருப்பினும், விகிதாசாரப் பாதிப்பின் சுமைகளை வறிய நாடுகளே தாங்கிக் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டுக் கடனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரங்களுக்கு இது மிகவும் கடினமான சந்தர்ப்பமாகுமென்றார்.

தொற்றுநோய் அனுபவத்தின்படி, ஒரு நாட்டில் உள்ள பாதகமான நிலைமைகள், விரைவாக பிராந்தியத்துக்கும் இறுதியில் உலகம் முழுவதும் பரவக்கூடும். அதனால் தான், தொற்றுநோய்கள், பொருளாதாரம் அல்லது சூழலியல் விடயங்களில் நாடுகளைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க பிராந்தியத்தில் உள்ள நாடுகள் மற்றும் ஒட்டுமொத்தமாக உலகம் முழுவதும் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது. தொற்றுநோய்கள், பொருளாதாரம் அல்லது சூழலியல் தொடர்பாக நாடுகளைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க பிராந்தியத்தில் உள்ள நாடுகள் மற்றும் ஒட்டுமொத்தமாக உலகம் முழுவதும் இணைந்து செயற்பட வேண்டும். மனிதகுலம் எதிர்கொள்ளும் மிகவும் கடினமான சவால்களில் ஒன்றாக தற்போதைய காலநிலை நெருக்கடி காணப்படுகிறது என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

மனிதக் கடத்தல்களைக் கட்டுப்படுத்தவும், இவ்வாறானதொரு நடவடிக்கையும் ஒருங்கிணைவும், ஒத்துழைப்புமே அவசியமாகவுள்ளது என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு தற்போது பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ள மத அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளை முறியடிப்பதற்கும், இவ்வாறான ஒருங்கிணைப்பே தேவைப்படுகின்றது என்றும் இது தொடர்பில் மிகக் கவனமாகக் கண்காணித்து இல்லாதொழிக்கவில்லையாயின், அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதம் போன்றன சுலபமாக இன்னுமோர் இனத்தை நோக்கிச் செல்ல வாய்ப்புள்ளது என்றும் குறிப்பிட்டார்.

18 நாடுகளைச் சேர்ந்த வெளிவிவகார அமைச்சர்கள், 40க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த இருநூறுக்கும் அதிகமான பிரதிநிதிகள் உள்ளிட்ட பெருமளவிலானோர், இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர்.

## தீர்வு தொடர்பாக தங்களுடன்...

சர்வதேசத்திற்கு கொண்டுசெலப்பட்டுள்ள விவகாரம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நெடுஞ்சாலைகள் அமைச்சு,போக்குவரத்து அமைச்சு ,தொழில் அமைச்சு, மற்றும் 3 இராஜாங்க அமைச்சுக்கள் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தூதுக் குழு அண்மையில் அமெரிக்கா,கனடா மற்றும் பிரித்தானியாவிற்கான விஜயத்தை மேற்கொண்ட நிலையில் அது குறித்த செய்திகள், ஊகங்கள் விமர்சனங்கள் வெளிவந்துள்ளன. எமது உள்ளக விவகாரங்ள் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளன

ஒஸ்லோ உடன்படிக்கையின் பின்னரும் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறைமையிலான அதிகார பகிர்வு குறித்து வெளிவிவகார அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போதும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மூலமாக அதிகார பரவலாக்கல் குறித்து பேராசிரியர் திஸ்ஸ விதாரண குழு பரிந்துரைத்துள்ளது.

மத்தியின் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும், தலையீடுகள் இல்லாத வகையில் அவை அமைய வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் இன்று வரை இந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

நல்லிணக்கத்தை உருவாக்கும் தீர்வு இதுவென இந்தியாவிற்கும், சர்வதேசத்திற்கும் தொடர்ச்சியாக வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த சர்வதேச தரப்பிற்கும் ஒரு வாக்குறுதியை வழங்கிவிட்டு இன்று அதில் இருந்து மாறுபட்டு, ஒரு நாடு ஒரு சட்டம் என்ற சுலோகத்துடன் இயங்க முயற்சிக்கின்றது. ஒரே நாடு, ஒரே சட்டம் யதார்த்தம் என்றால் மத்தியின் எந்தவொரு அதிகாரமும் மாகாணங்களுக்கு வழங்கப்படாது.

அவ்வாறான நிலையில் இந்த கொள்கையில் மாகாணங்கள் எவ்வாறு அதிகார பரவலுடன் செயற்பட முடியும். தமிழ் தேசிய கூட்டமைப்பு மக்களின் மக்களின் பெரும்பான்மை ஆதரவை பெற்றுள்ள கட்சி என்ற ரீதியில் எமது மக்களின் நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திடம் கொண்டு சேர்த்துள்ளோம். இந்த நெருக்கடிக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுத்து எமக்கு உதவ வேண்டும் . என்றார்.

## விலைமனுக்களுக்கான அழைப்பு – 2022

**சேதன பசளை உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் வழங்கல் ஒழுங்குபடுத்தல் மற்றும் நெல் மற்றும் தானிய இயற்கை உணவு மரக்கறி, பழவகை, மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய அமைச்சு**

தம்புத்தேகம விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் முகாமைத்துவ பொறுப்பினால் தம்புத்தேகம விசேட பொருளாதார நிலையத்திற்கு பின்வரும் சேவைகளை வழங்கும் இடத்திற்காக அனுராபுரம் மாவட்டத்தினுள் நிரந்தர வதிவைக் கொண்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. தம்புத்தேகம விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் உள்வரும் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்
02. சிற்றுண்டிச்சாலை 01
03. சிற்றுண்டிச்சாலை 02
04. சிற்றுண்டிச்சாலை 03

இது தொடர்பிலான மேலதிக விபரங்களை பின்வரும் இணையதளத்தில் அல்லது பொருளாதார மத்திய நிலையத்தின் முகாமையாளரிடமிருந்து 025-2275171 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

https://www.thaambuttegamadec.com/app/public/? - விசேட பொருளாதார மத்திய நிலையம் - தம்புத்தேகம

https://www.thaambuttegama.ds.gov.lk/index.php/en/ - பிரதேச செயலகம் - தம்புத்தேகம

**கட்டளையின் பிரகாரம்,**
**சுமித் கே. சோமரத்ன,**
**பிரதேச செயலாளர் (தம்புத்தேகம) / பெறுகைக் குழுத் தலைவர்,**
**தம்புத்தேகம விசேட பொருளாதார மத்திய நிலைய முகாமைத்துவப் பொறுப்பு,**
**முகாமைத்துவ அலுவலகம்,**
**தம்புத்தேகம.**
**2021-12-06.**

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2021 டிசம்பர் 08ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 66,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122C114** | LKA18222F106** | LKA36422L090** | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 18,000 | 24,000 | 24,000 | 66,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2021 டிசம்பர் 08 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2021 டிசம்பர் 10 |
| வழங்கப்படும் திகதி | : 2021 டிசம்பர் 10 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2021 டிசம்பர் 08 புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

** வங்கி விடுமுறை நாளொன்றில் முதிர்ச்சி வருகின்றவிடத்து திறைசேரி உண்டியல் முதிர்ச்சிகளுக்கு புதிய விடுமுறை விதிமுறை ஏற்புடையதாகும் அதாவது 2022 இலிருந்து செயற்பாட்டுக்கு வரும், கொடுப்பனவுகள், உடனடியாகத் தொடர்ந்து வருகின்ற அலுவல் நாளன்று மேற்கொள்ளப்படும்.

**எம்.இசட்.எம்.ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
தொழில்நுட்ப அமைச்சு
**e-NIC செயற்திட்டம்**
**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்**

DRP

## விலைமனுக்கோரல் (IFB)

**DS-DRP அலகுகளுக்காக 662 எண்ணிக்கையிலான இணையப் படக்கருவிகளை (Web Cameras) கொள்முதல் செய்தல்**

**IFB இலக்கம் : DRP/e-NIC/PRO/2021/33**

1. e-NIC **செயற்றிட்டம் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லையில்** அமைந்துள்ள செயற்றிட்ட கொள்முதல் குழுவின் தலைவரினால் DS-DRP அலகுகளுக்கு (பிரதேச செயலக அலுவலகங்களின் DRP அலகு) 662 எண்ணிக்கையிலான இணையப் படக்கருவிகளை (Web Cameras) கொள்முதல் செய்வதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
2. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.
3. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் சிரேஷ்ட வழங்கல் அதிகாரி, e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தில் **காரியாலய வேலை நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 03.00 மணி வரை** தொலைபேசி இல.011-2874626 அல்லது enic.drp@gmail.com மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் **07.12.2021** ஆம் திகதி தொடக்கம் **27.12.2021** ஆம் திகதி வரை e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், **"B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** காரியாலயத்தில் எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி மனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
4. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **07.12.2021** ஆம் திகதியிலிருந்து **27.12.2021** ஆம் திகதி வரை **காரியாலய வேலை நாட்களில் 09.00 மணியிலிருந்து 15.00 மணி** வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூபா.5,000.00 கட்டணத்துடன்** (ரொக்கமாக செலுத்தப்பட வேண்டும்.) எழுத்து மூல விண்ணப்பத்தை திட்டப் பணிப்பாளர், e-NIC செயற்திட்டம், **ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** காரியாலயத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
5. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் (அசல் மற்றும் நகல்) **28.12.2021** ஆம் திகதி **14.00** மணித்தியாலங்களுக்கு முன் உருப்படி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். அல்லது வழங்கல் பிரிவு, **e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். **மனுக்கள் மனுக்கள் கோரப்படும் திகதியில் இருந்து அல்லது நீட்டிக்கப்பட்ட திகதியிலிருந்து 91 நாட்கள் வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.** காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
6. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் IFB எண் ஆகியவை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து மனுக்களுடனும் இலங்கையில் செயல்படும் எந்தவொரு உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்படும் **ரூபா.140,000/- (ஒரு இலட்சத்தி நாற்பதாயிரம்) காப்புறுதிப்பிணையுடன்** இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**
**திட்ட வழங்கல் குழு,**
**e-NIC செயற்திட்டம்**
**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**
**"B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய,**
**பத்தரமுல்லை.**
**06.12.2021**

## இலங்கை வங்கி

### ஏல விலை கோரல்

பின்வரும் உருப்படிகளை வழங்கி, விநியோகித்து, பொருத்தி மற்றும் உபகரணங்களைப் பராமரித்தல் என்பவற்றுக்காக இலங்கையின் முதன்மை உற்பத்தியாளர்கள் / விநியோகத்தர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| ஏல விலை கோரல் இல. | P/PROC/2021/121 |
| பண்டம் / சேவைகளின் விபரம் | இலங்கை வங்கிக்கான 500 இலத்திரனியற் தரவுப் பற்றுகைச் சாதனங்கள் (POS) |
| மீளளிக்கப்படாத ஏல விலைக் கட்டணம் | ரூபா.23,760/= [ரூபா.22,000/- + ரூபா.1,760/- (8% VAT)] |
| சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏலமுறியின் பெறுமதி | ரூபா. 1,500,000/= |
| ஏல விலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித்திகதியும் நேரமும் | 2021.12.23 1400 மணி வரை |
| ஏல விலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும் | 2021.12.27 1000 மணி வரை |

1. **ஏல விலைகூறலை கவனத்திற்கொள்ளும் பொருட்டு விலைகூறுவோர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.**
   i) கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் இலத்திரனியற் தரவுப் பற்றுகைச் சாதனங்களை விற்றதன் மூலம் பெற்ற அண்ணளவான வருடாந்தப் பணப் புரள்வானது ரூபா. 250 மில்லியனாகக் காணப்பட வேண்டும். (2020/21, 2019/20 மற்றும் 2018/19).
   ii) கடந்த 05 ஆண்டுகளாக குறைந்தபட்சம் 2500 இலத்திரனியற் தரவுப் பற்றுகைச் சாதனங்களை வழங்கி, பொருத்தி, செயற்படுத்தி மற்றும் தற்பொழுதும் பராமரித்துக்கொண்டிருக்கவும் வேண்டும் (2016.01.01 முதல் 31.10.2021 வரை). கடந்த 05 ஆண்டுகளாக நிகழ்த்தப்பட்ட விற்பனைகளின் ஆவண ஆதாரமானது வழங்கப்பட வேண்டும் (2016.01.01 முதல் 31.10.2021 வரை).
2. விலை கூறல் ஆவணங்களை, இலங்கை வங்கியின் தலைமையகக் காரியாலயத்தின் 14ஆம் தளத்திலுள்ள, சொத்துக்களும் சேகரிப்பும் பகுதியில், கடமை தினங்களில் 0900 மணி முதல் 1400 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலை கூறல் விண்ணப்பங்களை மேலே குறிப்பிட்டுள்ளவாறு கேள்விக்குப் பொருத்தமான பெறுமதிக்குரிய தொகையை, 2022.04.25 வரை செல்லுபடியாகக் கூடியவாறு இலங்கை வங்கியினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து (இலங்கை வங்கி அல்லாத) பெறப்படும் வங்கி உத்தரவாதத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏல பிணை முறிக்குப் பதிலாக, பணவைப்புகள் வங்கிக் கொடுப்பனவுகட்டளை, வங்கி உடனுண்டியல் என்பனவும் ஏற்றுக் கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
4. ஏல விலை கூறல்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் விலை கூறல்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
5. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா விலை கூறல்களையும் நிராகரிக்கும் அல்லது விலை கூறலின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
6. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2434786


திகதி 03.12.2021 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4605
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,370,250.00
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 6 0 0 1 4 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,160,763.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் : 2900
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,868,520.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 40 46 51 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,885,890.56

Mega Power மெகா பவர் கோடி 10 — சீட்டிழுப்பு இலக்கம் 953
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,248,580.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 156,956,065.20
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Z சுப்பர் இலக்கம் 05 வெற்றி இலக்கங்கள் 58 66 70 75

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 635
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,945,940.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 07 12 35 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,288,900.40

சுபிரி வாசனா — சீட்டிழுப்பு இலக்கம் : 1641
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,334,460.00
சுப்பர் இலக்கம் 10 வெற்றி இலக்கங்கள் 05 39 44 53
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,157,944.40

03.12.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 620,736
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரு. 26,767,750.00
ரு. 2,000,000.00 பரிசு 01 ரு. 1,000,000.00 பரிசு 02
ரு. 100,000.00 பரிசு 30

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

திகதி 04.12.2021 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4606
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,688,030.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 4 4 3 4 1 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,866,635.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் : 2901
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,153,360.00
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 08 19 31 41
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,243,184.96

Mega Power மெகா பவர் கோடி 10 — சீட்டிழுப்பு இலக்கம் 954
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,861,040.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 157,245,303.60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து U சுப்பர் இலக்கம் 10 வெற்றி இலக்கங்கள் 16 39 57 73

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 636
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,931,320.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 05 37 56 64
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,441,025.20

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA — சீட்டிழுப்பு இலக்கம் :1176
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,141,100.00
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 9 6 5 1 6 6
இப்பொழுது ஜாதிக சம்பத புதன் மற்றும் சனி கிழமைகளில் மாத்திரமின்றி திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் உங்களுக்கு அதிர்ட்டத்தை கொண்டு வருகின்றது.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,734,263.20

04.12.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 555,887
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரு. 22,774,850.00
ரு.2,000,000.00 பரிசுகள 01 ரு. 100,000.00 பரிசுகள 27

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01





## இலங்கை துறைமுக அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக்கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/20/PT/04/057 | Gold Coins - 22KT with SLPA Logo | 789,500.00 | 12,500.00 | 03-01-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2021 டிசம்பர் 06ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2370443**

# இலங்கை போக்குவரத்து சபை (ஸ்ரீ லங்கம)

கொழும்பு, கண்டி, சப்ரகமுவ, கம்பஹா மற்றும் நுவரெலியா பிராந்தியங்களின் டிப்போக்கள் மற்றும் யட்டிநுவர, களுதாவல பிராந்திய வேலைத்தளங்களில் வருடாந்தம் பாவனையிலிருந்து அகற்றப்படும் சிதைவடைந்த பதார்த்தங்களை ஒருவருட காலத்தினுள் நிலைபேரான விலையின் அடிப்படையில் விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல்.

**விலைமனு இல. : SLTB/TS/SUI/2021-I**

கொழும்பு 05, கிருள வீதி, இல. 200 இலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் பெறுகைக்குழுத் தலைவரினால், கொழும்பு, கண்டி, சப்ரகமுவ, கம்பஹா நுவரெலியா பிராந்தியங்களின் டிப்போக்கள் மற்றும் யட்டிநுவர, களுதாவல பிராந்திய வேலைத்தளங்களில் வருடாந்தம் பாவனையிலிருந்து அகற்றப்படும் பின்வரும் சிதைவடைந்த பதார்த்தங்கள் (லொட்) முன்வரும் ஒருவருட காலத்தினுள் நிலைபேரான விலையின் அடிப்படையில் கொள்வனவு செய்து அகற்றிக்கொள்வதற்காக 2021.12.28 அன்று மு.ப. 10.30 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனுத்திறத்தல் அன்றைய தினம் மு.ப. 10.30 இற்கு ஸ்ரீ லங்கம பிரதான அலுவலகத்தின் பெறுகைக் குழுப் பிரிவில் நடைபெறும்.

| தொடர் இலக்கம் | விபரம் | பரீட்சித்தலுக்கான அமைவிடம் | மீளளிக்கப்படும் பிணை வைப்பு ரூபா சதம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 01 | சிதைவடைந்த சீனச்சட்டி, சிதைவடைந்த உருக்கு, சிதைவடைந்த இரும்பு, சிதைவடைந்த அலுமினியம், சிதைவடைந்த பித்தளை, சிதைவடைந்த செப்பு, சிதைவடைந்த துனுகொல, சிதைவடைந்த வெண்களம், சிதைவடைந்த இரும்பு, சிதைவடைந்த இறப்பர்க் கலவை இரும்பு சிதைவடைந்த ஈயம் சிதைவடைந்த இறப்பர் கலவைப் பித்தளை, சிதைவடைந்த கிளச் பிளேட் (லைனர் உடன்) சிதைவடைந்த ரேடியேட்டர் கோர், சிதைவடைந்த ஜெக் சிதைவடைந்த முழுமையான இயந்திரங்கள். | கொழும்பு பிராந்திய டிப்போக்கள் | 200,000.00 | 2,500.00 |
| | | கம்பஹா பிராந்திய, டிப்போக்கள் மற்றும் பிராந்திய வேலைத்தளங்கள் | 200,000.00 | |
| | | கண்டி பிராந்திய டிப்போக்கள் மற்றும் பிராந்திய வேலைத்தளங்கள் | 200,000.00 | |
| | | சப்ரகமுவ பிராந்திய டிப்போக்கள் மற்றும் பிராந்திய வேலைத்தளங்கள் | 200,000.00 | |
| | | நுவரெலியா பிராந்திய டிப்போக்கள் மற்றும் பிராந்திய வேலைத்தளங்கள். | 200,000.00 | |

முன்வரும் ஒருவருட காலத்திற்கு கொள்வனவாளர் ஒருவர் அல்லது கொள்வனவாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத ரூபா 2,500.00 இற்கான வைப்புத் தொகையை இபோச பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)யிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் A/10 பற்றுச்சீட்டை இபோச பெறுகைக்குழுவின் செயலாளருக்குச் சமர்ப்பித்து இதற்கான விலைமனுப்படிவங்களைப் பின்வரும் முகவரியின் அலுவலகத்தில் 2021.12.06 முதல் 2021.12.27 அன்று 15.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி சிதைவடைந்த பதார்த்தங்களை அலுவலக நேரங்களில் மேற்படி அமைவிடங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை, கொழும்பு, கண்டி, சப்ரகமுவ, கம்பஹா, நுவரெலியா மற்றும் பிராந்திய அலுவலகங்களில் மற்றும் பிராந்திய வேலைத்தளங்களின் கைத்தொழில் பொறியியலாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அதாவது 2021.12.27 அன்று 15.00 மணிக்கு முன்னர் ஒவ்வொரு பிராந்தியங்களிற்கும் செலுத்தப்பட வேண்டிய ரூபா 200,000.00 இற்கான மீளளிக்கப்படும் பிணைத் தொகையை இ.போ.ச. பிரதி பொது முகாமையாளரிடம் (நிதி) செலுத்திப் பெற்றுக்கொள்ளும் A-10 பற்றுச்சீட்டின் பிரதியொன்று விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுத் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**இலங்கை போக்குவரத்துச் சபை,**
**இல. 200, கிருள வீதி, கொழும்பு-05.**

**விசாரணைகள் : செயலாளர் - பெறுகைக்குழு, இ.போ.ச.**
**தொலைபேசி இல. : 011-2588457, 011-7706110, 011-7706111**

| | | |
|---|---|---|
| கொழும்பு | பிராந்தியப் பொறியியலாளர் | 077-1056302 |
| கம்பஹா | பிராந்தியப் பொறியியலாளர் | 077-1056502 |
| கண்டி | பிராந்தியப் பொறியியலாளர் | 077-1057002 |
| சப்ரகமுவ | பிராந்தியப் பொறியியலாளர் | 077-1057502 |
| நுவரெலியா | பிராந்தியப் பொறியியலாளர் | 077-1057402 |

# ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2022

## பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம்

### ஊவா மாகாணம்

2022ஆம் வருடத்திற்காக பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம், மாகாண கட்டிடப் பணிப்பாளர் அலுவலகம், மாகாண இயந்திரப் பொறியியலாளர் அலுவலகம் மற்றும் 05 பிராந்திய பொறியியல் அலுவலகங்கள் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்தும் பிரிவுக்காக பின்வரும் பொருட்களை வழங்கும் சேவையைப் பெற்றுக்கொள்வற்காக உற்பத்தியாளர்கள், முகவர்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்கள், கிராமோதய சபைகள், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நபர்கள் இந்த நிறுவனத்தின் கீழ் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஊவா மாகாணத்தினுள் நிரந்தர வதிவைக் கொண்ட ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

பின்வரும் ஒவ்வொரு வழங்கலின் பொருட்டும் 750.00 ரூபாவும் மற்றும் அதற்கு மேலான ஒவ்வொரு வழங்கலுக்காகவும் 250.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்துதல் வேண்டும் என்பதுடன், அனைத்துக் கொடுப்பனவுகளும் ''பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்), பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம், பிங்அராவ, பதுளை'' எனும் பெயரில் வழங்கப்படும் அஞ்சல் அலுவலகம் பதுளை எனக் குறிப்பிடப்பட்ட காசுக் கட்டளை மூலம் அல்லது அலுவலகத்திற்கு சமுகம் தந்து ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் ''பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்), பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம், பிங்அராவ, பதுளை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2021-12-30ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் அத்தினத்திற்கு முன் பின்வரும் முகவரிக்கு நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

| தொ. இல. | வழங்கல் / சேவைகள் |
|---|---|
| | **நிர்மாண சேவைகள்** |
| 01. | திருத்தவேலைகள் மற்றும் நிர்மாண சேவைகள் (CIDA பதிவுத் தரத்தைக் குறிப்பிடுங்கள்) |
| | **வழங்கல் சேவைகள்** |
| 02. | அனைத்து அலுவலகக் காகிதாதிகளை வழங்குதல் |
| 03. | அனைத்து அலுவலக உபகரணங்கள் (மரம், உருக்கு, பிளாஸ்டிக், நாரிழை, இரும்பு) |
| 04. | திரைச்சீலைகள், தரை விரிப்புகள், மேசை விரிப்புகள் வழங்குதல் |
| 05. | கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள், ரோணியோ, புகைப்படப் பிரதி இயந்திரங்கள் |
| 06. | இலத்திரனியல் வகுதிக்குள் அடங்கும் அனைத்துப் பொருட்களும் (ஓவர்ஹெட் புரஜெக்டர், கமரா, வீடியோ கமரா, மல்டிமீடியா புரஜெக்டர், குளிர்சாதனப்பெட்டி, வளிச்சீராக்கி இயந்திரம்) |
| 07. | அனைத்து நிர்மாண இயந்திரம் மற்றும் வாகனங்களுக்குத் தேவையான டயர், டியூப் மற்றும் கொலர், பெட்டறிகள் |
| 08. | மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் / நீர்ப் பம்பிகள் |
| 09. | அனைத்து வகையான கட்டிடப் பொருட்கள், நீர்க் குழாய்கள், அரிந்த மரம், நிறப்பூச்சு வகைகள் மற்றும் ஏனைய பொருட்கள் |
| 10. | அனைத்து வகையான துப்புரவேற்பாட்டுப் பொருட்கள், துப்புரவேற்பாட்டு இரசாயனப் பொருட்கள், குப்பைகளைச் சேகரிக்கும் பைகள், பொலித்தீன் உறைகள், இரசாயனப் பொருட்கள் மற்றும் இரசாயன உபகரணங்கள் மற்றும் கால்துடைப்பம் |
| 11. | அனைத்து அச்சு வேலைகள் (பதாகை, அறிவித்தல் பலகை) இறப்பர் முத்திரைகள், பிளாஸ்டிக் பெயர்ப் பலகைகள் மற்றும் திணைக்கள அடையாள அட்டைகள் |
| 12. | சகல வகையான தகவல் தொழில்நுட்ப சேவைகள் (மென்பொருள் வடிவமைப்பு, கணனி வலையமைப்பிடல், இணையதளங்களை அமைத்தல் மற்றும் இயைபுடைய ஏனைய வேலைகள்) |
| | **ஏனைய சேவைகள்** |
| 13. | மின்சார கம்பியிணைப்பு, மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் நீர்க்குழாய், நீர்ப்பம்பி திருத்தவேலைகள் |
| 14. | வளிச்சீராக்கி, குளிர்சாதனப் பெட்டி மற்றும் உறைநிலை குளிரூட்டிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் |
| 15. | கணனி, தொலைநகல் இயந்திரம் மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள் |
| 16. | அனைத்து வகையான டோனர்கள் |
| 17. | வாகனங்களின் தகர வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள், நாரிழை சேவை மற்றும் குஷன் இடுதல், கார்பட் வேலைகள், ஸ்டிக்கர், இலக்கத் தகடுகள் |

**நிபந்தனைகள்**

1. உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கல் மற்றும் சேவைகளைச் செய்யாதவர்கள் மற்றும் இரண்டு முறைகளுக்கு மேல் பதிலளிக்காத வழங்குநர்களை பதிவேட்டிலிருந்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
2. அனைத்து விண்ணப்பங்களும் 2021-12-30ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அல்லது பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்திற்கு வருகை தந்து சமர்ப்பித்தல் வேண்டும்.
3. பொருட்களைக் கொள்வனவு செய்யும் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமையை நிறுவனத்தின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் அல்லது பதிவு செய்யாமல் விடும் அதிகாரத்தை பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**பொறி. கே.ஏ.பீ. செனெவிரத்ன,**
**பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்),**
**பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம்,**
**பிங்அராவ, பதுளை.**
**2021-11-30**
**தொலைபேசி இலக்கம்: 055-2222217/ 055-2222218 தொலைநகல் இல. 055-2222218**

## ஒப்பந்தக்காரர்கள் / வழங்குநர்களைப் பதிவு செய்தல்

01. விண்ணப்பதாரரின் பெயர்: ................................................
02. வியாபாரியின் பெயர் மற்றும் முகவரி: ................................................
03. பதிவாகுவதற்கு விரும்பும் பொருள்: ................................................
04. சேவை இலக்கம்: ................................................
05. வியாபாரம் பதிவு செய்யப்பட்ட இலக்கம் மற்றும் திகதி: ................................................
06. தொலைபேசி இலக்கம்:..................... தொலைநகல் இலக்கம்:............................... மின்னஞ்சல் முகவரி:...................
07. 2021ஆம் வருடத்தில் இதுபோன்ற சேவைகள் வழங்கப்பட்டுள்ளதா? ................................................
08. இந்த நிறுவனத்திற்கு மேற்குறிப்பிடப்பட்ட வேலைகளுக்காக கடன் வசதி வழங்குவதற்கான நிபந்தனைகள்:...................
09. இந்த நிறுவனத்திற்கு மேற்குறிப்பிடப்பட்ட வேலைகளுக்காக பெற்றுக்கொடுக்கக்கூடிய போக்குவரத்து வசதிகள்:............
10. வழங்குவதற்கு உத்தேசிக்கும் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான நிபந்தனைகள்:................................
11. வெட் வரி இலக்கம்:................................................
12. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் ''CIDA'' பதிவு செய்யப்பட்டிருந்தால் நிதி எல்லை, தரம் மற்றும் பதிவிலக்கம் (நிர்மாண வேலைகள் மற்றும் வழங்கல் சேவைகளுக்காக மட்டும் உரித்துடையதாகும்.) ................................

| பொருட்கள் வழங்குதல் / சேவை வழங்குதல் | உருப்படியின் இலக்கம் | காசுக் கட்டளை / பற்றுச்சீட்டு இலக்கம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

13. இந்த நிறுவனத்திற்கு கடன் வசதியை வழங்குவதற்கான நிபந்தனையான பத்திரிகை விளம்பர நிபந்தனைகளின் கீழ் குறித்த சேவை மற்றும் வழங்களைச் செய்வதற்கு கட்டுப்படுவதாக நான் உறுதி கூறுகிறேன்.

.......................................... ..........................................................
திகதி பணிப்பாளர் / முகாமையாளர்

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## வர்த்தக அமைச்சு

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2022

2022ஆம் ஆண்டில் வர்த்தக அமைச்சுக்குப் பின்வரும் பதார்த்தங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக 2021.12.06 முதல் 2021.12.27 வரை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- எழுது கருவிகளை வழங்கல்
- அனைத்து வகையான சனிடைஸர் மற்றும் மாஸ்க் வழங்கல்
- அச்சு நடவடிக்கைகள் மற்றும் முத்திரைகளை வழங்கல்
- குடிநீர் போத்தல்களை வழங்கல் (15 லீட்டர் மற்றும் 350 மில்லி லீட்டர்)
- கணனி மற்றும் கணனி மென்பொருள்கள்
- கணனி அச்சுப் பொறிகள், டோணர் மற்றும் அவை சார்ந்த சேவைகள்
- தொலைநகல் இயந்திரங்கள், நிழற்படப்பிரதி இயந்திரங்கள், நகல் பிரதியிடல் இயந்திரங்கள் வழங்கல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகள்
- கட்டிடங்களைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்
- அலுவலக அறைகளைப் பிரித்தல் நடவடிக்கைககள்
- உள்ளகக் கட்டமைப்பு நடவடிக்கைகள் (Interior Design)
- கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் மற்றும் ஆலோசணைச் சேவைகள்
- மரச்சாமான்கள் உட்பட அலுவலக உபகரணங்கள்
- வதிவிட உபகரணங்கள்
- அலுவலக உபகரணங்களைப் பராமரித்தல் மற்றும் சேவை நடவடிக்கைகள்
- உணவு பானங்களை வழங்குதல் மற்றும் அவை சார்ந்த சேவைகள் (Catering Service)
- வளிச்சீராக்கி இயந்திரங்கள் மற்றும் வளிச்சீராக்கி இயந்திரங்களைப் பராமரித்தல்
- சகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள்
- பாதுகாப்புச் சேவைகளை வழங்கல்
- பண்டங்களை ஏற்றி இறக்குதல்
- வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்கல்
- வாகன டயர்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
- வாகன சேவை நடவடிக்கைகள் மற்றும் புதுப்பித்தல்கள்
- வாகனக் காப்புறுதி நடவடிக்கைகள்

நிபந்தனைகளுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களை மிளளிக்கப்படாத ரூபா 2,500.00 இற்கான தொகையைச் செலுத்தி இலக்கம் 492, ஆர்.ஏ.டீ. மெல் மாவத்தை, கொழும்பு -03 இன் நான்காம் மாடியில் கணக்காளரிடம் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய தேவையான ஆவணங்களை 2021.12.27 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது வாரவேலை நாட்களில் பி.ப. 4.00 இற்கு முன்னர் நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும்.

**செயலாளர்,**
**வர்த்தக அமைச்சு,**
**இல. 492, ஆர்.ஏ.டீ. மெல் மாவத்தை,**
**கொழும்பு -03.**

2021.12.03

**தொலைபேசி இல. 011 3680752**
**மின்னஞ்சல்: info@trademin.gov.lk**




# மலையக முஸ்லிம் பாடசாலைகளுக்கு ஆளுநர் முஸம்மில் விஜயம்



(மாவத்தகம தினகரன் நிருபர்)

மலையக முஸ்லிம் கவுன்சிலின் யூ. எம். சி வேண்டுகோளுக்கிணங்க, பாடசாலைகளின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராய ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில்

கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

பதுளை அல்அதான் மகா வித்தியாலயம் மற்றும் பதுளை அல் ஹிக்மா ஆரம்ப பாடசாலைகளின் தற்போதைய நிலை தொடர்பில், இதன்போது அவர் ஆராய்ந்தார்.

ஊவா மாகாண முஸ்லிம் அதிபர்கள் சங்கம் மற்றும் மலையக முஸ்லிம் கவுன்சில் ஆகியவற்றின் அழைப்பின் பேரில், மேற்கொள்ளப்பட்ட இந்த விஜயத்தில், பாடசாலைகளின் தற்போதைய கல்வி வளர்ச்சி, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இடப்பற்றாக்குறைகள் தொடர்பில் இரு பாடசாலைகளின் அதிபர்களும் விளக்கமளித்தனர்.

இதன்போது, குறித்த இரு பாடசாலைகள் தொடர்பிலும் முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்விப்பணிப்பாளர் ஆகியோருக்கு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

இந்த விஜயத்தில், ஆளுநரின் செயலாளர் எம்.எம். விஜயநாயக, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அபன்வெல, மாகாண கல்விப் பணிப்பாளர், மலையக முஸ்லிம் கவுன்சில் தலைவர் ஏ. எம். எம். முஸம்மில் மற்றும் உறுப்பினர்கள உள்ளிட்ட அதிகாரிகள், அல்அதான் மகா வித்தியாலய அதிபர் முஹம்மட் ஸரூக், அல்ஹிக்மா ஆரம்பப் பாடசாலை அதிபர் முஹம்மட் ரிஸ்வான் உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# எல்ல,கிலன்தோட்ட வீதி திறப்பு



(ஊவா சுழற்சி நிருபர்)

இ.தொ.கா.பிரதித் தலைவர், செந்தில் தொண்டமான் தோட்ட மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றி வருகிறார்.இதன் அடிப்படையில் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட எல்ல, கிலலின் தோட்ட இல.7 லயன் வீதி கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (03) இடம்பெற்றது.தோட்ட மக்கள், செந்தில் தொண்டமானை வரவேற்பதையும், அவர் நாடவை வெட்டி வீதியை திறந்து விடுவதையும் காணலாம்.

எல்ல பிரதேச சபை உறுப்பினர் பீ.மாணிக்க ராஜா உள்ளிட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

## சிவனொளிபாதமலை வீதி விகாரையின் உண்டியல் திருட்டு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை சிவனொளிபாதமலை வீதியில் அமைந்துள்ள, எல்லெ அராவ சந்தி விகாரை உண்டியல் உடைக்கப்பட்டுள்ளது.அதிலிருந்து பணத்தை திருடியதாக சந்தேகிக்கப்படுபவரும்

கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து சில்லறைக் காசுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள, சீ.சீ.டி.வி கெமராக்களின் உதவியுடன் சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர்.இந்நபர், போதை வஸ்துக்கு அடிமையானவர் என்றும் சந்தேகிக்கப்படுகிது.பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மாத்தளை மாநகர சபையில் பல்வேறு வைபவங்கள் ஏற்பாடு

(மாத்தளை சுழற்சி நிருபர்)



மத்திய மாகாண ஆளுநராக, லலித் யூ கமகே பதவி ஏற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, மாத்தளை மாநகர சபையால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மாத்தளை நகரில் உள்ள வீதிகளில் இருபக்கமும் நிழல் தரும் மரக்கன்றுகள் நடப்பட்டதுடன், மாத்தளை பௌத்த மந்திரி உட்பட மத வழிபாட்டு தலங்களுக்கு முக்கிய பங்களிப்பு செய்த மறைந்த, எதிரி வீரகுணசேன நினைவாக நகரின் வீதி ஒன்றுக்கு அவரின் பெயர் சூட்டப்பட்டது.

இந் நிகழ்வுகளில், பிரதம அதிதியாக கலந்து கொண்ட மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, புதிய பெயர் சூட்டப்பட்ட வீதியை வைபவ ரீதியாக திறந்து வைத்தார். மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான அருகிலுள்ள வீதியின் ஓரமாக வேப்ப மரக்கன்றுகளும் இதன்போது, நடப்பட்டது.

மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹன திசாநாயக்க, நாலக்க கோட்டகொட மாத்தளை மாநகர சபை முதல்வர் எஸ். பிரகாஷ் மற்றும் அமைச்சர் அமில நிரோஷன் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## சிறுவர்களின் பாதுகாப்பு கருதி

# நாவல தோட்ட முன்பள்ளியில் பாதுகாப்பு வேலி நிர்மாணம்



சிறுவர்களின் பாதுகாப்பு கருதி நாவல தோட்ட முன்பள்ளியில் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் இதை, அமைத்துக் கொடுத்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது, இந்தப்பள்ளிவாசலுக்கு பாதுகாப்பு வேலி அமைத்துக் கொடுக்கப்படுமென, செந்தில் தொண்டமான் வாக்குறுதி வழங்கியிருந்தார்.இதற்கமைய, விஷேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த வேலி அமைக்கப்பட்டுள்ளது.

# புனித பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம் 175 ஆம் ஆண்டில் தடம் பதிப்பு

(ஆ.ரமேஸ்)



நுவரெலியா கண்டி வீதி பழையக்கடை புனித பூமியில் அமைந்துள்ள புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம் 175 ஆண்டில் நேற்று (05) தடம் பதித்துள்ளது. இதனை முன்னிட்டு,

வருடாந்த திருவிழா திருப்பணி ஞாயிறு காலை 09 மணியளவில் ஆரம்பமாகி சிறப்புடன் இடம்பெற்றது.

திருப்பலிப் பூசை,மற்றும் வழிபாடுகள் என்பன கண்டி மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய பிதா, வியானி பெர்னான்டோ தலைமையில் நடைபெற்றன.

இதன்போது ஆலய பங்கு தந்தை சுகத் ரோஹன பெரேரா, ஆலய உதவி பங்கு தந்தை அருட் தந்தை சேவியர் டக்லஸ்,மற்றும்

நு/நன்மாதா உயர்நிலை பாடசாலை பணிப்பாளர் அருட் தந்தை சிவந்தன் றொட்ரிகோ ஆகியோர், வணக்கத்துக்குரிய மறைமாவட்ட ஆயருடன் இணைந்து கூட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மேலும் 2023 ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் இடம்பெறவுள்ள (ஜூபிலி) ஆண்டு விழாவுக்கான ஓலை, கண்டி மறைமாவட்ட ஆயர், வணக்கத்திற்குரிய வியானி பர்ணாந்துவினால் வாசிக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்த புனித நிகழ்வையொட்டி, நுவரெலியா பழையகடை வீதி புனித பிரதேசம் அலங்கரி

க்கப்பட்டதுடன்,சுகாதார வழிமுறைகளுக்கு ஏற்ப, பக்தர்கள் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# பல்லேபொல பிரதேச சபை பட்ஜட் ஐந்து வாக்குகளால் வெற்றி

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை பல்லேபொல பிரதேச சபையின் 2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம், ஐந்து மேலதிக வாக்குகளால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பல்லேபொல பிரதேச சபையின் 2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அமர்வு, பிரதேச சபை தலைவர் ஜகத் திசாநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, வரவுசெலவுத் திட்ட அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. மொத்த உறுப்பினர்கள் 18 பேரில், 13 பேர் மாத்திரமே சபைக்கு சமுகமளித்திருந்தனர், இவர்களில் 9 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 4 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். இதன்படி, மேலதிக ஐந்து வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது.

ஐக்கிய தேசிய கட்சியில் 3 பேரும் ஜேவிபியின் ஒருவருமாக நால்வர் எதிராகவும், ஏனைய உறுப்பினர்கள் 9 பேரும் ஆதரவாக வாக்களித்திருந்தனர்

பல்லேபொல பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான மொத்த வருமானம் 151,048,300.00 ரூபாவாகவும் மொத்த செலவீனமாக 151,048,100.00 ரூபா எனவும் சபையில் சபைத் தலைவரால் அறிவிக்கப்பட்டது.

# எரிவாயு கசிவு ஏற்பட்டதைடுத்து, பிள்ளைகள் பாதுகாப்பாக மீட்பு

(ஹற்றன் விஷேட நிருபர்)

ஹற்றன் வில்பட்புரம் பகுதியில் வீடு ஒன்றில் சமையல் எரிவாயு சிலிண்டரில்,கசிவு ஏற்பட்டு வீடு முழுவதும் ஒரு வகை புகை காணப்பட்டது.பாதுகாப்பான முறையில் வீட்டிலிருந்தோர் வெளியேற்றப்பட்டதாகபொலிஸார் தெரிவித்தனர்.இச்சம்பவம்

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வில்பட்புரம் பகுதியில் (04) இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் கருத்து தெரிவிக்கையில், சமையலை முடித்துவிட்டு இரவு சமைப்பதற்காக கேஸ் சிலிண்டரை எரிவாயு அடுப்பினை பற்றவைக்க முற்பட்டபோது திடிரெனக் கசிவு ஏற்பட்டது.இதனைத்தொடர்ந்து, அயலவரின் உதவியுடன் கேஸ் சிலிண்டரை வெளியில் அகற்றினோம்.பிள்ளைகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

கதவு ஜன்னல்களை திறந்து விட்டதாலும், நெருப்பு மூட்டுவதை தவிர்த்தாலும் ஏற்படவிருந்த பேராபத்து தவிர்க்கப்பட்டது. இந்த எரிவாயு சிலிண்டரை 15 நாட்களுக்கு முன்னர், மல்லிகைப்பூ சந்தியிலுள்ள கடையொன்றில் கொள்வனவு செய்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கள்ளு போத்தல்களுடன் கைது

(மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்)

மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில்,கள்ளு போத்தல்களை

கொண்டு சென்றவர் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து நாற்பது போத்தல்களும் மீட்கப்பட்டன.

சாமிமலை நகரிலிருந்து அவரவத்தை தோட்டத்தில் விற்பனை செய்வதற்காக, இந்நபர், இந்தக் கள்ளு போத்தல்களை கொண்டு சென்றுள்ளார். கைதான நபர், பிணையில் விடுதலை செய்யப்பட்டார். சந்தேக நபரை எதிர்வரும் எட்டாம் திகதி ஹற்றன் மாவட்ட நீதிமன்றில் ஆஜராகுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

# மக்களின் இடர்களுக்கு பொறுப்பற்ற வகையில் பதிலளிப்பது கவலையளிக்கிறது



(ஹற்றன் சுழற்சி நிருபர்)

மக்களுக்கு சேவை செய்து, நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கு சகல இனத்தவரும் தயாராகிவிட்டதாக,ஜே.வி.பியின் பிரசார செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

“ஊரிலிருந்து தொடங்குவோம்” தொனிப்பொருளிலான மக்கள் விடுதலை முன்னணியின் உரையாடல்,துண்டுப்பிரசுர விநியோகம் ஹற்றனில் நேற்று இடம்பெற்றது. இதில், பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் மஞ்சுள சுரவீர, உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இங்கு உரையாற்றிய அவர்,

நாட்டில் தற்போது எரிவாயு அடுப்புகள் வெடித்து சிதறிவருகின்றன. இதற்கான காரணங்களை கண்டறிந்து தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அரசு துரிதம் காட்டவில்லை.மாறாக,பொறுப்பற்ற வகையிலே, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டு வருகின்றனர். இயலாமை, பலவீனங்களை மறைப்பதற்கே இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்றன. நாட்டில் ஏற்பட்ட மின் விநியோக துண்டிப்புக்கும் இதே பாணியில்தான் கருத்துகளை முன்வைத்தனர். கேஸ் சிலிண்டர்களின் உள்ளடக்கத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாலேயே வெடிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.இதனால்தான், நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய ஆட்சியை உருவாக்குவதற்கு சகலரும் முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் விழிப்பூட்டி வீதி




(ஹற்றன் சுழற்சி நிருபர்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டித்து மலையகத்தின் பல பாகங்களிலும் பல்வேறு விழிப்புணர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைவாக பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் மற்றும் வன்புணர்வுகளை நிறுத்துவோம் எனும் தொனிப்பொருளில் புரொடெக்ட் அமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்வுகள் நோர்வூட் நகரில் (05 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பெண்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்பான புரொடெக்ட் அமைப்பின் தலைவி கருப்பையா மைதிலி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், வீதி நாடகமும், விழிப்புணர்வும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், அரச சார்பற்ற அதிகாரிகள், சிவில் அமைப்பினர், உட்பட புரொடெக்ட் .அமைப்பின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பெண்கள், சிறார்கள் எனப் பலரும் கொண்டனர்.

# அதிகமானோரின் கருத்துக்களை திரட்டி வடிவமைக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம்

- அமைச்சர் ஜானக வக்கும்புர

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டு ள்ள "பட்ஜட்"14 ஆயிரம் கிராம சேவகர் பிரிவுகளை

உள்ளடக்கியோர் உள்ளிட்ட சகல தரப்பினரது கருத்துக்களையும் உள்வாங்கி தயாரிக்கப்பட் டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜானக வக் கும்புர இவ்வாறு தெரிவித்தார்.

எம்பிலிப்பிட்டியவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். துறைசார்ந்த சகலரது கருத்துக்கள்,ஆலோசனைகளை இந்த பட்ஜட் உள்வாங்கியுள்ளது.இது தொடர்பில்,102 கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

நாட்டு மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக, கணிசமானளவு நிதி, இந்த வரவுசெலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. அதிகளவு அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று ம்,இதுகுறித்து எவரும் பேசாமலிருப்பது கவலையளிக்கிறது.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 டிசம்பர் 6
திங்கட்கிழமை



கிளிநொச்சி விஜயம் மேற்கொண்டிருந்த முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் வீ. ஆனந்தசங்கரியை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவகலத்தில் இடம்பெற்றது. இதன்போது சமகால அரசில் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (பரந்தன் குறுாப் நிருபர்)

# பூவரசங்குளம் பகுதியில் 50 மில். செலவில் நீர்ப்பாசன திட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் 50 மில்லியன் ரூபா நிதி உதவியில் அமைக்கப்பட்ட பூவசரங்குளம் ஏற்று நீர்ப்பாசன திட்டத்தினை வட மாகாணஆளுனர் ஜீவன் தியாகராஜா நேற்று (03) திறந்து வைத்துள்ளார்.

145 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 145 ஏக்கர் விவசாய நடவடிக்கைக்காக 50 மில்லியன் ரூபா செலவில் பூவரசங்குளத்தில் இருக்கும் நீரை மேட்டுநிலத்திற்கு ஏற்றி அதனூடாக பயிர்ச் செய்கைகளை நவீன தொழிநுட்பத்தினூடாக முன்னெடுக்கும் செயற்திட்டமாக இது அமைந்துள்ளது.

வவுனிக்குளத்தின் ஒரு வாய்க்காலில் இருந்து வரும் தண்ணீர் 14 கிலோமீற்றர் தூரம் வந்து பூவசரங்குளத்தினை அடைகின்றது. இந்த நீரின் மூலம் இந்த பகுதி விவசாயிகளின் நன்மை கருதி விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தில் இந்த ஏற்று நீர்ப்பாசன திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.



குறித்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த நீர்ப்பம்பிகள் ஊடாக நீர் வழங்கப்பட்டு தூவல் நீர்ப்பாசனங்களை பயன்படுத்தி பயிர்ச் செய்கை விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிக்கப்படவுள்ளனர்.

தற்போது விவசாயிகள் எதிர்கொள்ளும் உற்பத்தி செலவு அதிகரிப்பு, சந்தைப்படுத்தல் பிரச்சினையினை எதிர்கொண்டுவரும் விவசாயிகளின் குறித்த இரண்டு முக்கிய பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனூடாக இந்த விவசாயிகள், தை மாதம் தொடக்கம் புரட்டாதி மாதம் வரை மிளகாய் செய்கையும் ஐப்பசி தொடக்கம் தை வரையும் நிலக்கடலை செய்கையினையும் மேற்கொள்வார்கள்.

இவ்வாறாக அமைக்கப்பட்ட இந்த பூவரசங்குளம் ஏற்று நீர்ப்பாசன திட்டத்தினை ஆளுனர் ஊடாக பிரதேசத்தின் விவசாய சம்மேளத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுனர் ஜீவன் தியாகராஜா, வட மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஆளுனரின் பிரதம செயலாளர் சமன் பந்துல சேன ,நவீனமயமாக்கல் செயத்திட்டதிட்ட பிரதி திட்ட பணிப்பாளர் கே.பத்மநாதன், வடமாகாண நீர்பாசன திணைக்கள பணிப்பாளர் வீ.பிறேம்குமார், மாகாண பிரதி பிரதம செயலாளர், நீர்பாசன திணைக்கள பொறியியலாளர்கள், அதிகாரிகள் மற்றும் மாந்தைகிழக்கு, துணுக்காய் பிரதேச செயலாளர்கள், மாந்தை கிழக்கு, துணுக்காய் தவிசாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

## முள்ளியவளையில் பிரதேச சபை ஊழியர் மீது தாக்குதல் இருவர் கைது!

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முள்ளியவளை பிரதேச சபையின் சுகாதார ஊழியர்கள் சுகாதார பணி செய்துகொண்டிருந்த போது நான்கு பேர் கொண்ட குழு தாக்குதல் நடத்தியுள்ளது

03.12.21 அன்று முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய முன்பக்க வீதியினை சுத்தம் செய்யும் நடவடிக்கையில் முள்ளிவளை பிரதேச சபையின் உப அலுவலக சுகாதார ஊழியர்கள் ஈடுபட்டிருந்த வேளை இரண்டு உந்துருளியில் நான்கு பேர் கொண்ட கும்பல் பிரதேச சபை ஊழியர்களின் காட்டுக்கத்தியினை பறித்து எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளது.

## தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கூட்டம்

யாழ்.விசேட நிருபர்

வாக்குரிமை விழிப்பூட்டல்களை மக்கள் மத்தியில் மேற்கொள்வதற்குரிய 2022 – 2025 வரையான காலப்பகுதிக்கான மூலோபாயத் திட்டத்தை தயாரிப்பதற்கு ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன. இதற்கேற்ற வகையில் அரச அலுவலர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா, தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயாக்க, தேர்தல் ஆணைக்குழுவின் செயலாளர் ஹேரத், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான மொஹமட் , பத்திரண, திவாரட்ண, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ் மாவட்ட பிரதி தேர்தல் ஆணையாளர் அமல் ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பில் இங்கே தெரிவிக்கப்பட்டதுடன், பொது அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் கருத்துக்களும் கேட்கப்பட்டமை விசேட அம்சமாகும்.



## கரவெட்டி வீதி அபிவிருத்திக்கு அடிக்கல் நடல்

சாவகச்சேரி விசேட நிருபர்

கிராமிய வீதிகளை கொங்கிறீட் வீதிகளாக அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அண்மையில் பிரதேசத்தில் 12 வீதிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனின் முன்மொழிவில் உடுப்பிட்டி, உடுப்பிட்டி தெற்கு, உடுப்பிட்டி வடக்கு, சமரபாகு, வல்வெட்டி, கரணவாய் வடக்கு, கரணவாய் மத்தி, நெல்லியடி வடக்கு, அல்வாய் தெற்கு, அல்வாய் கிழக்கு, அல்வாய், நெல்லியடி கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 12 வீதிகளுக்கே இவ்வாறு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. வீதிகளுக்கான அடிக்கல்லை அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளர் ச.இராமநாதன் நாட்டி வைத்திருந்தார். குறித்த 12 வீதிகளும் 24 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## வடமராட்சி கடற்கரை பகுதியில் இந்திய பிரஜை ஒருவரின் சாரதி அனுமதிப்பத்திரம்

(நாகர்கோவில் விஷேட நிருபர்)




இந்திய பிரஜை ஒருவரின் சாரதி அனுமதிப்பத்திரம் வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்கரை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை(05) காலை கரையொதுங்கியது. தமிழகத்தின் ஆலம்பத்தூர் சிதம்பரம் தாலுகாவை சேர்ந்த ஆனந்தகுமார் பரமசிவம் (வயது 47) என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரமே இவ்வாறு கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. வட பகுதிக் கடலில் ஆறு நாட்களிற்குள் இனந்தெரியாத ஆறு சடலங்கள் கரையொதுங்கின.

கடந்த மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு மணற்காடு மற்றும் வல்வெட்டித்துறை கடற்கரை பகுதிகளில் இரு சடலங்களும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு கடற்கரையில் ஒரு சடலமும், 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெற்றிலைக்கேணி கடற்கரை பகுதியில் ஒரு சடலமும், கடந்த வியாழக்கிழமை(02) பருத்தித்துறை சாக்கோட்டை மற்றும் வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியிலுமாக இதுவரை 6 சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.

குறித்த 06 சடலங்களும் அடையாளம் காணப்படாத நிலையில் சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

## வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் (04.12) மாலை மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, ஈரப்பெரியகுளம் குளத்திற்கு மீன் பிடிப்பதற்காக தனது வீட்டில் இருந்து சென்றவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த குளத்தில் மீன் பிடிப்பதற்காக காலையில் இருவர் சென்றிருந்தனர். அங்கு மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது ஒருவர் தனக்கு இயலாமல் இருப்பதாக கூறி குளத்தில் இருந்து வெளியே சென்றுள்ளார். மற்றைய நபர் மீன் பிடித்து முடிந்ததும் குளத்தில் இருந்து வெளியே வந்து வீடு நோக்கி சென்ற போது கூட வந்தவர் குளத்து ஒழுங்கை ஒன்றில் மரணித்த நிலையில் காணப்பட்டதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வவுனியா, கல்நாட்டியகுளம், மதுரா நகர் பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய செல்வராசா ஜலகுலசராசா என்பரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் குறித்து ஈரப்பெரியகுளம் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கிளிநொச்சி உமையாள்புரத்தில் மர்மப்பொருள் வெடித்ததில் ஒருவர் பலி



(பரந்தன் குறுாப் நிருபர்)



கிளிநொச்சி உமையாள்புரம் சோலை நகர் பகுதியில் மர்மப்பொருள் ஒன்றை பரிசோதித்தபோது அது வெடித்ததில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மேலும் 13 வயது சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 330 மணியளவில் மர்மப் பொருள் ஒன்றை கிரைண்டர் ஒன்றினால் வெட்டியபோது குறித்த பொருள் வெடித்ததில் ஒருவர் உடல் சிதறி பலியாகியுள்ளதுடன் சம்பவத்தில் 13 வயதுடைய சிறுவன் ஒருவனும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தின் போது ( சிவலிங்கம் யுவராஜ் வயது 25) உயிரிழந்துள்ளதுடன் சிவலிங்கம் நிலக்சன் என்ற சிறுவன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வெடிப்பு சம்பவம் இடம்பெற்ற வீட்டை சூழவுள்ள வீட்டின் சில பகுதிகளிலும் ஆபத்தான வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பல்வேறு குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது

(பரந்தன் குறுப் நிருபர்)

யாழில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடைய 25 வயது சந்தேக நபர் நட்டாங்கண்டல் பகுதியில் வைத்து மல்லாவி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞர் ஒருவர் குறித்த பகுதியில் நடமாடுகின்றார் என்று முல்லைத்தீவு மாவட்ட பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட ரகசிய தகவலை அடுத்து மல்லாவி பொலிஸ் உத்தியோகத்தர்களான சபேசன் , நிர்மலன் , பகீரதன் , புஸ்பகுமார ஆகியோர் இணைந்து சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

## கொக்கிளாயில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, கொக்கிளாய் மேற்கு கிராமசேவர் பிரிவில், புளியமுனை பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் 03.12.2021 வெள்ளியன்று மாலை வேளை எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளது.

குறிப்பாக வெள்ளியன்று மின் வெட்டு அமுலில் இருந்த நிலையில், வீட்டு வெளிச்சத்திற்காக மெழுகுவர்த்தி ஏற்றுவதற்காக எரிவாயு அடுப்பை இயக்கியபோதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக, வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற வீட்டார் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் வெடிப்புச் சம்பவத்தின் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சைவ மஞ்சரி

# சபரிமலைக்கு முதலில் செல்லும் பக்தர்கள் செய்ய வேண்டிய விரத பூஜை



சபரிமலை யாத்திரையின் போது அங்கு தங்கியிருக்கும் நாட்களில் மாலை நேரத்தில் கற்பூரம் ஏற்றி சரண கோஷம் ஒலித்து ஐயப்பனை வழிபட வேண்டும் என்பது கட்டாயமான விதிமுறையாகும்.

ஐயப்பனை அன்னதான பிரபு என்பார்கள். ஐயப்பன் கோவில் செல்லும் ஏழை பக்தர்கூட கஷ்டப்படுவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும். பணம்தான் கொடுக்க வேண்டும் என்பதில்லை. உடல் உழைப்பையும் கொடுக்கலாம். வசதி படைத்தவர்கள் நிச்சயமாக அன்னதானம் செய்ய வேண்டும். தானம் செய்வதற்கு முன் படுக்கை பூஜை அல்லது வெள்ளம்குடி பூஜை நடத்த வேண்டும். கன்னி ஐயப்பன்மார்கள் இந்த பூஜையை கட்டாயம் செய்ய வேண்டும்.

சபரிமலைக்கு இருமுடி கட்டு ஏந்தி புறப்படுவதற்கு முன் கார்த்திகை முதல் நாளிலிருந்து மார்கழி 11ம் திகதிக்குள் ஏதேனும் ஒரு நாளில் இந்த பூஜையை நடத்த வேண்டும். வீட்டின் கிழக்குப்பாகத்தில் ஏழு கோல் சதுரத்தில் பந்தல் அமைக்க வேண்டும். பந்தலை அலங்கரித்து நடுவில் அலங்கார மண்டபம் அமைக்க வேண்டும்.

மண்டபத்தில், ஐயப்பன் படம் அல்லது சிலையை அமைக்க வேண்டும். மேலும் கணபதி, மாளிகைப்புறத்தம்மன், கருப்பசாமி, கடுத்தசுவாமி, வாபர்சுவாமி, ஆழி ஆகியவற்றை அமைக்க உரிய இடங்களை தேர்வு செய்ய வேண்டும். இந்த இடங்களில் சுவாமிகளுக்கு பதிலாக குத்துவிளக்கு ஏற்றி வைத்து அதன் முன்னர் அவல், பொரி, பழம் ஆகியவற்றை படைக்க வேண்டும். நடுப்பாகத்தில் ஐயப்பனை ஒரு பீடத்தின் மீது வைத்து பட்டு விரித்து அதன் முன்னால் இலை போட்டு, நெல்லும் அரிசியும் நிரப்பி வைக்க வேண்டும்.

கிழக்கு திசையை நோக்கி சுத்தம் செய்யப்பட்ட தேங்காயை வைக்க வேண்டும். அலங்கார மண்டபத்தின் கிழக்குப்பாகத்தில் ஆழி அமைப்பதற்கு இடம் ஒதுக்க வேண்டும். அதில் விறகுகளை அடுக்கி ஆழி வளர்க்க வேண்டும். பூவரசு அல்லது பலர் விறகுகளை ஆழியில் போட வேண்டும்.

ஐயப்பனுக்கு தீபாராதனை நடத்திய பிறகு ஆழியை ஏற்ற வேண்டும். அனைத்து ஐயப்பன் மார்களும் ஆழியை வலம் வர வேண்டும். பூஜை முடிந்த பிறகு அனைத்து பக்தர்களுக்கும் உணவு வழங்க வேண்டும். இதுதான் முறையான ஐயப்ப பூஜை ஆகும். கூட்டாகவும் இந்த பூஜை நடத்தலாம்.

விரத காலத்தில்... எளிமை, சுகாதாரம், புனித எண்ணங்கள் ஏற்படுதல் ஆகியவையே ஐயப்ப விரதத்தின் தத்துவம், உடலும், மனமும் சுத்தமாக இருக்க வேண்டும். பிரம்மச்சரியத்தை கடைபிடிக்க வேண்டும்.

கற்பூர தீபம் ஐயப்பனை கற்பூர தீபப்பிரியன் என்பர். சபரிமலை யாத்திரையின் போது அங்கு தங்கியிருக்கும் நாட்களில் மாலை நேரத்தில் கற்பூரம் ஏற்றி சரண கோஷம் ஒலித்து ஐயப்பனை வழிபட வேண்டும் என்பது கட்டாயமான விதிமுறையாகும். கற்பூர ஆழியில் ஐயப்பன் மார் கற்பூரத்தை இட்டு வழிபடுகிறார்கள்.

## மானுடவியல்

(தொடர்)

### ஐயடிகள் காடவர்கோன் நாயனார்



50

அவ்வெண்பாக்களில் 24 பாடல்களே கிடைத்துள்ளன. இப்பாடல்கள் பலவற்றிலும் நாயனார் நிலையாமையை உணர்த்தி தலங்களுக்கு ஆற்றுப்படுத்தலால் இவரது துறவுள்ளம் இப்பாடல்களில் இருக்கக் காணலாம்.

ஐயடிகள் நாயனார் தமது தல யாத்திரையின்போது தலத்திற் கொன்றாகப் பாடியருளிய திருவெண்பாக்களின் தொகுதி க்ஷேத்திரத் திருவெண்பா என்ற பெயரால் வழங்கும். மெய்யுணர்வு, தலைப்பட்டுச் சிவனைச் சாரும் ஆன்மாவானது



அதற்கு முன்னோடி நியமப்படி, உண்மை நிலையில் தனக்கு வேறாயிருந்தும் தன்னோடொன்றியிருக்கும் ஒன்றெனத் தோன்றி மயக்கும் தேகாதிப்பிரபஞ்சத்தின் நிலையில்லாமையும் அதன் பொல்லாப்பும் உணர்ந்து அதிலிருந்து விடுபடுதல் கடனாகும்.

அது, தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சத்தி எனும் உணர்வனுபவ நிலைகளாகச் சைவசித்தாந்தத்தில் வைத்துணர்த்தப்படுவதும் துகளறு போதம் என்ற ஞான நூலிற் பூதப்பழிப்பு, அந்தக்கரண சுத்தி முதலாக அவை விரித்து வர்ணிக்கப்படுதலும் பிரசித்தமாம். அப்பர் சுவாமிகள் தேவாரத்தில், "செத்தையேன் சிதம்ப நாயேன் செடிதலையழுக்குப் பாயும் பொத்தையே பேணி நாளும் புகலிடம் அறியமாட்டேன்" என்பதாதி யாகவும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில், "ஊன்மிசை உதிரக்குப்பை ஒருபொருளிலாத மாயம் மான்மறித்தனைய நோக்கின் மடந்தைமார் மதிக்கு மிந்த மானிடப் பிறவி வாழ்வு வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்" என்பதாதியாகவும்.

திருவாசகத்தில், "பொத்தையூண்சுவர்ப் புழுப்பொழிந்துளுத்தசும் பொழுகிய பொய்க்கூரை இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற் சுழித்தலைப் படுவேனை" என்பதாதியாகவும் கூறிப்பிடுகின்றனர்.

தன் பெற்ற செல்வம், அரசு பதவி, மக்கள் என அனைத்தும் துறந்த ஐயடிகள் காடவர்கோன் உரிய காலத்தில் முக்தி அடைந்தார். சிவபதம் அடைந்தார். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக ஏகாம்பரநாதர் அருளினார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## ஹம்ஸ யோகம் - 50



ஸோஹம் சாதனையில் தியானமும், பாவனையின் போது உடலின் ஒவ்வொரு அங்கமும் பிராணனால் நிரப்பப் பட்ட உணர்ச்சியினை தொடர்ச்சியாகப் பெறுவது அவசியமாகும். அதைப்போல பிந்து யோக சாதனையின் இறுதியில் தெய்வீக ஜோதி மூளை, இதயம், சுவாசப்பை என்று அனைத்து உறுப்புகளிலும் பரவி உடலின் ஒவ்வொரு அணுவும் ஒளியையும், தெய்வீக ஞானத்தையும் பெறுவதை பாவிப்பது அவசியமாகும். ஒவ்வொரு கலமும் இந்த ஜோதியினால் ஆக்கப்பட்டிருப்பதை உணர்தல் அவசியமாகும்.

இந்திய ஆன்ம விஞ்ஞானத்தில் மனதின் கூறுகள் மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்று நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. பிந்து யோக சாதனையின் இறுதியில் இந்த நான்கும் ஒன்றாகி இந்த ஜோதியில் அடங்கும் நிலைஏற்படும்.

உடல் முழுவதும் ஜோதியால் நிரம்பிய உணர்வு புருவ மத்தியில் சூரிய உதயம் ஏற்படும் அனுபவத்தினால் உணரப்படுகிறது. இந்த சூரிய உதயத்தின் ஒளிக்கிரணங்கள் எல்லா அறியாமை இருளையும் அழித்து எமது புத்தியை சரியான வழியில் செலுத்தும். இதனால் எமக்கு காலை எழுந்தவுடன் களைப்பு இன்றிய உற்சாகமான வாழ்க்கை ஏற்படும். பிந்து யோக சாதனை ஒருவனிற்கு ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்களைத் தூய்மைப்படுத்தும். இதனால் சாதகனில் ஏற்படும் ஒவ்வொரு எண்ண அலையும் தெய்வீகத்தன்மை நிறைந்ததாக இருக்கும். ஆன்ம விஞ்ஞானத்தில் ஜோதி என்ற சொல் பிராணனின் பிரகாசத்தையும், சிறப்பையும் மாத்திரம் கூறவில்லை, அறிவு,ஞானம் ஆகிய இரண்டினையும், மனதின் புத்தாக்கத் திறனைப்பற்றியும் குறிக்கிறது. பௌதீக விஞ்ஞானத்தில் ஒளியின் காரணமாக வெப்பமும் இருள் நீக்கமும் கிடைக்கும். அதைப்போல் ஆன்ம விஞ்ஞானத்தில் தபஸ் என்பபடும் உஷ்ணமும்,பிரகாசம் எனப்படும் பிராணனின் ஒளியும் உருவாகும். இது ஒருவனுக்கு ஆழமான அறிவு, தார்கத் திறன், புத்தியாற்றல், எதிர்காலத்தைக் கணித்தல்,விவேகம் ஆகிய பண்புகளை ஏற்படுத்தும்.

ஏற்கனவே கூறியதைப் போல் பௌதீக ஒளியினை திராடகப் பயிற்சி செய்வதன் மூலம் பிந்துயோகத்தில் அக ஒளியினை அடைய முடியும். பொதுவாக நெய் விளக்கு, மெழுகு வர்த்தி ஆகியவற்றைப் பயன்படுத்தி திராகப் பயிற்சி செய்யப்படுகிறது. மின் குமிழ்களைப் பயன்படுத்தி இந்தசாதனையைச் செய்வதாக இருந்தால் கண்கள் பாதிக்கப் படாத பிரகாசம் இருப்பது அவசியம். சிறிய நீல நிறக் குமிழ் விளக்குகள் பாவிக்கலாம். இந்த நீல நிற விளக்கு சாதாகனின் மனதினை அமைத்திப்படுத்தி குளிர்ச்சியாக்கும். **(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

*18750) பூஜையறையில் எத்தனை விளக்குகள் ஏற்ற வேண்டும்?*
**இரண்டு**

*18751) பூஜையறையில் ஏன் இரண்டு விளக்குகள் ஏற்ற வேண்டும்?*
**பொதுவாக பூஜையறையில் குலதெய்வதீபம் என்று ஒரு காமாட்சி விளக்கும், எல்லா தெய்வங்களுக்குமாக குத்துவிளக்கும் ஆக இரண்டு தீபம் ஏற்ற வேண்டும்**

*18752) ஊதுபத்தி சூடம் போன்றவற்றை இந்த விளக்கில் இருந்து ஏற்றலாமா?* **கூடாது.**

*18753) அதற்கு என்ன செய்யலாம்?*
**பூஜை நேரத்தில், தனியாக ஒரு கைவிளக்கை ஏற்றிக் கொள்ள வேண்டும்.**

*18754) சாப்பாடும் தூக்கமும் உடலுக்கு எதை தரும்?* **சுகம்.**

*18755) விரத நாட்களில் பகலில் தூங்கக்கூடாதாமே ஏன்?*
**ஒரு நிலைப்பட்ட மனதுடன் அன்று முழுவதும் தெய்வ சிந்தனையாகவே இருப்பதற்குத் தடையாக இருப்பவை. பசியோடும், தூங்காமலும் இருக்கும்போது, நாம் இன்று விரதம் இருக்கிறோம் என்ற எண்ணம் மறக்காமல் இருக்கும். முழுமையான தெய்வ சிந்தனையுடன் விரதம் இருந்தால் நாம் எண்ணியது நிறைவேறும்.**
**வீட்டில் சாப்பிடும்போது எல்லோரும் பார்க்கும்படி வாசலில் உட்கார்ந்து நாம் சாப்பிடுவதில்லையே.**

*18756) பிறர் பார்க்கும்படி செய்யக் கூடாதவை?*
**குளிப்பது, சாப்பிடுவது, ஜெபிப்பது போன்ற விஷயங்களை**

*18757) சுவாமிக்குப் பிரசாதம் படைக்கும் போது திரையிட்டுக் கொள்வது ஏன்?*
**தெய்வத்திற்குப் பிரசாதம் படைக்கும் நைவேத்யத்தை ரகசியமாக செய்யும்படி சாத்திரங்கள் கூறுகின்றன. கௌரவம், பயபக்தியோடு மட்டுமே கடவுளுக்கு உணவு படைக்கவேண்டுமே தவிர மேடை காட்சியாக செய்யக்கூடாது என்தற்காகத் தான்.**

*18758) பெண்கள்கர்ப்பமாகஇருக்கும்போதுவழிபாட்டில்தேங்காய் உடைக்கலாமா?* **கூடாது**

*18759) பெண்கள் தேங்காய் உடைக்கலாமா?*
**கர்ப்பமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் பெண்கள் தேங்காய் உடைக்கக் கூடாது.**

*18760) பெண்கள் தேங்காயை மட்டும் தான் உடைக்கக் கூடாதா?*
**பூசணிக்காயும் வெட்டக் கூடாது. ஆண்கள் தான் எப்போதும் செய்ய வேண்டும்.**

*18761) கோயில்கிணற்றில், குளத்தில்பக்தர்கள்காசைப்போடுவது ஏன்?*
**ஒருவர் போட்டுத் துவங்கி வைக்கிறார். ஏன் எதற்கு என்று கூட சிந்திக்காமல் எல்லோரும் அதைச் செய்கின்றனர். இதைச் செய்யாதவர்களை செய்தவர்கள் தூண்டுவது தான் வேடிக்கை. தேவையில்லாத ஒன்றை பலநாட்கள் செய்யப்பழகிவிட்டால் அது வழக்கமாகி விடுகிறது. கேள்வி என்று வரும்போது என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் யோசிக்க வைத்து விடுகிறார்கள்.**

# "சிவாகம கலாநிதி" பட்டம் பெறும் சிவாச்சாரியார்கள்







விப்ரசிரேஷ்டர்களான மஹாராஜ ஸ்ரீ நகுலேஸ்வர குருக்கள் அவர்களுக்கும் இணுவில் காயத்ரி பீடம், தர்மசாஸ்தா குருகுல அதிபர் "வேதசிவாகம பாஸ்கர "சிவஸ்ரீ தானுநாத மஹாதேவ குருக்கள் அவர்களுக்கும் இந்தியா தருமபுரம் ஆதீனத்தின் சார்பில் ஆதீனத்தின் 27ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள், எமது இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் எமது விண்ணப்பத்தினை ஏற்று "சிவாகம கலாநிதி" எனும் சிறப்பு பட்டம் வழங்கி கௌரவம் செய்வது சைவமக்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த மகிழ்ச்சியை தந்துள்ளது.

இந்தியாவின் தொன்மையான சைவத் திருமடங்களுள் ஒன்றாகவும், சைவமும் தமிழும் இனிதே தழைத்தோங்குக என்ற கோட்பாட்டுடன் சமய வளர்ச்சியிலும், தமிழ் வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றி வரும் ஆதீனமாகவும் விளங்குகிறது தருமபுரம் ஆதீனம்.

இந்த ஆதீனத்தின் 26ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் டிசம்பர் 3ஆம் திகதி முக்தியடைந்தார்.

**ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகள்**

இதையடுத்து, ஆதீனத்தின் இளைய சந்நிதானம் தருமையாதீனத்தின் 27ஆவது குருமகா சந்நிதானமாக வெள்ளிக்கிழமை ஞானபீடம் ஏற்றார்.

தருமபுர ஆதீன பரம்பரையைத் 'திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்' எனப் போற்றுகின்றனர். இதன் பரம்பரையில் வரும் முதல் நால்வரைப் அகச் சந்தான குரவர் என்றும் கயிலாயவாசிகள் என்றும் கூறுவர். இப்பரம்பரை அகச் சந்தான குரவர் புறச் சந்தானக் குரவர் மற்றும் சந்தானக் குரவர் என வரிசைப்படுத்தப்படுகிறது.

**வேதாகம ஞான பாஸ்கரன்**
**சிவஸ்ரீ. தானுநாத மஹாதேவ குருக்கள்**

மிகவும் ஆச்சர்யமான முறையில், வேத சிவாகம பணி செயபவர் ஸ்ரீ தர்மசாஸ்தா குருகுல முதல்வர் பிரம்மஸ்ரீ. தா.மஹாதேவக்குருக்கள் அவர்கள்.

கடந்த பல தசாப்தங்களாக இலங்கையில் நிலவிய உள்நாட்டுப்போர், இடப்பெயர்வு என்பவற்றுக்கு இடையிலும் குருகுலமரபு வழியில் வேதாகமக்கல்வி இன்றைக்கும் ஓரளவேனும் செழிப்புற்று உள்ளது என்றால், இன்றைக்கு இலங்கையின் பல பாகத்திலும் சிவாச்சார்யர்கள், அந்தணோத்தமர்கள் சிறப்பாக கிரியைகளை ஆற்றி வருகிறார்கள் என்றால், வேத, சிவாகம ஆராய்ச்சிகளும், இத்துறையில் புதிது புதிதாக நூல்களும் உருவாகின்றது என்றால், இந்த எழுச்சியில், இணுவில் தர்மசாஸ்தா குருகுல முதல்வர் பிரம்மஸ்ரீ. தா.மஹாதேவக்குருக்களின் பங்கும் பணியும் மிக முக்கியமானது. தமிழகத்தில் இன்றைக்கும் காஞ்சி, திருப்பரங்குன்றம், பிள்ளையார்பட்டி, தருமபுரம் ஆதீனம், சீர்காழி போன்ற பல்வேறு இடங்களில் சிவாச்சார்ய வேதாகம பாடசாலைகள் உள்ளன. இதே போல, இலங்கைத்திருநாட்டிலும் மஹாதேவக்குருக்கள் அவர்கள் ஒரு பாடசாலையை நிறுவனரீதியாக அன்றி, தனது தனிப்பட்ட ஆளுமைத்திறத்தாலும் தம் குடும்பத்தவரின் ஒற்றுமையான பணிகளாலும், முழுமையான இலவசக்கல்வி முறையாக நடாத்தி வந்திருக்கிறார் என்பது ஆச்சர்யமான ஒரு விடயம் ஆகும்.

1994ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் பெரும்பகுதி யாழ்ப்பாண மக்கள் இடப்பெயர்வையும் பெரும் அவலத்தையும் சந்தித்தனர். இவ்வாறான ஒரு சூழலில் மஹாதேவக்குருக்கள் குடும்பமும் அவரது பாடசாலைச்சமூகமும் கூட, இதே துயரத்தை ஏற்று தென்மராட்சியின் உசன் பகுதிக்கு இடம்பெயர்ந்தது. அங்கும் கூட, குண்டு மழைக்குள்ளும் இலவச வேத, ஆகம வகுப்புகளும், பகவத்கீதா வகுப்புகளும் நடந்தமை வியப்பானது. வாத்தியார் அவர்கள் சுமார் 45 வருடங்களுக்கு மேலாக குருகுலத்தினை நடாத்திவருவது தனிச்சிறப்பு. வாத்தியார் அவர்கள் "வேதசிவாகம பாஸ்கர" எனும் சிறப்பு பட்டத்தினை முதலாவதாக பெற்று, பல அமைப்புகள் ஆலயங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற, ஆயிரம் பிறைச்சந்திரனை தரிசனம் செய்த பெருந்தகை.

**மஹாராஜஸ்ரீ**
**நகுலேஸ்வர குருக்கள்**

பஞ்ச ஈஸ்வரங்களில் யாழ்ப்பாணத்திலுள்ள நகுலேஸ்வரமும் ஒன்று. சுசங்கீதன், நளன், அருச்சுனன் போன்றவர்களும் நகுல முனிவரும் பூசித்த இத்தலம் ஒருகாலத்தில் மலை வடிவில் இருந்ததாம்.

இன்று மலை கடற்கோளில் அழிந்து விட்டாலும் கீரிமலை என்றே அழைக்கப்படும் இத்தல தீர்த்தம் சாகர சங்கமம் ஆக, கண்டகி தீர்த்தமாக விளங்குகிறது.

இத்தலத்தின் அறங்காவலர்களாயும் அர்ச்சகர்களாயும் திகழும் சிவவேதியர் மரபில் வந்தவர் நகுலேஸ்வரக்குருக்கள். 1947ல் தமது தந்தையார் குமாரசாமிக்குருக்கள் காலமானதை தொடர்ந்து (அப்பொழுது 22வயது) கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக நகுலேஸ்வரப்பேராலய ஆதீனகர்த்தராக விளங்கிவருபவர் இவர் தமது மேற்பார்வையில் 1953, 1973, 2012 ஆகிய மகாகும்பாபிஷேகங்களை நகுலநாதருக்குச் செய்தவர்.

1990ல் ஏற்பட்ட போர் அவலத்தால் ஊரை விட்டு, கோயிலை விட்டு ஊர்மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து ஏழாண்டுகளாக கோயில் சூழலை நெருங்க இயலாத சூழல் ஏற்பட்ட போதும், அத்தனை அழிவுகளையும், இழப்புகளையும் தாண்டி கோயிலை மீளக்கட்டியெழுப்பிய சிவப்பணியாளர் இவர்.

தம் மரபிலிருந்து விலகாத சீர்மையாலும், சிவபக்தியாலும், சிவாச்சார்ய லக்ஷணத்தாலும் ஒரு பெரும் சிவாச்சார்ய திலகமாக குருக்கள் திகழ்கிறார். இவை போல் பல்வேறு சிறப்புக்களை தங்களகத்தே கொண்டிருக்கும் எமது சிவாசாரியார்களுக்கு கௌரவம் செய்யும் இந்தியா தருமபுரம் ஆதீனம், 27ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கும் சைவத்தமிழ் மக்கள் சார்பில் எமது நன்றிகளுடன் பணிகின்றோம்.

தொகுப்பு:
கலாநிதி. சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# சர்வதேச செய்திகள்

## கென்யாவில் திருமண பஸ் நீரில் மூழ்கி 23 பேர் பலி




கென்யாவில் திருமண நிகழ்வு ஒன்றுக்கு சென்று கொண்டிருந்த பஸ் வண்டி ஒன்று ஆற்று வெள்ளத்தில் மூழ்கி குறைந்து 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

கென்ய தலைநகர் நைரோபியில் இருந்து 200 கிலோமீற்றருக்கு அப்பாலிருக்கு என்சியு ஆறு பெருக்கெடுத்த நிலையில் நீரில் மூழ்கடிக்கப்பட்ட பாலத்தில் பஸ் வண்டியை வேகமாக செலுத்த முயன்றபோது அது நீரில் அடித்துச் செல்லப்படுவது அங்கு எடுக்கப்பட்ட வீடியோவில் பதிவாகியுள்ளது.

தேவாலய பாடகர் குழு ஒன்றாலேயே இந்த பஸ் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் நால்வர் சிறுவர்கள் என்றும் குறைந்தது 12 பேர் மீட்கப்பட்டிருப்பதாகவும் உள்ளூர் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் அந்த பஸ்ஸில் எத்தனை பேர் இருந்தார்கள் என்று உறுதி செய்யப்படவில்லை.

கடந்த சனிக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றதாக கிடுயி சரிட்டி நிகிலு ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கென்யாவின் பல பகுதிகளிலும் அண்மைக் காலத்தில் அசாதாரண மழை வீழ்ச்சி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மியன்மார் ஆர்ப்பாட்டக்காரர் மீது வாகனம் மோதி ஐவர் உயிரிழப்பு



மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிரான ஆர்ப்பாடத்தின் மீது இராணுவம் வாகனத்தை மோத விட்ட சம்பவத்தில் ஐவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இதன்போது பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாங்கோன் நகரில் நேற்றுக்காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பார்த்த இருவர் குறிப்பிட்டுள்ளனர். அங்கு எடுக்கப்பட்ட வீடியோவில் துப்பாக்கிச் சத்தம் கேட்பது பதிவாகியுள்ளது.

காலை இடம்பெற்ற வன்முறைக்கு பின்னரும் கூட நேற்று மாலையிலும் யாங்கோனில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 1ஆம் திகதி இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சிகுப் பின் இராணுவ எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதோடு இதுவரை 1,300க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் பதவி கவிழ்க்கப்பட்ட அரசின் ஆலோசகரான ஆங் சான் சூக்கி மீதான வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. 11 குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டிருக்கும் சூக்கி மீது அதிபட்சம் 102 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

## குக் தீவில் முதல்முறையாக கொவிட்-19 தொற்று சம்பவம்



கொவிட்–19 நோய்த்தொற்று இல்லாத இடமாகத் திகழ்ந்த குக் தீவுகளில் முதல் சம்பவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு ஆண்டுகள் கொவிட்–19 வைரஸ் நாட்டிற்குள் வரவிடாமல் தடுத்த குக் தீவுகளில் கடந்த சனிக்கிழமை நோய்த்தொற்று அடையாளம் காணப்பட்டது.

தென் பசிபிக் நாடான குக் தீவுகள் வெளிநாட்டுப் பயணிகளுக்கு எல்லைகளைத் திறந்துவிடவிருந்த நேரத்தில் அங்கு நோய்தொற்று ஏற்பட்டுள்ளது.

சுமார் 17,000 பேர் வாழும் குக் தீவுகளில் 96 வீதத்தினர் முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களாவர்.

10 வயதுச் சிறுவனுக்கு நோய்த் தொற்று ஏற்பட்டதாகவும் சிறுவன் நியூசிலாந்திலிருந்து குடும்பத்துடன் நாடு திரும்பியவர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தனிமைப்படுத்தப்பட்டிருந்தபோதுதான் சிறுவனுக்கு நோய்த்தொற்று அடையாளம் காணப்பட்டதாக அதிகாரிகள் கூறினர். கொரோனா பெருந்தொற்று ஆரம்பித்தபோது உலகில் இருந்து நாட்டு எல்லைகளை மூடிய குக் தீவு, நியூசிலாந்துடன் தனிமைப்படுத்தல் அற்ற பயணங்களுக்காக வரும் ஜனவரி 14 ஆம் திகதி நாட்டை திறப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

## படுகொலைகள்: தலிபான்களுக்கு அமெரிக்க கூட்டணி எச்சரிக்கை



ஆப்கான் பாதுகாப்புப் படையின் முன்னாள் உறுப்பினர்களை இலக்கு வைத்து படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

22 நாடுகள் கூட்டாக வெளியிட்ட இந்த அறிவிப்பில் முன்னாள் அரச அல்லது பாதுகாப்பு படையினருக்கு தீங்கு செய்வதில்லை என்று தலிபான்கள் அளித்த உறுதியை கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

“கொலைகள் மற்றும் காணமலாக்கப்படுவது குறித்த அறிக்கைகள் ஆழ்ந்த கவலை அளிக்கிறது” என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மனித உரிமை கண்காணிப்புக் குழு கடந்த வாரம் வெளியிட்ட அறிவிப்பில், தலிபான்கள் ஆப்கானில் ஆட்சியை கைப்பற்றியது தொடக்கம் அங்கு 100க்கும் அதிகமான முன்னாள் அரச அதிகாரிகள் படுகொலை செய்யப்பட்டு அல்லது கடத்தப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 15 மற்றும் ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு இடையிலான காலப்பகுதியில் சரணடைந்த அல்லது பிடிக்கப்பட்ட ஆப்கான் பாதுகாப்பு படையின் 47 உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருப்பதாக அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒமிக்ரோன் கொரோனா திரிபு: இதுவரை உயிரிழப்பு இல்லை



ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபு 40க்கும் அதிகமான நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும் அந்தத் திரிபினால் இதுவரை மரணம் ஏதும் ஏற்படவில்லை என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் தற்போது 160 பேர் ஒமிக்ரோன் திரிபினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அடுத்த சில மாதங்களில் ஐரோப்பிய நாடுகளில் நோய்ப்பரவல் அதிகரிக்கக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அங்கு பதிவாகக்கூடிய சம்பவங்களில் 50 வீதத்திற்கும் கூடுதலானவற்றுக்கு ஒமிக்ரோன் திரிபு காரணமாக இருக்கலாம் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. ஜெர்மனி, அதிகரித்துவரும் நோய்த்தொற்றைச் சமாளிக்கத் தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்களுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அமெரிக்காவில் குறைந்தது 6 மாநிலங்களில் ஒமிக்ரோன் திரிபினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா இரு நாடுகளிலும் முதல் முறை உள்நாட்டில் வைரஸ் திரிபு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த திரிபின் தொற்றுத் தன்மை மற்றும் தீவிரம் பற்றி கண்டறிய வாரங்கள் எடுத்துக் கொள்ளக்கூடும் என்று உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## சீன ஊடுருவல்: தாய்வான் பாதுகாப்பு அமைச்சர் பதில்




சீனாவின் பாதுகாப்பு படையினர் தம் இராணுவ செயற்பாடுகளை தாய்வான் ஆயுதப் படைகளுக்கு அருகாமையில் மீண்டும் மீண்டும் முன்னெடுப்பதன் ஊடாகத் தம் ஆயுதப்படைகளை களைய முயற்சிக்கிறது. அதற்கு பதிலளிக்கும் திறன் தாய்வானிடம் உள்ளது என்று தாய்வான் பாதுகாப்பு அமைச்சர் சியூ குவா தெரிவித்துள்ளார்.

சீன விமானப்படையினர் புதுப்பிக்கப்பட்ட கூர்முனை விமானங்களுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், சீன விமானப் படை விமானங்கள் 27 தாய்வானின் வான் பாதுகாப்பு அடையாளப் பிராந்தியத்திற்குள் மீண்டும் பிரவேசித்த போதிலும் அவற்றை எமது போர் விமானங்கள் துரத்தியடித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

தாய்வான் வான் எல்லைக்குள் சீன போர் விமானங்கள் அத்துமீறிப் பிரவேசித்தமை தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிவித்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனை தெரிவித்தார். இவ்விதமான பலத்தை நீங்கள் கொண்டிருந்தாலும் அதற்கு பதில ளிக்கக்கூடிய சக்தியை எமது தேசிய சக்திகள் வெளிபடுத்தியுள்ளன. தாய்வானும் அதன் வான் பாதுகாப்பு அடையாளப் பிராந்தியமும் ஜனநாயக ரீதியில் நிர்வகிக்கப்படுகின்றன.

## தடுப்பூசியைத் தவிர்க்க பொய் கையுடன் சென்றவர் சிக்கினார்



இத்தாலியில் தடுப்பூசி போட்டுக்கொள்வதைத் தவிர்க்க ஒருவர் பொய்க் கையுடன் சென்றிருந்ததாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

வடக்கு இத்தாலியின் பியெல்லே நகரில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவர் கொண்டுசென்ற பொய்க் கை சிலிக்கோனால் செய்யப்பட்டது. அதனை அவர் தம் கையைச் சுற்றிப் பொருத்தியிருந்ததாகக் கூறப்பட்டது.

அதன் நிறம் பார்க்க உண்மையானதுபோல் தெரிந்தாலும் அவரால் சுகாதார ஊழியர்களை ஏமாற்ற முடியவில்லை.


அவருக்குத் தடுப்பூசி போட அவரது சட்டையின் கையை மேலே உயர்த்திய தாதி அந்தப் பொய்க் கையைக் கண்டார். அது சற்று சில்லென்று இருந்ததாகவும் தொட்டவுடன் இறப்பரைப் போல் உணர்ந்ததாகவும் தாதி குறிப்பிட்டார்.

ஆடவரின் திட்டத்தைக் கண்டறிந்த தாதி அவரைப் பற்றி பொலிஸாரிடம் புகார் கூறினார். 50 வயதுகளில் இருக்கும் அந்த ஆடவர் குற்றவியல் குற்றச்சாட்டுக்கு முகம்கொடுத்துள்ளார்.

அந்த ஆடவர் சுகாதார ஊழியர் ஒருவராவார். தடுப்பூசி பெறாததால் அவருக்கு பணி மறுக்கப்பட்டுள்ளது. இத்தாலியில் சுகாதார ஊழியர்கள் தடுப்பூசி பெறுவது கட்டாயமாகும்.

பாடசாலை துப்பாக்கிச் சூடு

## குற்றச்சாட்டை மறுத்த மாணவனின் பெற்றோர்



அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்தின் பாடசாலை ஒன்றில் துப்பாக்கிச் சூடு நடத்திய மாணவனின் பெற்றோர் மீது சுமத்தப்பட்டுள்ள நோக்கமில்லாக் கொலைக் குற்றத்தை இருவரும் மறுத்துள்ளனர்.

ஜேம்ஸ்–ஜெனிபர் கிரம்ப்லி எனும் அந்தத் தம்பதி கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நீதிமன்ற விசாரணைக்கு தோன்றவில்லை.

டிட்ரோயிட் நகரின் வர்த்தகக் கட்டடம் ஒன்றில் அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். தப்பிச் செல்ல அவர்கள் முயன்றார்களா என்பது இன்னும் தெளிவாகப் புலப்படவில்லை.

தங்கள் 15 வயது மகனான ஈத்தனுக்கு கைத்துப்பாக்கியை வாங்கி கொடுத்ததாய்த் தெரிய வந்துள்ளது.

கவலையளிக்கும் குறுஞ்செய்திகளையும் படங்களையும் ஈத்தன் பகிர்ந்ததாகப் பாடசாலை எச்சரித்ததையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை.

பாடசாலையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 மாணவர்கள் கொல்லப்பட்டனர். ஆசிரியர் உட்பட மேலும் சிலரும் காயமுற்றனர்.

பெற்றோர் பாடசாலை அதிகாரிகளுடன் சந்திப்பு நடத்திய சில மணி நேரத்தில் மகன் அந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தினார்.

தாக்குதல் நடத்திய மாணவன் மீது கொலைக் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## இந்தோனேசிய எரிமலை வெடிப்பில் 13 பேர் பலி



இந்தோனேசியாவின் ஜாவா தீவில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பில் குறைந்தது 13 பேர் உயிரிழந்ததோடு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

செமரு எரிமலையில் இருந்து பாரிய சாம்பல் புகை வெளிவருவதும் குடியிருப்பாளர்கள் தப்பியோடுவதும் அங்கிருந்து வரும் வீடியோக்கள் காட்டுகின்றன.

எரிமலை சாம்பலால் கிராமங்கள் மூடப்பட்டிருப்பதோடு இந்த புகை சூரிய ஒளியையும் மறைத்து இருளில் மூழ்கடித்ததாக உள்ளூர் மக்கள் குறிப்பிட்டுள்ளனர். இதில் குறைந்தது 57 பேர் காயமடைந்திருப்பதோடு பலரும் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட வட்டாரங்களில் வசிக்கும் மக்கள் பலர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். எனினும், மோசமான புகை மூட்டத்தினால் மீட்புப் பணிகள் தடைப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற எரிமலை வெடிப்பை அடுத்து எரிமலையைச் சூழவுள்ள 5 கிலோமீற்றர் பகுதி தடைசெய்யப்பட்ட வலயமாக உள்ளூர் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்தோனேசியாவில் அதிக இயக்கம் கொண்ட சுமார் 130 எரிமலைகளில் ஒன்றான செமரு எரிமலை கடைசியாக 2020 டிசம்பரில் வெடித்தபோது ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

## கத்திக் குத்துத் தாக்குதல்: பலஸ்தீனர் சுட்டுக் கொலை



கிழக்கு ஜெரூசத்தில் இஸ்ரேலியர் ஒருவர் மீது கத்திக்குத்து நடத்தி பொலிஸாரை தாக்க முயன்ற பலஸ்தீனர் ஒருவர் இஸ்ரேலிய பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

டமஸ்கஸ் நுழைவாயிலுக்கு அருகில் ஒருவர் மீது கத்திக்குத்து நடத்திய தாக்குதல்தாரி பின்னர் எல்லை காவல் பெலிஸாரை தாக்க முயன்றார் என்று இஸ்ரேல் பொலிஸ் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.


“தாக்குதல்தாரி பொலிஸாரால் செயலிழக்கச் செய்யப்பட்டார்” என்றும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

தாக்குதல்தாரியை பொலிஸார் கொன்றதாக பலஸ்தீன செம்பிறை சங்க பேச்சாளர் தெரிவித்தார்.

இதில் கத்திக்குத்துக்கு இலக்கான 20 வயது இளைஞர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அவர் தீவிர நிலையில் இருந்து மிதமான நிலைக்கு திரும்பியதாகவும் இஸ்ரேலிய அவசர சேவை பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேற்குக் கரை நகரான சல்பித்தைச் சேர்ந்த 25 வயது ஆடவர் ஒருவரே இந்த தாக்குதலை நடத்தி இருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதன்போது இளைஞர் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய இஸ்ரேலிய படையினர் அங்கிருக்கும் பலஸ்தீனர்களை கலைக்க கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொண்டனர்.

## கொரோனா தொற்று: பெல்ஜியத்தில் தனிமைப்படுத்தப்பட்ட நீர்யானைகள்



பெல்ஜியம் நாட்டில் உள்ள மிருகக்காட்சி சாலையில் இரு நீர்யானைகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, அவை இரண்டும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

14 வயதான இமானி மற்றும் 41 வயதான ஹெர்மியென் என்ற இந்த நீர்யானைகளுக்கு எப்படி கொரோனா தொற்று ஏற்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

நீர்யானைகள் இரண்டும் நல்ல உடல்நிலையுடன் இருப்பதாகவும், மூக்கு ஒழுகுதல் மட்டுமே இருப்பதாகவும் மிருகக்காட்சி சாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். அவற்றுக்கு கொரோனா தொற்று குணமாகும் வரை மிருகக்காட்சி சாலை கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

அவற்றின் இருப்பிடம் முழுவதுமாக அடைக்கப்பட்டுள்ளன. நீர்யானைகளை கவனிப்போருக்குக் கொரோனா தொற்று இல்லை என்றாலும், முகக் கவசம் அணிதல், தங்கள் பொருட்களை முழுவதுமாக கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்தல் உள்ளிட்ட கட்டுப்பாடுகள் அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கனடாவில் மூன்று காட்டு மான்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது கடந்த வாரம் அடையாளம் காணப்பட்டது. நாட்டின் காட்டு விலக்கிற்கு தொற்று ஏற்பட்ட சம்பவம் கண்டுபிக்கப்பட்டது இது முதல் முறையாகும்.

## உக்ரைன் மீது தாக்குதல் அச்சம்: பைடன், புட்டின் பேச திட்டம்



உக்ரைன் எல்லையில் ரஷ்யா இராணுவ வீரர்களை நிலைநிறுத்தி உள்ளதாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில், வரும் டிசம்பர் 7ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் வீடியோ அழைப்பு வழியாக சந்திக்க உள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

சோவியத் ஒன்றியம் உடைந்த பின் ரஷ்யா வசம் இருந்த உக்ரைன் பிரிந்துசென்று தனிநாடானது. 2014ஆம் ஆண்டில் உக்ரைனின் கிரீமியா தீபகற்பம் மீண்டும் ரஷ்யா வசம் வந்தது. அப்போதிலிருந்து, இரு நாடுகளுக்கிடையே பிரச்சினை நிலவி வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் மீது பெரியளவில் தாக்குதல் நடத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளதாகவும், போர் தளபாடங்கள், போர் வாகனங்கள் உட்பட 94,000 இராணுவ வீரர்களை எல்லைப் பகுதியில் ரஷ்யா நிலைநிறுத்தியுள்ளதாகவும் உக்ரைன் குற்றம் சாட்டியது.

இது தொடர்பாக, ஏற்கனவே ரஷ்யாவை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கண்டித்திருந்தார். ஆனால், இக்குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்தது. அமெரிக்கா மற்றும் ரஷ்ய ஜனாதிபதிகள் இருவரும் பேச உள்ளது, உலக அரசியல் களத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# நகர்வலம்



# மாத்தறை பெருநகர் அபிவிருத்தி திட்டத்தை விரைவுபடுத்துமாறு பிரதமர் பணிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து பெரு மாத்தறை நகர அபிவிருத்தித் திட்டத்தை துரிதமாக மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மாத்தறை மாநகர சபைக்கு பணித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், மாத்தறை மாநகர சபை அதிகாரிகள் மற்றும் மாத்தறை மாவட்ட வைத்தியசாலை அதிகாரிகளுடன் அண்மையில் பாராளுமன்ற கட்டட தொகுதியில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு பணிப்புரை வழங்கினார்.



மாத்தறை நகர மக்கள் மற்றும் அங்குவந்து செல்லும் பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி சிறந்த சூழலை உருவாக்குதல் மற்றும் சகல வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்றன இத்திட்டத்தின் நோக்கமாகும். இக் கலந்துரையாடலில் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும, நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உதயநாணயக்கார ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அநுராதபுரம் நகர் பகுதியில் டெங்கு நோய் தீவிரம்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் நகர் பகுதியில் டெங்கு நோய் தீவிரமாக பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாக மாவட்ட தொற்று நோய் பிரிவின் விசேட வைத்தியர் தேஜன சோமதிலக்க தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் மாத்திரம் அநுராதபுரத்தில் பத்து டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அநுராதபுரம் புதிய பஸ்தரிப்பு நிலையம் அமைந்துள்ள பகுதியில் மேலும் மூன்று டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தொற்று நோய் பிரிவின் விசேட வைத்தியர் மேலும் குறிப்பிட்டார்.

அதனை அடுத்து நகரின் புதிய பஸ்தரிப்பு நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கைகளின் போது டெங்கு நுளம்பு உருவாகக் கூடிய குடம்பிகள் (டெங்கு பரவக்கூடிய கீட்ட) அதிகமான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மழையுடனான காலநிலை காணப்படுவதால் இந் நிலமை ஏற்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஜனவரி மாதமாகும் போது இந் நிலமை மாவட்டத்தின் ஏனைய இடங்களுக்கு பரவக்கூடிய வாய்ப்பு அதிகம் என அநுராதபுரம் மாவட்ட தொற்றுநோய் பிரிவின் விசேட வைத்தியர் தேஜன சோமதிலக்க மேலும் தெரிவித்தார்.

வடமத்திய மாகாண வரவு செலவு திட்டத்தில்;

# மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி வறுமையை போக்க கூடுதல் நடவடிக்கை

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஆளுநர் மஹிபால ஹேரத்

2022 வரவு செலவு திட்டத்தின் மூலம் புதிய கட்டட நிர்மானப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் உற்பத்தித்துறையை அதிகரிக்கும் வகையிலும் வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாத ஆளுநர் தெரிவித்தார். வடமத்திய மாகாண 2022 ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட வரவு செலவு திட்டத்தில் மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் கடந்த (30) கையொப்பமிட்டுள்ளார். அதனூடாக மாகாண மக்களின் வறுமையை போக்கவும் மக்களின் ஊட்டச்சத்தை அதிகரிக்கவும் பொருளாதாரத்துறையில் மக்களின் கரத்தை பலப்படுத்தவும் எதிர் பார்க்கப்பட்டுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

2022க்கான வரவு செலவு திட்டத்தில் விவசாய அமைச்சு மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

வடமத்திய மாகாணத்தில் மீன்பிடி மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு துறையை மேலும் 25 வீதத்தினால் மேம்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் அலங்கார மீன் வளர்ப்பு துறைக்கு தேவையான உணவு வகைகளை மாகாணத்தினுள் உற்பத்தி செய்யவுள்ளதுடன். அதற்காக தனியார்துறையினரையும் இணைத்துக் கொண்டு ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளன. மாகாணத்தில் மீன் வளர்ப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்காக 300 குளங்களில் 22 மில்லியன் மீன் குஞ்சுகளை விடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளன.மேலும் மாகாணத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் சிறிய அளவில் கால்நடை கொட்டில்களை அதிகரிக்கவும் அதற்காக கறவைப்பசுக்களை அதிகரிக்கவும் எதிர் பார்க்கப்பட்டுள்ளது.

கோழி குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கு மாகாணத்தினுள் உற்பத்தி நிலையம் ஒன்றின்மையினால் உற்பத்தி நிலையம் ஒன்றை மாகாணத்தில் அமைப்பதற்கும் வரவு செலவு திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது.

# புத்தளம் பொலிஸ் பிரிவில் ஐந்து நாட்களில் 05 வெடிப்புச் சம்பவங்கள்

**கற்பிட்டி தினகரன் விஷேட, புத்தளம் தினகரன் நிருபர்கள்**

சமையல் எரிவாயு கசிவு காரணமாக கடந்த ஐந்து நாட்களில் புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட மூன்று பொலிஸ் பிரிவுகளில் ஐந்து வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக புத்தளம் பொலிஸ் தடயவியல் பிரிவினர் தெரிவித்தனர். இதில் 4 வீடுகளிலும், உணவகம் ஒன்றிலும் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதன்படி, புத்தளம் சோல்ட்டன், நிந்தனி, கரம்பை ஆகிய பகுதியிலும், உடப்பு பொலிஸ் பிரிவில் சின்னப்பாடு பகுதியிலும், கற்பிட்டி பொலிஸ் பிரிவில் மணல் தோட்டம் பகுதியிலும் இவ்வாறு எரிவாயு அடுப்பு வெடித்துள்ளன. சமையல் எரிவாயுவில் ஏற்பட்ட கசிவு காரணமாக கண்ணாடியிலான எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது. மேற்படி வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற வீடுகளுக்கும், உணவகத்திற்கும் சென்று ஆய்வுகள் மற்றும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் புத்தளம் பொலிஸ் தடயவியல் பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.





தேசிய சமாதானப் பேரவையின் வெலிகம பகுதிக்கான இணைப்பாளர் கௌசல்யா வீரகோன் மற்றும் வெலிகம பிரதேச செயலக உதவிச் செயலாளர் அனுர ஆகியோரின் சேவைநலன் பாராட்டு விழா அண்மையில் வெலிகம சமாதான பேரவையினால் நடாத்தப்பட்டது. இதன்போது அவர்களுக்கு பேரவையினால் நினைவுச்சின்னம் வழங்கப்படுவதையும் பேரவை உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

படம்: வெலிகம தினகரன் நிருபர்

# ஒரு இலட்சம் நீள வீதி அமைக்கும் திட்டம் 5 வருட காலத்தில் நிறைவு செய்யப்படும்



ஒரு இலட்சம் நீள வீதி அமைக்கும் திட்டம் ஏற்கெனவே திட்டமிட்டவாறு 5 வருட காலத்தில் நிறைவு செய்யப்படும் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதிஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றிய மேலும் குறிப்பிட்டதாவது

100,000 கிலோமீற்றர் வீதி வலையமைப்பை அமைப்பதற்கு சுமார் 100 வருடங்கள் தேவைப்படும் என முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார். இந்த வீதிக் கட்டமைப்பை நிறைவு செய்ய இவ்வளவு காலம் பிடிக்கும் என்பது அவரது கணிப்பு. அந்த சவாலை நாங்கள் ஏற்க விரும்புகிறோம். கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் இந்த 100 000 கிலோமீற்றர் வேலைத் திட்டம் எமது ஐந்து வருடங்கள் முடிவதற்குள் நிறைவு செய்யப்படும் என நான் உறுதியளிக்கிறேன். எமது ஐந்து வருட ஆட்சிக்காலம் முடிவதற்குள் இந்த 100000 கிலோமீற்றர் வேலைத்திட்டத்தை நிறைவு செய்வோம்.

கடந்த நல்லாட்சி அரசாங்கம் நாட்டில் உள்ள அப்பாவி மக்களின் பணத்தை கொள்ளையடித்த அரசாங்கம். இரண்டு வருடங்களின் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் வெறுப்படைந்தனர். இறுதியாக நல்லாட்சி அரசாங்கத்தை மக்கள் தோற்கடித்தனர். கடந்த இரண்டு வருடங்கள் கடந்தும் நல்லாட்சி அரசாங்கத்தினால் கூட்டுறவுத் தேர்தலில் கூட வெற்றிபெற முடியவில்லை. நல்லாட்சி அரசாங்கம் இருந்த போது நாட்டில் கொவிட் நெருக்கடி இருக்கவில்லை. யுத்தத்தை நிறைவு செய்ய வேண்டியிருக்கவில்லை.

2015 இல், சீனாவுக்கு அடுத்த படியான மிக உயர்ந்த பொருளாதார வளர்ச்சி விகிதத்தைக் கொண்ட நாட்டை தான் ஒப்படைத்தோம். பொருளாதாரத்தை எல்லா வகையிலும் அழித்தார்கள். தொழில்களை அழித்து இளைஞர்களின் எதிர்காலத்தை நாசமாக்கினார்கள். வோக்ஸ்வேகன் தொழிற்சாலையை உருவாக்கி ஒரு மில்லியன் வேலை வாய்ப்பு தருவதாக இளைஞர்களை ஏமாற்றினர். தேர்தலுக்கு பயந்தார்கள். எதிர்க் கட்சி துண்டு துண்டாகி உள்ளது. இப்போது எதிர்க்கட்சிகளை வழிநடத்த பல தலைவர்கள் உருவாகியுள்ளனர். பிரேமதாசவுக்கு எதிராக மூன்று நான்கு அணிகள் இப்போது பாராளுமன்றத்தில் உருவாகியுள்ளன.

பாராளுமன்றத்தில் இருக்க விடுவதில்லை தாக்குகின்றனர் என்று சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்திடம் கூறத்தான் இவர்கள் பாராளுமன்றத்திற்கு வெளியே சென்றார்கள். சர்வதேச சமூகத்திற்கு பொய் எழுதுவதற்காக இவர்கள் வாரக்கணக்கில் பாராளுமன்றம் பொய் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அந்த பொய்கள் பிடிபட்டதும் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கம் 27,000 இலட்சம் செலவிடக் கூடிய பாதை ஒப்பந்தத்தை 42,000 இலட்சத்திற்கு வழங்கப்பட்டது. 40 கிலோ மீட்டரை ரூ.15,000 லட்சத்தினால் அதிகரித்த போது 60 ,70 மில்லியன் ரூபா வரை மேலதிகமாக வழங்கப்பட்ள்ளது. அங்கு மத்திய வங்கியை சூறையாடினார்கள்.இங்கு 50 மில்லியனுக்கு மேல் மோசடி செய்யப்பட்டுள்ளது. முன்னைய நல்லாட்சி அரசாங்கத்திலும் இவ்வாறான ஒரு சில திருடர்கள் இருந்தனர். அது தான் உண்மை.

இப்போது எங்கள் மீது சேறு பூசப் பார்க்கிறார்கள். கடந்த காலத்தில் தொடங்கிய அனைத்து நெடுஞ்சாலை திட்டங்களும் நிறுத்தப்பட்டன.அத்தோ பாரிய மோசடியும் நடந்துள்ளது.

ரூ.66 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலை 6 வழிச்சாலையில் இருந்து 4 வழிச்சாலையாக குறைக்கப்பட்டு அதே தொகைக்கு திருப்பி வழங்கப்பட்டது.

100000 கிமீ திட்டத்திற்கான வீதிகளை அடையாளம் கண்டுள்ளோம். 71 468 வீதிகள் தொடர்பில் கோரிக்கைகள் வந்துள்ளன . அதில் 16705 வீதிகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. 10877 வீதிகள் அமைக்க கேள்வி மனு கோரப்பட்டுள்ளன.

தற்பொழுது 468 கேள்விமனுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அவற்றை வழங்க எதிர்பார்க்கிறோம். மேலும் 54763 வீதிகள் மதிப்பிடப்பட்டுள்ளன. நாங்கள் சுமார் 4000 வீதிகளை நிர்மாணித்துள்ளோம். 1500 வீதிகள் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமையில் திறந்து வைத்தோம். ஆனால் வீதிகள் எங்கே அமைக்கப்படுகின்றன என்று கபீர் ஹாஷிம் வினவினார். ஏனென்றால் கபீர் ஹாசிம் இந்த நாட்களில் வீட்டில் தான் இருக்கிறார். வெளியே செல்ல மாட்டார். கடந்த 10 மாதத்தில் சுமார் 90 பில்லியன் ரூபா செலவிட்டுள்ளோம். இவற்றை காண விரும்பாதவர்கள் தான் எம்மை விமர்சிக்கின்றனர். திட்டத்தை நிறைவு செய்ய 100 வருடம் பிடிக்கும் என்றும் குறிப்பிட்டார். எம்மிடம் 600 பொறியியலாளர்கள் தான் இருந்தார்கள்.புதிதாக 200 பேரை நியமிக்க ஜனாதிபதியும் பிரதமரும் அனுமதி வழங்கியுள்ளனர் என்றார்.

பட்ஜட் விவாதம்



சபை நிருபர்கள்

லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்





**கபீர் ஹாசிம் எம்.பி (ஐக்கிய மக்கள் சக்தி)**

ஒரு இலட்சம் கிலாமீ மீட்டர் வீதி புனரமைப்பு என்பது மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும். ராஜபக்ஷ அரசு கடந்த 10 வருடங்களில் மொத்தமாக 169 கிலோ மீட்டர் தூரத்துக்கே அதிவேக வீதி வேலைகளை மேற்கொண்டிருந்தது வீதி அதிகாரசபையின் மதிப்பீட்டின் பிரகாரம் ஒரு கிலாமீ மீட்டர் வீதி அமைப்பதற்கு சுமார் 20 மில்லியன் ரூபா செலவாகின்றது. அப்படியாயின் இவர்கள் ஒருலட்சம் கிலோ மீட்டர் வீதி அமைப்பதற்கு வருடத்துக்கு 20ஆயிரம் கிலோ மீட்டர் அமைக்கவேண்டும்.

தற்போதைய அரசு அதிவேகப் பாதைகளை நிர்மாணித்து திறந்துவருவதாக கூறுகிறது. ஆனால் 2005இல் இருந்து 2015 வரைக்குமான 10 வருடங்களில் 169 கிலோ மீட்டர் தூரமே அதிவேக பாதை நிர்மாண வேலைகளை செய்திருக்கின்றது. ஆனால் எமது அரசாங்கம் நான்கரை வருட காலத்தில் 118 கிலோ மீட்டர் தூரம் அதிவேக வீதி வேலைகளை பூரணப்படுத்தி இருக்கின்றோம். புதிய களனி பாலத்துக்கு அடிக்கல் வைத்து அதன் 90 வீத வேலைகளை நாங்கள் எமது ஆட்சிக்காலத்தில் முடித்திருந்தோம். ஆனால் 10வீத வேலையை செய்துமுடிப்பதற்கு இந்த அரசு க்கு 2வருடங்கள் பிடித்துள்ளது.

5வருடங்களில் ஒரு இலட்சம் கிலோ மீட்டர் வீதி அமைப்பதாக இந்த அரசு தெரிவித்துள்ளது. நாட்டில் மொத்தமாக அனைத்து வகையான வீதி களை எடுத்துக் கொண்டாலும் ஒரு இலட்சத்தி 16ஆயிரம் கிலாமீட்டர் தூர வீதியே இருக்கின்றது. அடுத்த வருடத்துக்கு 25ஆயிரம் கிலாமீ மீட்டர் வீதி அபிவிருத்தி செய்வதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். ஆனால் அதற்காக 9200 கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் தெரிவிப்பதுபோல் வீதி அபிவிருத்தி செய்வதாக இருந்தால் ஒரு வருடத்துக்கு 37500கோடி ரூபா ஒதுக்கி இருக்க வேண்டும்.

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எம்.பி செல்வராசா கஜேந்திரன்**

புகையிரத வீதிகள், நெடுஞ்சாலைகள், மற்றும் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும்போது மழை வெள்ளப்பெருக்கின்றோது எமது சமூகம் பாரதூரமான அழிவுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

தென்னிலங்கையைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் வடக்கு கிழக்கில் இவ்வாறான பாதிப்புக்களை நாம் நடைமுறை ரீதியாகச் சந்தித்துள்ளோம்.

குறிப்பாக 2009 இல் இனவழிப்பு மூலம் உங்களால் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், வடக்கு புகையிரதவீதி அபிவிருத்தியானது அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு புகையிரதவீதி அமைக்கும்போது, நீர்த்தேக்கங்களது அணைபோன்று பல இடங்களில் அணைகள் போடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பாரிய அணைகளை அமைத்து புகையிரத வீதியை அமைக்கும்போது, எத்தகைய அமைவிடத்தினூடாக அந்த வீதி அமைக்கப்படுகின்றது, மழைவெள்ளம் வரும்போது அந்த வெள்ளம் எப்படி வெளியேறிச் செல்லும் என்பது தொடர்பான எந்தவித திட்டமிடல்களோ, சிந்தனையோ இல்லாமல் புகையிரத வீதி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் பாரிய வெள்ள அழிவுகளுக்கு வடக்கு மாகாணம் முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்துத்துறை ஊழல் நிறைந்ததாக உள்ளது. தகுதியற்ற அரசியல் நியமனங்கள் காரணமாக போக்குவரத்துத் துறை பாரிய சீர்கேடுகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றது. அரசியல் கட்சிகள் சார்ந்த தொழிற்சங்கங்களினால் பாரிய பிரச்சனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அரசியல் தலையீடு காரணமாக தகுதியாற்றவர்கள் உயர் பதவிகளிலும், தகுதியானவர்கள் கீழான பதவிகளிலும் அமர்த்தப்பட்டுள்ளார்கள். ஊழியர்களுக்கிடையில் பாரிய முட்டிமோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

# கிழக்கின் குரல்



**தாயின் உடல் பாகங்களை தானம் செய்ய முன்வந்த பிள்ளைகள்;**

# திருமலை வைத்தியசாலைக்கு விஷேட வைத்திய குழு விஜயம்

(றொட்டவெவ குறூப் நிருபர்)

தாயின் உடல் பாகங்களை தானம் செய்ய முன்வந்துள்ள நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொழும்பு தேசிய வைத்திய சாலையில் இருந்து விசேட வைத்திய குழுவொன்று ஹெலிகொப்டர் மூலம் சனிக்கிழமை (04) விஜயம் செய்தனர்.

திருகோணமலை பொது வைத்திய சாலை தனியார் கம்பெனியொன்றில் கடமையாற்றி வரும் சுத்திகரிப்பு தொழிலாளியான குறித்த பெண் அதிக இரத்த அழுத்தம் காரணமாக நரம்பு வெடித்து அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், குறித்த பெண் செயற்கை சுவாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில் அவரை காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக குடும்பத்தினருக்கு வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர். ஆனாலும் உடலில் அனைத்து பாகங்களும் ஒழுங்காக செயற்பட்டு வருவதாகவும், தலையிலுள்ள நரம்பில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.





இதேவேளை இப்பெண்ணின் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் இவரை காப்பாற்ற முடியாவிட்டாலும், இவரால் யாராவது நன்மை பெற வேண்டும் என்ற நோக்கில், குறித்த பெண்ணின் உடற் பாகங்களான சிறுநீரகம் மற்றும் இருதயம் போன்றவற்றை தானம் செய்வதற்கு முன்வந்துள்ளதாக திருகோணமலை பொது வைத்தியசாலை நிர்வாகத்திடம் தெரியப்படுத்தியுள்ளனர். இதனையடுத்து அப் பெண்ணின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் வேண்டுகோளின்படி, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு தெரியப்படுத்தியதையடுத்து சனிக்கிழமை (04) கொழும்பிலிருந்து வைத்தியர் குழுவொன்று விஷேட ஹெலிக்கொப்டர் மூலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு வருகை தந்தனர். திருகோணமலை பொது வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலாவெளி ஆறாம் கட்டை இரண்டாவது ஒழுங்கையில் வசித்து வந்த டி.சசிரேகா (41 வயது) சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவரது பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் அனுமதியுடன் இரண்டு சிறுநீரகங்களுடன் , இருதயம் ஆகியவை பெறப்பட்டுள்ளதாக விசேட வைத்திய குழுவின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

கணவரை இழந்த நிலையில் இரண்டு பிள்ளைகளையும் வளர்க்கும் நோக்கில் திருகோணமலை பொது வைத்தியசாலை தனியார் சுத்திகரிப்பு தொழிலாளியாக கடமையாற்றி வந்த நிலையில் அதிக இரத்த அழுத்தம் காரணமாக நரம்பு வெடித்துள்ளதாக வைத்தியசாலையின் பொறுப்பு வாய்ந்த வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

## மூதூரில் கலாசார மண்டபம் அமைக்க திட்டம்

(மூதூர் தினகரன் நிருபர்)

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்சின் உள்ளூர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மூதூரில் கலாசார மண்டபத்துடன் கூடிய கடைத் தொகுதி அமைக்கப் படவுள்ளதாக மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம். ஏ.அரூஸ் வெள்ளிக்கிழமை (03) தெரிவித்தார்.

மேலும் இக் கலாசார மண்டபம் 02 கோடி 30 இலட்சம் ரூபா நிதியில் அமையப் பெற உள்ளதுடன், இதனுடன் இணைந்த புதிய கடைத்தொகுதிகளும் அமைக்கப் பட உள்ளன.

மேலும் இத்திட்டத்தின் மற்றுமோர் நிதியின் ஊடாக மூதூர் பொழுதுபோக்கு பூங்கா, தோப்பூர் கட்டைபறிச்சான் மற்றும் சம்பூர் ஆகிய உப பிரதேச சபை பிரிவில் உள்ள பூங்காக்களில் உடற்பயிற்சி உபகரணம் பொருத்துதல், உட்கட்டமைப்பு வசதிகள், நீர், மலசலகூட வசதிகள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஞானசார தேரர் தலைமையிலான குழு கல்முனைக்கு விஜயம்

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளரும் ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவருமான கலகொட அத்தே ஞானசார தேரர் சனிக்கிழமை (04) இரவு கல்முனை பகுதியில் அமைந்துள்ள இரு வேறு இடங்களிற்கு கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் விஜயம் மேற்கொண்டார்.

ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் மக்கள் கருத்தறியும் செயலமர்வுகள் கிழக்கு மாகாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற நிலையில் இவர் தலைமையிலான குழுவினர் கல்முனை பகுதிகளுக்கு விஜயம் செய்தனர் .

இதன்போது கல்முனை தாருஸ்ஸபா நிறுவனத்தின் அழைப்பை ஏற்று வருகை தந்த இக்குழுவினர், அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கல்முனை முஸ்லிம் முக்கியஸ்த்தர்களுடனான கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். இதன் போது கல்முனை வர்த்தக சங்க பிரதிநிதிகள் உட்பட சமூக சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதன் போது கல்முனையின் சமகாலத் தேவைகள் பற்றிய மகஜரொன்றும் இவரிடம் கையளிக்கப்பட்டதுடன், நினைவுச் சின்னமும் வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.எனினும் அங்கு ஊடகங்களுக்கு செய்தி சேகரிக்க அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.



பின்னர் அங்கிருந்து வெளியேறிய ஞானசார தேரரை இடைமறித்து ஊடகவியலாளர்கள் விஜயத்தின் நோக்கம் தொடர்பில் வினவினர்.

இதன் போது ஊடகங்கள் மக்களிடம் உண்மையான விடயங்களை அறிக்கையிட வேண்டும் எனவும், தவறான தகவல்களை பரப்பி சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டார். இதே வேளை கல்முனை கடற்கரைப்பள்ளி நாகூர் ஆண்டகை தர்காவுக்கும் சென்று அதனையும் பார்வையிட்டார். இந்நிகழ்வில்

தாருஸ்ஸபா நிறுவனத்தின் தலைவர் மௌலவி ஸபானிஸ் உஸ்தாத் சபா முஹம்மத், ஜனாதிபதி செயலணி உறுப்பினர் சிரேஷ்ட விரிவுரையாளர் முபிஸால் அபூபக்கர் மற்றும் கல்முனை வர்த்தக சங்கத்தின் தலைவர் கே.எம்.எம்.சித்தீக் மற்றும் வபா பாரூக்,நசீர் ஹாஜியார் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

**பாறுக் ஷிஹான்**

# எல்லைகள் பிரிக்கப்படுவதை ஒருபோதும் ஏற்க முடியாது

**கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பிரசாந்தன்**

(மண்டூர் குறூப் நிருபர் )



பிரதேச செயலகங்களுக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கையினை குறைத்து, எஞ்சிய பிரிவுகளை இணைத்து எல்லைகள் பிரிக்கப்படுவதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

எல்லைகள் நிர்ணயம் செய்வது தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

ஒவ்வொரு பிரதேச செயலக மட்டங்களிலும், கிராம சேவையாளர் பிரிவுகளை குறைத்து எல்லைகள் நிர்ணயம் செய்வது தொடர்பான ஆலோசனைகள் இடம்பெற்று வருகிறது. அவ்வாறு எல்லைகள் நிர்ணயம் செய்யப்படுவதனால் அபிவிருத்திக்கென வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்பட்டு மக்களுக்கான பொது வசதிகள் முற்றாக பாதிப்படைய வாய்ப்புள்ளது.

அரச உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் குடும்பநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட அரச சேவையாளர்களின் ஆளணி மட்டுப்படுத்தப்பட்டு வேலையற்றோர் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

எல்லைகள் நிர்ணயம் செய்யப்படுவதனால் குறித்த கிராமத்தின் கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய தனித்துவ கோட்பாடுகள் பாதிக்கப்படுவதுடன், கிராம மட்ட அமைப்புகள், தலைமைத்துவம் என்பவற்றில் பாரிய விரிசலை ஏற்படுத்தும். இது சமூகத்தின் நிலைபேறான வலுவாக்க அபிவிருத்திக்கு அப்பால், நீண்ட பிரிவினையை ஏற்படுத்தும். அது மட்டுமல்லாது, கிராம மக்கள் தமது அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் பெரும் சிரமப்படவேண்டி ஏற்படும். எனவே, இதனை தடுத்து நிறுத்தி தற்போதுள்ளவாறு நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

**கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில்**

# ஆயுர்வேத துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல்

கிண்ணியா மத்திய நிருபர்

கிழக்கு மாகாணத்தில் ஆயுர்வேதத் துறையை தனியார் துறையுடன் இணைந்து அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் சனிக்கிழமை (04) இடம்பெற்றது.



திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், ஆளுநரின் இணைப்புச் செயலாளர் பி.வி.எச்.சிந்தக்க விஜயவரத்தன, ஆளுநர் செலயக செயலாளர் எல்.பி.மதநாயக்க, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம். அன்சார், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி இ.ஸ்ரீதர், தேசிய ஆயுர்வேத நிறைவேற்று தவிசாளர் தெங்கமுவ நாலக தேரர், கிழக்கு மாகாண ஆயுர்வேத அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பல திட்டங்களை பற்றிய பல விடயங்களை கிழக்கு மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி இ.ஸ்ரீதர் ஆளுநரின் கவனத்திற்கு இதன்போது கொண்டுவந்தார். ஆயுர்வேதத் துறையை அபிவிருத்தி செய்ய தனியார் துறையின் பங்களிப்புக்கள் மிகவும் இன்றியமையாதவையாக இருக்கின்றது. அதனால் அவர்களின் பங்களிப்புக்கள் எமக்குத் தேவையாக இருக்கின்றது. எனவே, ஆயுர்வேதத் துறையை தனியார் துறையுடன் இணைந்து அவிருத்தி செய்தல் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் ஆயுர்வேத அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய பல தீர்மானங்களும் இன்றைய கலந்துரையாடலின்போது கிழக்கு மாகாண ஆளுநரினால் எடுக்கப்பட்டது.

# காரைதீவில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு பூஸ்டர்

(காரைதீவு குறூப் நிருபர்)



காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட கிராமங்களில் வாழும், 60 வயதுக்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலாருக்கும் கொரோனா 3வது பூஸ்டர் தடுப்பூசியாக "பைசர்" தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது.

முதலிரண்டு தடுப்பூசிகளை ஏற்றி 3 மாதம் கடந்தவர்களுக்கே இப் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தலைமையிலான குழுவினர் கடந்த 3 தினங்களாக சுமார் 650 பேருக்கு தடுப்பூசிகளை ஏற்றியுள்ளனர்.

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி ஆகிய இடங்களிலும் இச் செயற்பாடு நடைபெற்றது. "எனினும் முதலிரண்டு தடுப்பூசியைப் பெறுவதில் மக்கள் காட்டிய ஆர்வம் இந்த 3 வது பூஸ்டர் ஊசி ஏற்றுவதில் போதுமானளவு இல்லை. அதனால் நாம் ஒலிபெருக்கிமூலம் கிராமங்களில் விழிப்புணர்வுசெய்ய நேரிட்டது என காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# நன்னீர் மீன்பிடியாளர்களின் வசதிகருதி புதிய சந்தைக்கு அடிக்கல்

மட்டக்களப்பு விசேட நிருபர்



நன்னீர் மின்பிடியாளர்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் சுபிட்சத்தின் நோக்கு அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மண்முனைப் பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மண்முனை பாலத்தின் அருகில் மீன் சந்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு சனிக்கிழமை (04) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தனின் முயற்சியினால், மாகாண சபைகள் அமைச்சின் நிதி உதவியுடன் ரூபாய் 15 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள சந்தைக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தனினால் அடிக்கல் நாட்டப்பட்டது.

மழை மற்றும் வெயில் நேரங்களில் மீன்பிடியாளர்கள் பிடிக்கும் மீன்கள், நண்டு மற்றும் இறால் என்பனவற்றை சந்தைப்படுத்துவதற்கான இடத்திற்கான ஆரம்ப நிகழ்வில் மண்முனைப் பற்று பிரதேச சபையின் தவிசாளர் ரி. தயானந்தன், கட்சியின் பிரதேச அமைப்பாளர் எஸ்.ஜேக்கப் மற்றும் ஆற்றல் பேரவையின் செயலாளர் எஸ். கிஸ்கந்தமுதலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆற்றுப்படுகையை பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் மர நடுகை

(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)

நாடளாவிய ரீதியில் நடைமுறை படுத்தப்பட்டுவரும் ஜனாதிபதியின் இயற்கை வளங்களை பாதுகாக்கும்'சுரக்கிமு கங்கா ' வேலைத் திட்டம் 'நிலைபேறான சூழலியல் முகாமைத்துவம்' எனும் கருப்பொருளின் கீழ் நாடுபூராகவும் உள்ள 103 ஆறுகளின் ஆற்றுப்படுகையை பாதுகாக்கும் வேலைத் திட்டத்தில் அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்லோயா ஆற்றைப் பாதுகாக்கும் நோக்குடன் இவ்வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு சம்மாந்துறை வளத்தாப்பிட்டி கிராமத்தில் சனிக்கிழமை (04) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல்.எம். ஹனீபா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல். பண்டார நாயக்க, கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் எம்.சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு அதிதிகளாக அம்பாறை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபை உதவிப் பணிப்பாளர் எஸ்.உதயராஜன், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஏ.எம் நௌசாட், சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யு.எம் அஸ்லம் ஆகியோருடன் விஷேட அதிதிகளாக சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் எம். எஸ்.எம். நவாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இவ்வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக ஆறு மற்றும் ஆற்றுப்படுகைகளை பாதுகாப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய இருவருக்கு விளக்கமறியல்

(ஒலுவில் விசேட , அக்கரைப்பற்று மேற்கு நிருபர்கள்)

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில், கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 17ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா சனிக்கிழமை (04) உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அக்கரைப்பற்று நீதிமன்றின் கட்டளைக்கமைய சந்தேக நபர்களை 07 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்து வந்ததாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ.எம்.எஸ்.பி. விஜயதுங்க தெரிவித்தார்.

பொலிஸ் நிலைய பெரும் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மஜீட் தலைமையிலான பொலிஸ் குழுவினர் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது 3320 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, அவர்களால் வழங்கப்பட்ட வாய்மொழி மூலத்திற்கமைய 25 பவுண் தங்க நகைகள் மற்றும் திருட்டுச் சம்பவத்திற்கு பயன்படுத்திய முச்சக்கரவண்டி, திருடப்பட்ட 03 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை கைப்பற்றியுள்ளனர்.

# கிழக்கில் 16 விற்பனை நிலையங்களை திறக்க கூட்டுறவு அமைச்சு நிதியுதவி

## -மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

(பாலமுனை விசேட நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் 16 கோப்பிரஸ் பல்பொருள் விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கு மத்திய கூட்டுறவு அமைச்சு 80 இலட்சம் ரூபா நிதியினை வழங்கவுள்ளதாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம். அஸ்மி தெரிவித்தார்.

சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 50வது வருட பூர்த்தியினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பொன்விழா நிகழ்வுகள் வியாழக்கிழமை (2) சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவு சங்கம் ஐம்பதாண்டு பொன் விழாவை கொண்டாடுவதையிட்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். இக்கூட்டுறவு சங்கமானது ஏனைய சங்கங்களுக்கு முன்மாதிரியாக செயற்பட்டு வருவது பாராட்டத்தக்க விடயமாகும். கிழக்கு மாகாணத்தில் முதலாவது கோப்பிரஸ் பல்பொருள் விற்பனை நிலையத்தை இச்சங்கத்தினூடாக சாய்ந்தமருதிலேயே திறந்து வைத்துள்ளோம்.



கூட்டுறவின் கொள்கைகளில் சமூக மேம்பாடு மிக முக்கியமானதாகும். இதனடிப்படையிலேதான் முன்பள்ளி மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றோம். இதுபோன்ற இன்னும் பல சமூகப் பணிகளை கூட்டுறவுச் சங்கங்களினூடாக செயற்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

வியாபார நடடிக்கைகளுக்கு அப்பால் இச்சங்கத்தின் இச் செயற்பாடுகள் பாராட்டத்தக்கதாகும். கல்முனை பிராந்தியத்திற்கான தாய் சங்கமாக சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கமே செயற்பட்டு வருகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் எதற்காக ஸ்தாபிக்கப்பட்டதோ அதன் இலக்கு அடையப்பட வேண்டும்.

கிழக்கில் 16 கோப்பிரஸ் பல்பொருள் விற்பனை நிலையங்களை திறப்பதற்கு மத்திய கூட்டுறவு அமைச்சிடம் நிதியினைக் கோரியுள்ளோம். எமது கோரிக்கைககள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்குரிய நிதிகளை வழங்குவதற்கு அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



நூலக கல்விசாரா உத்தியோகத்தர்களின் " நூலக நலன்புரி அமைப்பு " நிர்வாகிகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட வருடாந்த பொதுச் சபைக் கூட்டமும், பிரியாவிடை நிகழ்வும் அமைப்பின் தலைவர் சி.எம்.முனாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது நூலக சேவையின் உதவிப் பதிவாளர் பி.முருகவேல் ஓய்வு பெற்றுச் செல்வதனை முன்னிட்டு, சக ஊழியர்களினால் அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்த போது. (படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

## குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் மற்றுமொரு பெண் மரணம்

(ரொட்டவெவ குரூப் நிருபர் )

திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்துடன் தொடர்புடைய மற்றுமொரு பெண்ணொருவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சனிக்கிழமை (04) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான சக்கரிய்யா காலிஸா (42 வயது) என பொலிசார் தெரிவித்தனர். கடந்த நவம்பர் மாதம் 23ஆம் திகதி குறிஞ்சாக்கேணி இழுவை படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கிய நிலையில் படுகாயமடைந்த பெண்ணொருவர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலைக்கும் திருகோணமலையிலிருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டு , அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.

## கடலில் நீராடிய இரு மாணவர்கள் உயிரிழப்பு

தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாழைத்தோட்டப் பிரதேச கடலில் நீராடிக் கொண்டிருந்த இரண்டு பாடசாலை மாணவர்கள் பரிதாபமாக நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் வெள்ளிக்கிழமை (3) இடம்பெற்றுள்ளது.

பாடசாலை விட்டுச் செல்லும் போது நான்கு சிறுவர்கள் வாழைத்தோட்டப் பிரதேச கடலில் குளித்த நிலையில், இதில் இரண்டு சிறுவர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கியுள்ளனர். இதன்போது உயிர் தப்பிய ஏனைய இரண்டு சிறுவர்களும் பிரதேச மக்களிடம் சம்பவம் குறித்து தெரிவித்ததையடுத்து, பொதுமக்கள் கடலில் தேடியபோது இரண்டு சிறுவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் தரம் 09 இல் கல்வி கற்கும் யோகேந்திர ராசா லக்சன் வயது (14) , தரம் 06 இல் கல்வி கற்கும் டினேஸ்காந்த் நிம்ரோசன் வயது (12) ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொண்டதை அடுத்து ஞாயிற்றுக்கிழமை (5) வாழைத்தோட்ட இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட ஜாயா நகர் கிராம சேவகர் பிரிவில், டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதையடுத்து அப்பகுதியில் புகைவிசிறும் பணி இடம்பெறுவதை காணலாம். (படம்; மூதூர் தினகரன் நிருபர்)

## மட்டக்களப்பில் புகையிரதம் மோதி ஒருவர் பலி

(கல்லடி குறூப் நிருபர்)

மட்டக்களப்பு திராய்மடு பகுதியில் ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை (04) இரவு 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மூன்றாம் குறுக்கு, திராய்மடு பிரதேசத்தை சேர்ந்த 43 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையான சேனாதிபதி அசோக்குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி சனிக்கிழமை இரவு 8.45 மணிக்கு சென்ற ரயிலுடன் மோதி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. குறித்த சடலத்தை நேரில் சென்று பார்வையிட்ட திடீர் மரண விசாணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிசாரிற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காத்தான்குடியில் வாயு அடுப்பு வெடிப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காத்தான்குடியில் வாயு அடுப்பு ஒன்று வெள்ளிக்கிழமை (3) வெடித்துள்ளது.



புதிய காத்தான்குடி மீன் பிடி இலாகா வீதியிலுள்ள வீடு ஒன்றில் கேஸ் எரிவாயுவில் பொருத்தப்பட்டிருந்த அடுப்பே வெடித்துள்ளது.குறித்த வீட்டில் சமையல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இந்த அடுப்பு வெடித்ததாகவும், இதையடுத்து அடுப்பு முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதனால் வீட்டில் இருந்த எவருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை.

இதையடுத்து குறித்த வீட்டார் காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்தியதையடுத்து, பொலிசார் இங்கு சென்று ஆரம்ப கட்ட விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

# இலங்கை வங்கி

## ஆர்வத்தை வெளிப்படுத்தல் (EOI)

### மக்கள் தொடர்புகள் மற்றும் விளம்பர நிறுவனங்கள்

(PUBLIC RELATIONS AND PUBLICITY AGENCIES)

### ஆர்வத்தை வெளிப்படுத்தல் இல. P/PROC/2021/272

இலங்கையின் முதற்தர வங்கியான இலங்கை வங்கியானது அதன் வேலைகளை தேவைப்படும்போது செய்வதற்கு மக்கள் தொடர்புகள் மற்றும் விளம்பர நிறுவனங்களிடமருந்து சேவையினைப் பெற விரும்புகின்றது.

ஆர்வத்தை வெளிப்படுத்த எதிர்பார்ப்பவர்கள் கீழ்க்கண்ட தகைமைகளை உடையவர்களாகக் காணப்பட வேண்டும். இத் தகவல்களை வழங்கத் தவறுபவர்களின் முன்மெழிதல்களானது நிராகரிக்கப்படும்.

**மக்கள் தொடர்புகள் மற்றும் விளம்பர நிறுவனங்கள்**

- குறிப்பிட்ட தலைப்பில் குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகால அனுபவம்.
- சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் எழுதக் கூடிய எழுத்தாளர் ஒருவரையாவது குறைந்தபட்சம் கொண்டிருக்க வேண்டும். (இவ் விடயத்துடன் தொடர்புடைய ஆகக் குறைந்தது மூன்று கட்டுரைகளை இணைக்கவும்)

திருப்பிச் செலுத்தாக் கட்டணமான 3,780.00 ரூபாவைச் (3,500.00 + 280.00 பெ.சே.வரியுடன்) செலுத்தி ஆர்வத்தை வெளிப்படுத்துவோர் (EOI) தகவற் படிவத்தினை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", இலங்கை வங்கித் தலைமையகம், 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம்.

| | | |
|---|---|---|
| ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் இறுதித் திகதியும் நேரமும் | : | 2021.12.27 1400 மணி வரை |
| ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் நேரம் | : | 0900 மணி முதல் 1400 மணி வரை |
| ஏலவிலை கூறல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் | : | 2021.12.28 1000 மணி வரை |

குறிப்பிட்ட திகதி மற்றும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கும் ஏலவிலை கூறல்கள் நிராகரிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்படும்.

முத்திரையிடப்பட்ட விலைகூறல்களின் இடப்பக்க மேல் மூலையில் "ஆர்வத்தினை வெளிப்படுத்தல் இல. P/PROC/2021/272 மற்றும் மக்கள் தொடர்புகள் மற்றும் விளம்பர நிறுவனங்களைத் தெரிவுசெய்வதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

இறுதி முடிவானது வங்கியினாலேயே மேற்கொள்ளப்படும் மற்றும் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும், உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

தெரிவுசெய்யப்படும் நிறுவனமானது வங்கியுடன் மேற்குறிப்பிட்ட சேவைகளை வழங்குவதற்காக வங்கியுடன் பதியப்படுவதுடன் முன்மொழிதல்கள் வங்கியின் தேவைக்கமைய பயன்படுத்தப்படும்

வங்கியின் தேவைக்கென நிறுவனங்களினால் உருவாக்கப்பட்டு மற்றும் உற்பத்தி செய்யப்பட்டு வங்கியினால் பணம் செலுத்தப்படும் பொருட்களின் பதிப்புரிமை மற்றும் உரிமைகள் போன்றன வங்கியின் சொத்தாகக் கணிக்கப்படும்.

தெரிவுசெய்யப்படும் நிறுவனமானது வங்கியுடன் இரண்டு வருடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வங்கியுடன் பதியப்படும்

*எந்த விதத்திலேனும் ஆதரவு திரட்டுவதானது தகுதி நீக்கத்திற்குக் காரணமாக அமையும்.*

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம்,
இலங்கை வங்கி தலைமையலுவலகக் கட்டடம்,
இல.01, "இலங்கை வங்கிச் சதுக்கம்",
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.

# கம்பஹா பிரதேச சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பெறுகை இலக்கம்: FDS/01/2021

01. கம்பஹா பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பெறுகை வகைப்படுத்தல்கள் | பெறுகைக்கு இயைபான மூலப்பொருட்கள் / துணைப்பாங்கள் / உபகரணங்களின் தகவல்கள் | பெறுகையின் சராசரி பெறுமதி |
|---|---|---|---|
| 1 | கட்டிட நிர்மாணப் பொருட்கள் | அஸ்பெஸ்டர் சீட் 8' ,10', 12', 6'<br>சீமெந்து மூட்டைகள் (50 கி.) | 2,400,000.00 |
| 2 | பாடசாலை உபகரணங்கள் | அப்பியாசக் கொப்பிகள் (60,80,120,200 பக்கங்கள்)<br>CR கொப்பி (80 பக்கம்)<br>டிரோயிக் கொப்பி (120 பக்கம்)<br>வர்ண பென்சில்கள்<br>கணித உபகரணப் பெட்டி, கட்டர், பேனை, பென்சில், அழிஇறப்பர், அடிமட்டம், பாடசாலை பைகள், உணவுப் பெட்டிகள் | 3,000,000.00 |
| 3 | உற்சவப் பொருட்கள் | கெனபி ஹட் (10'x10' / 10'x15' / 10'x20' /20'x20')<br>தகர ஹட் (10'x15' / 10'x20')<br>கெனபி ஹட்களுக்கான கெனபி துணிகள் (மேற்புற துணி சகிதம்) (10'x10' / 10'x15' / 10'x20' /20'x20')<br>தகர ஹட்களுக்கான துணி (10'x15' / 10'x20')<br>வெள்ளை நில பாலக் கொடிகள் (15',16',18',20')<br>சிறிய வெள்ளைக் கொடிகள் (7 ½')<br>வாகனம் கழுவும் இயந்திரம்<br>கொடிக் கம்பம் 1" , கொடிக் கம்பம் ¾" (GI குழாய்கள்)<br>ஸ்பீக்கர் செட்கள் / அம்ப்ளிபயர்<br>மைக், மைக் ஸ்டான்ட்கள்<br>கொண்டு செல்லக்கூடிய பபள் செட் (3 In 1)<br>LED பிளேஷர் செட் 200W<br>பெரிய கேஸ் அடுப்புகள்<br>ராஸ் பேன் (அண்டா) (கிலோ 10, 25, 30, 50)<br>வட்ட பு.:.பே பாத்திரம் ( 3L / 5L / 7L / 10L)<br>சதுர பு.:.பே பாத்திரம் ( 5L / 7L / 10L)<br>மின்சார தேங்காய் துருவி<br>பார்ட்டி குடைகள்<br>வெள்ளை போசலின் பீங்கான்கள்<br>கைப்பிடியுடனான பிளாஸ்டிக் கதிரைகள்<br>கைப்பிடியற்ற பிளாஸ்டிக் கதிரைகள்<br>வெள்ளியிரும்புக் கரண்டிகள்<br>நெஸ்கபே இயந்திரங்கள் | 5,120,000.00 |
| 4 | சுயதொழில் உபகரணங்கள் | புல் வெட்டும் இயந்திரங்கள்<br>தையல் இயந்திரங்கள்<br>மண்வெட்டிகள் (தரை/சேறு)<br>தாச்சி<br>வேல்டிங் பிளான்ட்<br>கிறில் இயந்திரம் | 776,000.00 |
| 5 | நூலக உபகரணங்கள் | உருக்கு புத்தக அலுமாரி<br>உருக்கு புத்தக ராக்கைகள் | 80,000.00 |

02. விலைகள் கோரப்படுவதானது தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் பிரகாரமாகும்.

03. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2021-12-04ஆம் திகதி முதல் 2021-12-24ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவிற்கு வருகை தந்து பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் வேலை அத்தியட்சகரிடமிருந்து (033-2222020/033-2220145) பெற்றுக்கொள்ளலாம்.

04. 2021-12-04ஆம் திகதி முதல் 2021-12-24ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா (ஆயிரம் ரூபா) கட்டணத்தைச் செலுத்தி எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து அபிவிருத்திப் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனத் தயாரித்து 2021-12-27ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்த, முதுன்கொட'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கம்பஹா பிரதேச சபையின் தலைமை அலுவலக செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். பெறுகையின் இலக்கம், செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்தவுடன் வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் / முகவர்களின் முன்னிலையில் கம்பஹா பிரதேச சபை கேட்போர்கூடத்தில் திறக்கப்படும்.

06. ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்கோரலின் பிரகாரம் கட்டளையிடப்படும் பொருட்களை (மூலப்பொருட்கள் / துணைப்பாகங்கள் / உபகரணங்கள்) இலவசமாக இந்த நிறுவனத்திற்குப் போக்குவரத்து செய்து வழங்குதல் வேண்டும்.

07. வழங்கல்களுக்கு இயைபான பற்றுச்சீட்டுகள் (Bill) பரிந்துரைக்கப்பட்ட விபரக்குறிப்புகளுடன் ஒத்தவையாக இருந்தால் மட்டுமே தீர்வை செய்யப்படும்.

08. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2022-03-01ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

09. உங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உருப்படிக்கு இயைபான மாதிரிகளை மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. தருவித்தற் கட்டளையிடப்பட்ட நாள் முதல் இரு வார காலத்திற்குள் வழங்கல்களை பூர்த்தி செய்தல் வேண்டும் என்பதுடன் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல் தேவையின் அடிப்படையில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும்.

11. ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்கோரலுக்குப் புறம்பாக அதற்கு இயைபான பெறுமதி சேர் வரி (வெட்) இந்த நிறுவனத்தினால் செலுத்தப்படமாட்டாது.

12. இந்த விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது சகல விலைமனுக்களையும் நிராகரிக்கும் அதிகாரத்தை பிரதேச சபையின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தேசபந்து ரஞ்சன் குணவர்தன,**
**தலைவர் / பெறுகைக் குழுவின் தலைவர்,**
**கம்பஹா பிரதேச சபை.**

2021-12-03ஆம் திகதி,
**கம்பஹா பிரதேச சபையில்.**

# கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல்,
கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள்
மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

NAQDA

**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனு கோரல்

## பெறுகை அறிவித்தல்

01. இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை தலைவரினால் கீழ்க குறிப்பிடப்பட்டுள்ள கொள்முதல் சேவைகளை வழங்க தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் | மனுப் பாதுகாப்பு தொகை (SLR) மற்றும் செல்லுடியாகும் காலம் | மீளச் செலுத்தப்படாத கட்டண பெறுமதி (SLR) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் இறுதி திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி / நேரம் |
|---|---|---|---|---|
| NQ/DPC/2021/NCB/G/17 மீன் உணவு கொள்முதல் மற்றும் விநியோகம் மற்றும் வழங்கல்<br>(அ) நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள ஒவ்வொரு மீன்வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்களுக்கும் மாதாந்த அடிப்படையில் வழங்கல் மற்றும் விநியோகித்தல்.<br>(ஆ) மாதமொன்றிற்கு தேவையான உணவு அண்ணளவாக 34,000 கி.கி. | மனு பாதுகாப்பு தொகை மனு ஆவணத்தில் ITB பிரிவு 20.2 பிரிவு II - மனு தரவுதாள் (BDS) கீழ் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது | 5,000.00 | 2021.12.27<br>பி.ப.3.00 | 2021.12.28<br>பி.ப.2.00 |

02. மீன் உணவுத் தேவையானது தேசிய அளவில் அல்லது பிராந்திய அளவில் தகுதியான மனுதாரர்களால் மொத்தமாக மீன் உணவு அளவு அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட மீன் உணவு வாரியாக அல்லது இடம் வாரியாக வழங்கப்படும். மனு ஆவணத்தின் மனு தரவுத் தாள் (BDS) இன் கீழ் பிரிவு II - ITB Clause பிரிவு 35.5 இல் தேசிய மட்டத்திலான மனுதாரர்கள் மற்றும் பிராந்திய மட்டத்திலான மனுதாரர்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

03. தகுதியான அனைத்து மனுதாரர்களும் உதவிப் பணிப்பாளர் (நன்னீர்) (தொலைபேசி : 071 445 3333 / 011 278 6544 / 6495, தொலைநகல் : 011 278 6493 / 6575, adfw@naqda.gov.lk) மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதுடன், மேலும் www.naqda.gov.lk எனும் இணையதளம் மூலமாக மற்றும் **2021.12.06 ஆம் திகதி முதல் 2021.12.27 ஆம் திகதி வரை மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரை அலுவலக நேரங்களில் மனு ஆவணங்களை சரிபார்க்கலாம். மனுத்தொடர்பான முன்மனுக் கூட்டம் **2021.12.17 ஆம் திகதி மு.ப.11.00** மணிக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் கூட்டம் இடம்பெறும் மண்டபத்தில் நடைபெறும்.

04. தகுதிவாய்ந்த மனுதாரர்கள் மேற்குறிபிடப்பட்ட காலஎல்லைக்குள் மேலேகுறிப்பிடப்பட்ட திரும்ப பெறமுடியாத கட்டணத்தை பணமாக செலுத்தி, **1987 ஆம் ஆண்டின் 03 வது பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு நகல் பிரதியுடன் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தின் பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.**

05. மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளிலிருந்து **91 நாட்களுக்கு** மனுக்கள் செல்லுபடியாகும் **(2022.03.28)**

06. **இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட மனுப் பிணையுடன்** மனுக்களுக்கான பொது விதிமுறைகளுக்கு இணங்க மேற்குறிப்பிடப்பட்டுள்ள மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் ஒப்படைக்க வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு (மேஜர்)
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.
2021.12.06

# கல்முனை மாநகர சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு – 2022

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பின்வரும் கடைகள், வாகனத் தரிப்பிடங்களுக்கான 2022 ஆம் ஆண்டிற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விடயம் | இடம் | குறியீட்டு இல | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| **இறைச்சிக் கடைகள்** | | | | | |
| **I. மாட்டிறைச்சிக் கடைகள்** | | | | | |
| மாட்டிறைச்சிக் கடை இல- 02 | கல்முனை பொதுச் சந்தை | KMC/Kal/B/02 | 1,000.00 | 50,000.00 | 200,000.00 |
| மாட்டிறைச்சிக் கடை இல- 05 | நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | KMC/Nat/B/05 | 1,000.00 | 50,000.00 | 200,000.00 |
| **II. ஆட்டிறைச்சிக் கடைகள்** | | | | | |
| ஆட்டிறைச்சிக் கடை இல- 02 | நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | KMC/Nat/M/02 | 1,000.00 | 5,000.00 | 12,000.00 |
| **III. கோழி இறைச்சிக் கடைகள்** | | | | | |
| கோழி இறைச்சிக் கடை இல-01 | கல்முனை பொதுச் சந்தை | KMC/Kal/C/01 | 500.00 | 4000.00 | 100,000.00 |
| கோழி இறைச்சிக் கடை இல-02 | கல்முனை பொதுச் சந்தை | KMC/Kal/C/02 | 500.00 | 4000.00 | 100,000.00 |
| கோழி இறைச்சிக் கடை இல-03 | பிரதானவீதி பள்ளியடி | KMC/Kal/C/03 | 500.00 | 4000.00 | 20,000.00 |
| கோழி இறைச்சிக் கடை இல-04 | நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | KMC/Nat/C/04 | 500.00 | 4000.00 | 20,000.00 |
| **சந்தைகள்** | | | | | |
| **I. மீன் சந்தை** | | | | | |
| மீன் சந்தை | கல்முனை பொதுச் சந்தை | KMC/Kal/FM/01 | 3,000.00 | 200,000.00 | 1,100,000.00 |
| **வாகனத் தரிப்பிடங்கள்** | | | | | |
| வாகனத் தரிப்பிடம் - அனைத்து வாகனங்களும் | கல்முனை தெற்கு (ஸாஹிறா கல்லூரி வீதியின் வடக்கு கடற்கரைப் பள்ளி வீதியின் தெற்கு) | KMC/Kal/ VP/03 | 3,000.00 | 100,000.00 | 750,000.00 |
| வாகனத் தரிப்பிடம் - அனைத்து வாகனங்களும் | கல்முனைநகர் ஐக்கியசதுக்கம் | KMC/Kal/ VP/05 | 3,000.00 | 30,000.00 | 300,000.00 |
| வாகனத் தரிப்பிடம் | சாய்ந்தமருது (ஸாஹிறா கல்லூரி வீதியின் தெற்கு மாளிகா வீதியின் வடக்கு) | KMC/Kal/VP/06 | 3,000.00 | 30,000.00 | 500,000.00 |

01. விண்ணப்பப்படிவத்தினை வார நாட்களில் 2021.12.03 ஆம் திகதி முதல் 2021.12.13 ஆம் திகதி பி.ப. 4.00 மணி வரை மாநகர சபையின் நிதிப் பிரிவில் பெற்றுக் கொள்வதோடு, கேள்வி வைப்புத் தொகையினையும் குறித்த காலப்பகுதியில் நிதிப்பிரிவில் மேற்கொள்ளலாம்.

02. முத்திரையிட்ட விலைமனுக்கள் 2021.12.17 ஆம் திகதி பி.ப 02.30 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக மாநகர சபையின் முதல்வர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கலாம். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும்.

03. முத்திரையிட்ட விலைமனுக்களின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பம் செய்யும் விலைமனுக்களின் குறியீட்டு இலக்கத்தினை எழுதவும்.

04. தேர்வு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் கேள்வித் தொகையில் 20% ஐ காசாகவும், 80% ஐ அங்கிகரிக்கப்பட்ட (அரச/ தனியார்) வங்கியின் உத்தரவாதக் கடிதமாகவும் (Letter of Guarantee) மாநகர சபை சார்பாக வழங்குதல் வேண்டும்.

05. மேற்படி தெரிவு செய்யப்படும் கேள்விதாரர்கள் ஒரு வார காலத்தினுள் நிபந்தனை 4இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை நிறைவேற்றல் வேண்டும். தவறும் பட்சத்தில் அவர்களின் கேள்வி நிராகரிக்கப்படும்.

06. ஒவ்வொரு குத்தகைக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

07. மேலதிக தகவல்கள் தேவைப்படின் மாநகரசபை ஆணையாளரின் 067-2229275 தொலைபேசி அல்லது கணக்காளரின் 067-2224588 தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**சட்டத்தரணி. ஏ.எம்.றகீப் LLB, JPUM**
**தலைவர்- பெறுகைக்குழு,**
**முதல்வர்,**
**மாநகர சபை,**
**கல்முனை**

# இலங்கை பைத்துல்மால் நிதியம்

CEYLON BAITHULMAL FUND (INC.) Estd. 1957 IN THE NAME OF ALLAH

## 2021 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**கீழே குறிப்பிட்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்**

- **ஸகாத் பெற தகுதியுள்ள வறிய முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள்.**
- **ஒகஸ்ட் 2019 ஆம் ஆண்டிற்கான** ஜீ.சீ.ஈ (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்று இலங்கை அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றில் தற்போது **முதலாம் ஆண்டில் கல்வி கற்பவர்கள்.**

விண்ணப்பப் படிவங்களை **2021 டிசம்பர் 25** ஆம் திகதி வரை பைத்துல்மால் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம், அல்லது சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையை கடித உறைக்குள் வைத்து அனுப்பி தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம், அல்லது **c.baithulmal@gmail.com** என்ற மின்னஞ்சலினூடாக கோரிக்கை ஒன்றினை இட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **2022 ஜனவரி 25** ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"பல்கலைக்கழக புலமைப் பரிசில்"** எனக் குறிப்பிடவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
Ceylon Baithulmal Fund
44A, Haig Road, Bambalapitiya, Colombo - 04

SLTMOBITEL The Connection

## SRI LANKA TELECOM TENDER NOTICE

### 2022 ஆம் ஆண்டிற்கான புதிய விற்பனை முகவர்களை பதிவுசெய்தல்

SLT இனால் 2022 ஆம் ஆண்டிற்கான விற்பனை முகவர்களை பதிவு செய்ய தகுதிவாய்ந்த நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்படும் விற்பனை முகவர்கள், தேவைக்கேற்ப, SLT இன் பொருட்கள் மற்றும் சேவைகளை பின்வரும் பகுதிகளில் ஊக்குவிக்கவும் விற்பனை செய்யவும் அனுமதிக்கப்படுவார்கள்.

| | | |
|---|---|---|
| ஹவ்லோக் டவுன் | மாத்தளை | மன்னார் |
| ஹொரன | அம்பாறை | கிளிநொச்சி |
| மருதானை | கல்முனை | யாழ்ப்பாணம் |
| இரத்மலானை | மட்டக்களப்பு | அம்பாந்தோட்டை |
| கோட்டே | திருகோணமலை | முல்லைத்தீவு |
| பாணந்துறை | வவுனியா | |

வருங்கால விற்பனை முகவர்கள் தம் நிறுவனத்தின் வளம் மற்றும் நிறுவனத்தின் ஏனைய திறன்களை பொறுத்து ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்த பதிவு ஒரு வருட காலத்திற்கு உரியதாகும். அதன் பின் மேலும் காலத்தை நீட்டித்தல் செயல்திறன் அடிப்படையில் SLT இனால் தீர்மானிக்கப்படும்.


விண்ணப்ப படிவம் மற்றும் மேலும் விவரங்களை ரூ.1,000 - (அரச வரிகள் சேர்க்கப்படும்) மீள்செலுத்தா வைப்பை செலுத்தி SLT இன் பிராந்திய முகாமையாளர் அல்லது பிராந்திய அலுவலகத்தின் வெளிசேனல் மேலாளர் பிரிவில் இருந்து பெறலாம்.

விண்ணப்பத்தையும் திட்டறிக்கையையும் 2021. 12. 20 ம் தேதி பி.ப.2.00 மணி அல்லது அதற்கு முன் SLT கொள்முதல் பிரிவில் சமர்ப்பிக்க வேண்டும்.

பொது முகாமையாளர் - கொள்முதல்
கொள்முதல் பிரிவு,
09 வது மாடி, கட்டிடம் யு,
ஸ்ரீலங்கா டெலிகொம் பி.எல்.சி,
லோட்டஸ் வீதி,
கொழும்பு - 01

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

BE BETTER INFORMED!
Dinamina
Daily News
Thinakaran




News you can trust now free on your mobile phone.
VISIT
apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
Google play
App Store
Windows Store
LAKE HOUSE

# இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

## நெடுஞ்சாலைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் மீரிகம முதல் குருநாகல் வரையான பகுதிக்கு மின்சாரப் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக தகைமைவாய்ந்த தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கான விலைமனுக் கோரல்**

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழுத் தவைவரினால், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பிரிவில் பின்வரும் செயற்பாட்டிற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல | செயற்றிட்டத்தின் பெயர் | ஒரு முறை மாற்றுக்கான தொழிலாளர் களின் எண்ணிக்கை | ஒப்பந்த காலம் (மாதங்கள்) | விலை மனுப் பிணை முறித் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| RDA/ EOM&M/ GOSL/ELE/ MNT/ CEP/ 2021/41 | மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் மீரிகம முதல் குருநாகல் வரையான பகுதிக்கு மின்சாரப் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக தகைமை வாய்ந்த தொழிலாளர்களை வழங்குதல் | 08 | 12 | 100,000.00 |

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா.மற்றும் முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டு முகவராகும்.

03. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்

04. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகைமைக்காக, விலைமனுதாரர் இவ்வாறான மற்றும் நிகரான எண்ணிக்கையான அளவில் தொழிலாளர்களை வழங்குவதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

05. விலைமனுக்களை சமர்ப்பித்தலின் இறுதித் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்கள் (2022-02-29) வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் வகையிலிருத்தல் வேண்டும்.

06. விலைமனுக்கள் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணை முறியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2022.04.26ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்) குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைமுறியுடன் இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. அனைத்து விலைமனுக்கோரல் ஆவண பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிடப்படல் வேண்டும்.

08. விலைமனு முன்னோடிக் கூட்டம் 2021-12-17ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் குருநாகல் இடைமாறல் அலுவலகத்தில் இடம்பெறும்.

09. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒரு விலை கோரலுக்காக மீளளிக்கப்படாத 3,000.00 + 240.00 (VAT) ரூபாவை ரொக்கப் பணமாக செலுத்தி கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்திலமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரச்சபைக்குரித்தான நெடுஞ்சாலை செயற்பாடு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2021-12-06ஆம் திகதி முதல் 2021-12-27ஆம் திகதி வரையும் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.30 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் முகவர்/ பிரதிநிதி மற்றும் வெற்றிகரமான கேள்விதாரர் கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் இயைபுடைய கேள்விக்கு பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும். 2021-12-28ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிவுபெறும்.

10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், அதிவேக நெடுஞ்சாலைகள் செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக்குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, அதிவேக நெடுஞ்சாலைகள் செயற்பாடு மற்றும் முகாமைத்துவ அமைப்பு, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அடக்கப்பட்டுள்ள உறையின் இடது பக்க மேல் மூலையில் ''மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் மீரிகம முதல் குருநாகல் வரையான பகுதிக்கு மின்சாரப் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக தகைமை வாய்ந்த தொழிலாளர்களை வழங்குதல்'' எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

11. கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம எனும் இடத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா.மற்றும் முகாமைத்துவப்பிரிவின் செயற்பாட்டு பிரிவின் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிந்தவுடன் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

12. மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி எண்கள் பின்வருமாறு.
    I. பொறியியலாளர் - (மின்சாரம் - அ.நெ.செ.ப. மற்றும் மு. பிரிவு)
    வீதி அபிவிருத்தி அதிகார சபை. (தொலைபேசி (011-3047824, 0774777687)
    II. பொறியியலாளர் (நிர்மாணம். - அ.நெ.செ.ப. மற்றும் மு. பிரிவு)
    வீதி அபிவிருத்தி அதிகார சபை. தொலைபேசி (011-3047806)

**தலைவர்**
**அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக்குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை.**
**கஹட்டகஹஹேன, வல்கம,**
**பண்டாரகம.**

Daily News Classifieds, the Housewives' companion

# பொருட் கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-201

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/ அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற இலங்கையில் உள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்தும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொரு(ள்)ட்கள் கொள்வனவு தொடர்பில், விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **Material** | : | **Photoplymer Plates** |
| **Thickness** | : | **Total Thickness 0.95mm** |
| | : | **Relief Thickness 0.65mm** |
| **Size** | : | **610mm x 869mm or available size** |
| **Quantity Required** | : | **100 Nos** |
| **Bid Reference No** | : | **S.I. 2021/55** |

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 27.12.2021ஆந் திகதி பி.ப. 2 மணி வரையாகும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும்

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விலைமனு தொடர்பிலும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,500.00 கொண்டதும் அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் பி.ப. 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல்கள் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3 மணி வரை உரிய விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கங்காni லியனகே**
பொருட்கொள்வனவு குழுத் தலைவர்.

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு - 08.**
**தொலைபேசி : 011-2694898**
**இணையத்தளங்கள் : www.documents.gov.lk**
**www.npa.gov.lk**

2021.11.27

# பெறுகை அறிவித்தல்

## சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

## சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

## சமுர்த்தி வங்கி மற்றும் வங்கி சங்கங்களில் செயற்படும் மென்பொருள்களுக்கான Hosting Service பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கோரல்

## விலைமனுக்கோரல் (நாட்களை திருத்துதல்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களில் செயற்படும் கணனி மென்பொருள்களை நிறுவுவதற்கான Hosting Service பெற்றுக்கொள்வதுடன் சம்பந்தப்பட்ட 2021.11.19ஆம் திகதி தினமின, டெய்லிநியூஸ், தினகரன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலுடன் சம்பந்தப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி மற்றும் கேள்விக்கு முன்னரான கூட்டம் நடத்தப்படும் திகதி திருத்தப்படுவதாக அறிவித்துக் கொள்கிறேன்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021.12.20 பி.ப. 1.30 இற்கு முன் கிடைக்குமாறு பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், 1ஆம் கட்டம், 04 ஆம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நுன்நிதிப் பிரிவில் பெறுகை அலகில் நிறுவப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 2021.12.20 பி.ப.2.00 இற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரி அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். கேள்விதாரர்கள் 2021.12.13 பி.ப.2.00 இற்கு கேட்போர் கூடத்தில் நடத்தப்படும் கேள்விக்கு முன்னரான கூட்டத்தில் கலந்து கொள்ளல் வேண்டும்.

இது பற்றிய மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்கு தேவையெனில் தொ.பே இலக்கம் - 0112889003 பெறுகை முகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்/ பணிப்பாளர் நாயகம்**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்**
**04ஆம் மாடி,**
**செத்சிரிபாய, பத்தரமுல்ல**

# இலங்கை வங்கி

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

### இலங்கை வங்கியின் வட மத்திய மாகாணத்திற்கு ஒரு நலன்புரி வாகனத்தை வழங்குதல்

வாடகை அடிப்படையில் வட மத்திய மாகாண அனுராதபுரம் மாவட்டத்திற்கு ஒரு நலன்புரி வாகனத்தை வழங்க ஏலவிலைகள் கூறப்படுகின்றன.

**இவ் விலைகூறலில் பங்கெடுக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் கீழ்க் கண்ட தகைமைகளை குறைந்தபட்சம் கொண்டிருக்க வேண்டும் :**

- வாகனமானது பதிவு செய்யப்பட்டதாகவும், பயணியர் போகுவரத்து, உயர் கூரை வாகனமாகவும் வசதியாக 14 பயணிகள் வசதியாக இருக்கக் கூடிய வகையில் இருக்க வேண்டும்.
- பயணியர் போக்குவரத்து வாகனமாகப் பதியப் பட்டிருக்க வேண்டும்.
- வாகனங்களானது இரட்டைக் குளிரூட்டி வசதியைக் கொண்டிருக்க வேண்டும்
- முன் மொழியப்படும் வாகனமானது 2012 அல்லது அதற்குப் பிந்திய ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டதாகக் காணப்பட வேண்டும்.
- வாகனமானது பயனியருடன் பூரணமாகக் காப்புறுதி செய்யப்பட்டதாகக் காணப்பட வேண்டும்.
- வாகனத்தின் பராமரிப்பு / ஓட்டுனரின் சம்பளம் / காப்புறுதி மற்றும் எரிபொருள் கட்டணமானது வாகனத்தின் உரிமையாளரால் தாங்கப்பட வேண்டும்.
- நிறுவனத்தின் தேவைக்கமைய வாகன உரிமையாளரினால் வாகனங்களை வழங்குவதற்கு வசதியாக இருக்க வேண்டும்.
- உரிமையாளர் ஒரே வசதியை கொண்ட மேலதிக வாகனகளை கொண்டிருக்க வேண்டியதுடன் வாகனங்களை வசதிக்கமைய வழங்கக் கூடியதாக இருப்பதுடன் ஒழுக்கமான ஓட்டுனர்களளையும் வழங்க வேண்டும்.

உரிய விண்ணப்பமானது அனுராதபுரம், வட மத்திய மாகான அலுவலகம், இலங்கை வங்கி, முகாமையாளர்-செயற்பாடுகள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படக் கூடியதுடன் ஒப்பந்தக் கட்டணம் ரூ. 1,500/- உடன் ஏலவிலை கூறல்களை மேற்கூறப்பட்ட முகவரியில் காணப்படும் ஏலவிலை கோரல் பெட்டியினுள் 2021.12.20 அன்று காலை 10.00 மணிக்கு முதல் கிடைக்கக் கூடிய வகையில் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு முகாமையாளர், செயற்பாடுகள், தொலைபேசி இல. 025-2235680 / 025-2235685 ஊடாக வார நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர் - செயற்பாடுகள்
(வட மத்திய மாகாணம்),
இலங்கை வங்கி
வட மத்திய மாகாண அலுவலகம்,
அனுராதபுரம்.
தொலைபேசி இல : 025-2235680

www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு -10

## எல்பி காஸ் மற்றும் பொலித்தீன் Garbage Bags வழங்குதல்

இலங்கை தேசிய வைத்தியசாலையின் தேவைப்பாட்டிற்காக கீழ்க்காணும் உருப்படிகளை கொள்வனவு செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| | **விபரம்** | **தொடர் இலக்கம்** |
|---|---|---|
| 1. | எல்பிகாஸ் 37.5 kg/12.5kg | SI/02/2021 |
| 2. | பொலித்தீன் Garbage Bags வகை | SI/03/2022 |

மேற்படி வழங்கல்களுக்கு தகைமையுள்ள நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு இதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். அத்துடன் பொலித்தீன் Garbage Bags வகைகளுக்கு மீளளிக்கப்படாத ரூ. 4,500.00 வைப்பை மற்றும் எல்பி காஸ்யிற்கு மீளளிக்கப்படாத ரூ. 3,000.00 வைப்பை இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்பு 2021.12.07 முதல் 2022.01.04 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரையான காலத்திற்குள் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் குறித்த கேள்வி நிபந்தனைகளுடன் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் சாம்பிள் மற்றும் குறித்த தரச்சான்றிதழ் அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2022.01.05 மு.ப. 10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**வைத்தியர் டபிள்யூ. கே. விக்ரமசிங்ஹ,**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

## பஸ்பாகே கோறளை பிரதேச சபை

## ரபுக்பிட்டி, நாவலப்பிட்டி

கீழ் குறிப்பிட்ட பொருட்களை விநியோகிப்பதற்காக மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக பதிவு செய்ய விருப்பம் உடைய விநியோகத்தர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களின் விண்ணப்பங்கள் கோறப்படுகின்றன. ஒவ்வொரு விடயத்திற்கும் கீழ்குறிப்பிட்ட பதிவு கட்டணங்களுடன் விண்ணப்பப்படிவங்களை பஸ்பாகே கோறளை பிரதேச சபை, ரபுக்பிட்டிய, என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்ப வேண்டும்.

பதிவு செய்வதற்காக இறுதி திகதி 2022.01.31
பதிவு செய்வதற்கான கட்டணம்

**01. பொருட்கள் விநியோகம்**
**கட்டணம்**

| | | |
|---|---|---|
| 1. | அனைத்து வகையான காகிதாதிகள் | 1500.00 |
| II. | அலுவலக உபகரணங்கள் | 2000.00 |
| III. | தளபாடங்கள் மற்றும் இரும்பு உபகரணங்கள் | 2000.00 |
| IV. | அனைத்து வகையான மின் உபகரணங்கள் | 1500.00 |
| V. | சுகாதார உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் | 1000.00 |
| VI. | அச்சிடும் நடவடிக்கைகள் மற்றும் புகைப்பட நடவடிக்கைகள் | 2000.00 |
| VII. | வாகன மற்றும் மிருக அனுமதிப்பத்திர இலக்க தகடு | 500.00 |
| VIII. | கட்டிட பொருட்கள் (கருங்கல், மணல், சுண்ணாம்பு) | 2000.00 |
| IX. | வாகன உதிரிப்பாகங்கள் | 2000.00 |
| X. | நீர் குழாய்கள் மற்றும் உபககரணங்கள் | 2000.00 |
| XI. | கொங்கீறீட் தொடர்புடைய பொருட்கள் விநியோகம் | 1000.00 |
| XII. | டயர், டியுப், மற்றும் பெட்றி | 2000.00 |
| XIII. | ஆடைகள் மற்றும் சீருடை விநியோகித்தல் | 2000.00 |
| XIV. | தட்டச்சுபொறி நகல் இயந்திர போட்டோ பிரதி இயந்திரம், பெக்ஸ் இயந்திர உபகரணம் விநியோகித்தல் | 2000.00 |
| XV. | மழை ஆவரணம் (ரெயின்கோட்) / பூட்ஸ் / சப்பாத்து மேஸ் | 1500.00 |
| XVI. | பலகை விநியோகித்தல் (பலகை / பராலை / ரீப்பை மரக்கன்றுகள் , உரவகைகள், எண்ணை மற்றும் தோட்ட அலங்காரத்திற்கு தேவையான பொருட்களை விநியோகித்தல் | 1500.00 |
| XVII. | இறப்பர் முத்திரை மற்றும் பிலாஸ்டிக் உபகரணங்களை விநியோகித்தல் | 1000.00 |
| XVIII. | அலுவலக அடையாள அட்டை விநியோகித்தல் | 1000.00 |
| XIX. | முன்பள்ளி பாடசாலை உபகரணங்கள் மற்றும் விளையாட்டு மைதான உபகரணங்களை விநியோகித்தல் | 1000.00 |

| **02. சேவைகள் விநியோகம்** | | **கட்டணம்** |
|---|---|---|
| 1. | உணவு பானங்கள் விநியோகித்தல் | 1500.00 |
| II. | போக்குவரத்து கட்டணம் | 1500.00 |
| III. | வாகனம் மற்றும் உதிரிப்பாகங்கள் புதுப்பித்தல் | 3000.00 |
| IV. | வாகன பராமரிப்பு | 3000.00 |
| V. | அலுவலக உபகரணங்கள் புதுப்பித்தல் கட்டணம் | 1500.00 |
| VI. | அளவீட்டு நடவடிக்கைகள் | 3000.00 |
| VII. | நிறைவு செய்தல் வேலைகள் | 2000.00 |
| VIII. | வாகன இருக்கை ஆவரணங்கள் செய்தல் மற்றும் குஷன் செய்தல் | 1500.00 |

மேலதிக தகவல்களுக்கு அலுவலக நேரங்களில் 054-4922922 அல்லது 054-4929024 தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

**03. ஒப்பந்தகாரர்களை பதிவு செய்தல்**
ஒப்பந்தகாரர்களாக பதிவு செய்வதற்கு இந்த அலுவலகத்தில் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி உங்களின் வருமான சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒப்பந்தகாரராக பதிவு செய்தல் கட்டணம் - ரூ. 2000.00

**04. வடிவமைப்பாளர்களாக பதிவு செய்தல்**

பதிவு செய்யும் கட்டணம் - ரூ. 2000.00
விண்ணப்பப்பத்திர கட்டணம் - ரூ. 200.00

**05. விதிமுறைகள்**

1. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விநியோகத்திற்கும், சேவைக்கும் தனிதனியாக விண்ணப்பப் படிவங்களை முன்வைக்க வேண்டும்.

II. பதிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் சாதாரணமாக விலை மனு கோரப்படும். ஒவ்வொருவரும் முன்வைக்கப்படும் விலை மனுக்களின் குறைந்தது 03 மாதங்களுக்கு மாற்றமில்லாமல் நிலையான தன்மையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

III. தேவைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் வேறு விநியோகத்தர்களிடம் பொருட்களை பெற்றுக்கொள்ளும் உரிமை சபைக்கு உண்டு. கோரிக்கை விடுத்தவுடன் பொருட்களின் விலைகளை முன்வைக்காவிட்டாலும், குறிப்பிட்ட தரத்திற்கு இணங்காமல் இருந்தாலும் விநியோகத்தர்களின் பதிவு ரத்து செய்யப்படும்.

IV. விலைமனு கோரல் சபையின் விருப்பப்படி நடைபெறும். கட்டணங்களை செலுத்துதல் காசோலை மூலம் 45 தினங்களுக்கு இடையில் செலுத்தப்படும்.

**2021/11/25**
**பஸ்பாகே கோறளை பிரதேச சபை ரம்புக்பிட்டி**

**ஓ. ஜீ. ரோகண பண்டார தலைவர்,**
**பஸ்பாகே கோறளை பிரதேச சபை ரம்புக்பிட்டி**

## இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்

(இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு)

GJRTI

# வெற்றிடங்கள்

இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனத்திற்கு தகைமை மற்றும் அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவளங்கள்) - 01 பதவி**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்.

(இயைபுடைய விடயத் துறையில் விசேட பட்டத்தைப் பெற்றுள்ளவர்களுக்கு நேர்முகத் தேர்வில் முன்னுரிமை வழங்கப்படும்)

மற்றும்

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. பதவிக்கு இயைபான விடயத்துறையில் கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு:**
**MM 1-1 2016**
ரூபா (53,175 - 10 x 1,375 – 15 x 1,910 - 95,575) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள், E.P.F 15%, E.T.F 3%

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சகல விண்ணப்பதாரர்களும்**

i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

ii. பதவிக்காக ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

(1) இதன்பொருட்டு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் கல்வி/தொழில்சார் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளின் சகிதம் உங்களது உறவினரல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் (02) விபரங்களைக் குறிப்பிட்டு பூர்த்தி செய்யப்பட்ட சுயதரவு குறிப்பொன்றை அனுப்புதல் வேண்டும்.

(2) மேற்படி (01) இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படும் ஆவணங்கள் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் மற்றும் நிராகரிக்கப்படும்.

(3) விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு xx-12-2021ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(4) தற்போது அரச, அரச சார்புடைய மற்றும் நியதிகள் சட்ட நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனத்தின் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

(5) தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

**தலைவர்,**
**இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்,**
**''ருவன் செவன'', இல. 73/5/A, வெலிவிட்ட, கடுவளை.**
**தொ.பே. 0114-324679 0112-579187**

# ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரிக்கை

## காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP) – IDA 6346 LK

## கமத்தொழில் அமைச்சு

## ஹம்பாந்தோட்டை மாவட்ட மையப் புள்ளிப் பகுதியில் (HSA) விவசாய சுற்றுச்சூழல் நிலத்தோற்ற மீள்திறன் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு ஆலோசனை சேவைகள்

### குறிப்பு இல.: LK-MOA-241953-CS-LCS

கமத்தொழில் அமைச்சின் காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (CSIAP) செலவுகளை நோக்கியதாக உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் நிதி ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு ஹம்பாந்தோட்டை மாவட்ட HSA வில் விவசாய சுற்றுச்சூழல் நிலத்தோற்ற மீள்திறன் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு ஆலோசனை சேவைக்கான கொடுப்பனவுகளுக்காக இந்த கடனின் பகுதியை பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறிப்பு இல.: LK-MOA-241953-CS-LCS

(a) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பண்புகளை மீளாய்வு செய்தல் (b) நிலத்தோற்றத்திற்கு உட்பட்ட சூற்றுச்சூழல் பண்பு மற்றும் சமநிலையை தொடர்ந்து வடிவமைப்பது மற்றும் பிரச்சினை, அச்சுறுத்தல் மற்றும் மாற்றத்தின் இயக்கங்கள் ஆகியவற்றை அடையாளம் காணல் (c) முக்கிய சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளின் HSA நிலத்தோற்றம் மற்றும் பொருளாதார பெறுமதிக்கு உட்பட்டு சிக்கலான சுற்றுச்சூழல் வலையமைப்புகளை அடையாளம் காணல் (d) கடந்த 10 ஆண்டுகளில் HEC இன் அளவை ஆய்வு செய்தல் (e) பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் தாக்கங்கள் உட்பட சமூக வாழ்வு மற்றும் வாழ்வாதாரங்களில் HEC இன் சமூக தாக்கங்கள் பற்றிய புரிதல் (f) HSA நிலத்தோற்றத்தில் முக்கிய பங்குதாரர் குழுக்களை அடையாளம் காணல், எதிர்கால நிலப்பயன்பாடு தொடர்பில் அவர்களின் ஆர்வம் மற்றும் செல்வாக்கு அளவை மதிப்பீடு செய்தல் மற்றும் HSA நிலத்தோற்றத்தின் காலநிலை மீள்திறன் மேம்பாட்டுக்கு பாதுகாப்பு மற்றும் உற்பத்தி நிலத்தின் நடைமுறைகளை பயன்படுத்துவதற்கு இடையே சிறந்த நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக தம்மை ஈடுபடுத்துவதன் தேவையை அடையாளம் காணல் (g) பொருத்தமான நிலத்தோற்ற அளவு முகாமைத்துவ மூலோபாயங்கள் முதலியவற்றை அடையாளம் காணல் மற்றும் (h) முன்மொழியப்பட்ட ஹம்பாந்தோட்டை மாவட்ட விவசாய மையப் புள்ளிப் பகுதிக்காக காலநிலை ஸ்மார்ட் தலையீடு ஒன்றாக விவசாய சுற்றுச்சூழல் நிலத்தோற்ற மீள்திறன் திட்டம் ஒன்றை (ALRP) மேம்படுத்தல் ஆகியவை இந்த ஆலோசனை சேவைகளில் உள்ளடங்கும். ஆலோசனைக் காலம் நான்கு மாதங்கள். 2022 பெப்ரவரி 25 ஆம் திகதி பணியை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்படைக்கான விரிவான குறிப்பு விதிமுறைகளை (TOR) www.csiap.lk, www.agrimin.gov.lk என்ற இணையதளங்களில் அல்லது திட்ட பணிப்பாளர் பிரிவு, காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP), இல.: 61/1, எம்.டி.எச். ஜனவர்தன மாவத்தை, மதின்னகொட, ராஜகிரிய என்ற முகவரியில் வேலை நாட்களில் 9.00 தொடக்கம் 16.00 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த சேவைகளை வழங்குவதில் தமது ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு தகுதியுடைய ஆலோசனை நிறுவனங்களுக்கு (ஆலோசகர்கள்) கமத்தொழில் அமைச்சு - காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (CSIAP) சார்பில் திட்ட ஆலோசனை பெறுகைக் குழுவினால் தற்போது அழைப்பு விடுக்கப்படுகிறது. ஆர்வமுடைய ஆலோசகர்கள் இந்த சேவைகளை மேற்கொள்வதற்கு தேவையான தகைமைகள் மற்றும் அது சார்ந்த அனுபவத்தை தாம் பெற்றிருப்பதை நிரூபிக்கும் விபரத்தை வழங்க வேண்டும். நிறுவனத்தின் பிரதான வர்த்தகம் மற்றும் வர்த்தகத்தில் நீடிக்கும் ஆண்டுகள், அது சார்ந்த அனுபவம், தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ திறன் ஆகியவை தேர்வுக்கான அளவுகோல்களாகும். தேர்வு செய்யும் கட்டத்தில் முக்கிய நிபுணர்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவர்.

உலக வங்கியின் ஆர்வ முரண் கொள்கைக்கு அமைய ("பெறுகை ஒழுங்குமுறைகள்") 2017 நவம்பர் மற்றும் 2018 ஒகஸ்டில் திருத்தப்பட்ட 2016 ஜூலையின் உலக வங்கியின் "IPF கடன் வாங்குபவர்களுக்கான பெறுகை ஒழுங்குமுறையின்" பிரிவு III, 3.14, 3.16 மற்றும் 3.17 பந்திகள் ஆர்வமுடைய ஆலாசகர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தமது தகைமைகளை மேம்படுத்துவதற்கு ஏனைய நிறுவனங்களுடன் ஆலோசகர்கள் கூட்டிணையலாம் என்றபோதும், அந்த கூட்டிணைவானது ஒரு கூட்டு முயற்சி மற்றும்/ அல்லது ஒரு உப ஆலோசகர் என்பது பற்றி தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். ஒரு கூட்டு முயற்சியாக இருந்தால், தேர்வு செய்யப்படும் பட்சத்தில் கூட்டு முயற்சியில் அனைத்து கூட்டாண்மையாளர்களும் ஒட்டுமொத்த ஒப்பந்தத்திற்காகவும் கூட்டாக மற்றும் தனித்தனியாக பொறுப்பேற்க வேண்டும்.

பெறுகை ஒழுங்குமுறைகளில் நிர்ணயிக்கப்பட்ட "குறைந்த செலவு தேர்வு" (LCS) முறைக்கு அமைய ஆலோசகர் ஒருவர் தேர்வு செய்யப்படும்.

மேலதிக விபரங்களை வேலை நாட்களில் 9.00 தொடக்கம் 16.00 வரை தொலைபேசி: 0112871293, தொலைநகல்: 0112053167 இல் பெறுகை நிபுணர், காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP), இல. 61/1, எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை, மதின்னகொட, ராஜகிரிய என்ற முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

ஆர்வ வெளிப்பாடுகளை 2021 டிசம்பர் 20 ஆம் திகதி 15.00 மணி அல்லது அதற்கு முன்னர் (நேரடியாக அல்லது மின்னஞ்சல் மூலம்) கீழுள்ள முகவரிக்கு எழுதப்பட்ட வடிவம் ஒன்றில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்**
**திட்ட ஆலோசனை பெறுகைக் குழு**
**காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP)**
**இல. 61/1, எம்.டி.எச். ஜனவர்தன மாவத்தை, மதின்னகொட, ராஜகிரிய**
**தொ.: 0112871293 - தொலைநகல்: 0112053167**
**மின்னஞ்சல் - pdcsiap@gmail.com**

2021 டிசம்பர் 6

## அரசாங்க தகவல் திணைக்களம்

# ஊடக அபிவிருத்திக்கான நிலைய கட்டிடத்தின் புதுப்பித்தலுக்காக விலைமனு அழைத்தல்

**நீர்புகாப்பு, ஓடு மீள்பதித்தல் மற்றும் மொட்டை மாடிக்கான இணைந்த வேலை மற்றும் நீர்த் தாங்கி கட்டமைப்பு பழுதுபார்த்தல் கேட்போர்கூட கூரை பழுதுபார்த்தல் மற்றும் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காவது மாடிகளிலுள்ள கழிவறைகளின் புதுப்பித்தல்**

**Contract No. DI/PRO/04/2021/08**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. நீர்புகாப்பு, ஓடு மீள்பதித்தல் மற்றும் மொட்டை மாடிக்கான இணைந்த வேலை மற்றும் நீர் தாங்கி கட்டமைப்பு பழுதுபார்த்தல் கேட்போர்கூட கூரை பழுதுபார்த்தல் மற்றும் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காவது மாடிகளிலுள்ள கழிவறைகளின் புதுப்பித்தல் ஆகியன அடங்கலாக'ஊடக அபிவிருத்தி நிலைய கட்டிட புதுப்பித்தலுக்காக' தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு-05, கிருளப்பொன அவென்யு, 163 ஆம் இலக்கத்திலுள்ள அரசாங்க தகவல் திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கட்டிட நிர்மாணத்தில் சி-5 அல்லது மேற்பட்ட தரத்தை ICTAD உடன் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கடந்த மூன்று வருடங்களில் நிறைவேற்றப்பட்ட கட்டிட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதியானது 30 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.
5. இந்த விலைமனுவிற்கான மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவானது பெசேவ நீங்கலாக 27 மில்லியன் ரூபா என்பதுடன் நிர்மாண காலப்பகுதியானது 90 நாட்களாகும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 0718859889, 0112514759 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக கொழும்பு-05, கிருளப்பொன அவென்யு, 163 ஆம் இலக்கத்திலுள்ள அரசாங்க தகவல் திணைக்கள பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
7. 2021.12.06 ஆம் திகதியிலிருந்து 2021.12.24 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 7500 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-05, கிருளப்பொன அவென்யு, 163 ஆம் இலக்கத்திலுள்ள அரசாங்க தகவல் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
8. 2021.12.27 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-05, கிருளப்பொன அவென்யு, 163 ஆம் இலக்கத்திலுள்ள அரசாங்க தகவல் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரிடம் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. அனைத்து விலைமனுக்களும் 270,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அவைகள் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அரசாங்க தகவல் திணைக்களம்.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பரீட்சைகள் திணைக்களம்

## Procurement of supplying 300 Paper Rolls for Océ CS 3500Z Inkjet Production Printer

### (ஒரு வருட காலத்திற்கு)

01. ஆகக் குறைந்த விதிக்கப்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து Procurement of supplying 300 Paper Rolls for Oce CS 3500Z Inkjet Production Printer என்பதற்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ளன.
02. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை பின்பற்றி நடாத்தப்படும்.
03. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் உரித்தான துறையில் பேப்பர் ரோல்களை வழங்குவதில் மூன்று வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கமைவாக பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழொன்றை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
05. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3 ஆம் மாடியின் வழங்கல் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 011-2786200 அல்லது 011-2785219) 2021.12.26 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
06. 2021.12.24 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 7,100 ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார பதிவுக் கடிதத்தின் பிரதியொன்றுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
07. 2021.12.20 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
08. விலைமனுக்கள் 120 நாட்களுக்கு (2022.04.26 ஆம் திகதியன்று வரையும்) விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
09. அனைத்து விலைமனுக்களும் மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் இலங்கை ரூபாவில் (325,000 இ.ரூபாவில்) அமைந்த நிபந்தனையற்றதும் இலங்கையில் செயற்படும் புகழ் வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள உருமாதிரியில் தயாரிக்கப்பட்டதும் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு (2022.05.26 ஆம் திகதியன்று வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்கள் 2021.12.27 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 3 ஆம் மாடி, வழங்கல் பிரிவில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
11. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டதும் முத்திரையிடப்பட்டதுமான விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Procurement of supplying 300 Paper Rolls for Oce CS 3500Z Inkjet Production Printer", "Contract No. 4/4/4/2021" என குறிப்பிடப்படல் வேண்டும்.
12. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அத்துடன் விலைமனுக்கோரல் செயற்பாட்டை ஒழிப்பதற்கும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்த வேளையிலும் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் அதன் மூலம் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எந்த வகையான கடப்பாட்டையும் சுமத்தாமல் அல்லது திணைக்கள பெறுகைக் குழுவின் செயற்பாட்டிற்கான காரணத்தை பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு அறிவிக்காமலிருப்பதற்கான உரிமையையும் பரீட்சைகள் திணைக்கள பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**
**2021.12.06**

# பெறுகை அறிவித்தல்

**மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு**

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை - மத்திய மாகாணம்

### 2021 – 11 – 29ஆம் திகதி பிரசுரமான பத்திரிகை அறிவித்தலின் திருத்தம்

01 மாகாண வீதி அபிவிருத்தி சபைக்குரித்தான கம்பொலயில் நிர்மாணிக்கப்பட்டுவரும் நான்கு மாடி பல்காரிய கட்டிடத்திற்குப் பொருத்த உத்தேசித்துள்ள 1000 kg மின்னுயர்த்தி தொடர்பான பெறுகை செயற்பாடுகளுக்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2021-12-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இல. 09, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி எனும் முகவரியில் அமைந்துள்ள மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான அலுவலகத்தில் இடம்பெறும்.

கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையினால் பின்வரும் திருத்தம் செய்யப்படுகின்றது.

02. 2021-12-20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதான அலுவலகத்தில் நடைபெறவிருந்த விலைமனுக்களைத் திறக்கும் நிகழ்வு zoom தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெறும் என்பதுடன் அதற்குத் தேவையான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | | |
|---|---|---|
| Meeting ID | - | **710 432 4355** |
| கடவுச் சொல் (Password) | - | **PRDA12/20** |
| குறியீட்டு முகவரி | - | https://us05web.zoom.us/j/7104324355?pwd=Qy8xcUtyMURWMDJZMzRFTm9pd3pDdx09 |

ஏனைய சகல விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் 2021-11-29ஆம் திகதி பிரசுரமான விளம்பரத்தின் படி செல்லுபடியாகும் என மேலும் அறியத்தரப்படுகின்றது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல. 09, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை,**
**போகம்பர, கண்டி.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/PT/17/011 | 01 No. of Fiber Glass Hydrographic Survey Boat | 150,000.00 | 3,500.00 | 2021.12.20 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2021 டிசம்பர் 06 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

### திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

### இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்

# 2022 ஆம் ஆண்டில் வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்கலிற்கான விலைமனுக்கோரல்

**விலைமனு இலக்கம் : NERDC/DPC Minor(S) 02/21**

இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கு தேவையான வேளைகளில் வாடகை அடிப்படையில் தினசரி வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவரினால் விலைமனுக் கோரப்படுகின்றது.

01. எமது நிலையத்திற்குத் தேவையான வேளைகளில் வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்கும் வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது. 2021.12.23 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் விலைமனுக்களை அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் அல்லது எமது நிறுவனத்தின் நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப்படிவங்களை பெறுகைப் பெட்டியிற் சேர்க்கலாம்.
02. மீளளிக்கப்படாத ரூபா 500.00 இற்கான கட்டணத்தை காசாளருக்கு ரொக்கப்பணமாக செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 2021.12.22 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை வழங்கல் அலவலரிடம் பெற்றுக்கொள்ளலாம்.
03. 2021.12.23 அன்று பி.ப.2.00 இற்கு இந்நிலையத்தின் நிதிப்பிரிவில் விலைமனுத் திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
04. முத்திரையிடப்பட்ட உறைகளின் இடதுபக்க மேல் மூலையில், "விலைமனுவின் பெயர் மற்றும் இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும். பெறுகை தொடர்பான இறுதித்தீர்மானம் "நர்ட்" நிலையத்திற்கு உரித்தாகும்.

**தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு,**
**இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்**
**2P/17B I.D.B. கைத்தொழில் பேட்டை**
**ஏக்கல - ஜா-எல**

**தொலைபேசி : 011-2236284, 2236307, 5852103**
**தொலைநகல் : 011-2233153**

### 1964ஆம் ஆண்டு இல. 28 உடைய காணி எடுத்தற் (திருத்தற்) சட்டத்தின் திருத்தப்பட்டதன் படி காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**பிரதேச செயலாளரின் கோப்பு இல. BOP/4/4/1-87**
**காணிகள் அமைச்சின் கோப்பு இல. 4-3/19/2020/E/265**

இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உப ஆவணங்களின் மூலம் விபரிக்கப்படும் காணி அரசாங்கத்திற்கு எடுப்பதற்கு எதிர் பார்க்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு இல. 2255/26 உடைய 2021.11.25ம் திகதி உடைய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலைப் பாருங்கள்

| | | |
|---|---|---|
| மாவட்டம் | - | காலி |
| பிரதேச செயலாளர் பிரிவு | - | போபெ போத்தல |
| கிராம அலுவலர் பிரிவு | - | இல. 123அ, நிலதெனிய |
| ஊரின் பெயர் | - | நிலதெனிய |
| நிலத்தின் பெயர் | - | பியனாரச்சி வத்த அல்லது முலனகேவத்த |
| வடிவமைப்பு இல. | - | கா/4620 |
| துண்டு இல. | - | 01 |

**கையகப்படுத்தும் அதிகாரி/பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலாளர்,**
**அலுவலகம்,**
**போபெ போத்தல.**

திகதி: 29.11.2021
**முகவரி பிரதேச செயலாளர்,**
**அலுவலகம்.**

## எரிசக்தி அமைச்சு

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## Bid for the supply of the Services for Unmooring, Mooring & Towing of Crude Oil Single Point Buoy Mooring (SPBM)

### B/79/2021

Unmooring, Mooring & Towing of Crude Oil Single Point Buoy Mooring (SPBM) எனும் சேவையை வழங்குவதற்காக தேவையான வசதிகள் மற்றும் சிறந்த கருவிகளுடனான வேலைத்தளத்தைக் கொண்ட அனுபவமும் திறமையும் வாய்ந்த தரப்பினரிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். உ-ம் htpp://ceypetco.gov.lk/public-tenders/. மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000 ரூபாவை (ரூ. 925.93 + 8% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுக்களுடனும் 280,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்று இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2021-12-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை முகாமையாளர் (OS & TD) அவர்களிடமிருந்து 011-5455289 எனும் தொலைபேசி இலக்கம் அல்லது menakaj@ceypetco.gov.lk எனும் மின்னஞ்சல் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09, இலங்கை.**

**தொலைபேசி: 0094-11-5455331**
**தொலைநகல்: 0094-11-5455424**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

**எனது இலக்கம் : RG/NB/11/2/57/2021/பக்கம்/செ**

## காணிப் பதிவேடுகள் மீட்டெழுதிய (இரு மடித்தாள்) கட்டளைச்சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

01. கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் காணப்படும் 2ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணியானது 1ஆம் நிரலில் காணப்படுவதும், கிழிந்தோ அல்லது காணாமலோ சென்றிருக்கும் இருமடித்தாள்கள் தொடர்பாக 3ஆம் நிரலில் காணப்படும். உறுதிகளிலிருந்து காணிப்பதிவேடு (மீட்டெழுதிய) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 4ஆம் பிரிவின் கீழ் மாகாண இருமடித்தாள்களில் முழுமையாக மீளமைக்கப்பட்டிருக்கின்றதென இத்தால் நான் அறிவித்தல் வழங்குகின்றேன்.

02. 2021.12.10 ஆம் திகதி முதல் 2021.12.24 ஆம் திகதி வரை வார வேலை நாட்களில் மு.ப.10.00 முதல் பி.ப.3.00 வரை எவரேனும் ஒருவர் மேற்படி தற்காலிக பக்கத்தை நீர்கொழும்பு காணிப்பதிவாளர் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. அத் தற்காலிகப் பக்கத்தில் ஏதேனும் விபரங்கள் தொடர்பாக எவரேனும் ஆட்சேபனையினைத் தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகள் சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின், அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்யவோ கீழே கையொப்பமிட்டுள்ளவரது, பெயருக்கு எழுத்து மூலம் 2021.12.31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

**அட்டவணை**

| காணிப் பதிவேடுகளின் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள் | காணி தொடர்பான விபரங்கள் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரம் |
|---|---|---|
| கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் E பிரிவில் 624 ஆம் காண்டத்தில் 273 ஆம் இலக்க ஏடு | மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் தூணகஹ பத்துவே அளுத்குருகோரலே வடக்கு கதிராணையில் அமைந்துள்ள “வெஸ்டர் சீட்டன் ∴பார்ம்” என்றழைக்கப்படும் உரிமம் பெற்ற நில அளவையாளர் திரு.எம்.நிவெந்திரன் அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 191/1988.04.15 ஆம் திகதியிடப்பட்ட வரைபடம் லொட் 01 காணித்துண்டின் எல்லைகள் பின்வருமாறு<br>வடக்கு : 3131 வரைபடத்தின் லெட் 01 மற்றும் 03<br>கிழக்கு : ஈ ∴பெல்தர்இன் காணி<br>தெற்கு : 191 வரைபடத்தின் லொட் 03 மற்றும் 02<br>மேல் : எஸ்.அப்புஹாமியின் காணி மற்றும் டீ.சீ.ஜயவிக்ரமவின் காணி<br>காணிப் பரிமாணம் : 02 ஏக், 00 றூட், 00 பேர்ச் | 01 டப்ளியு.எல்.வீ.ஏ. ருத்ரிகோ பிரசித்த நொத்தாரிசு இனால் 1990.08.20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 5088 இலக்கமுடைய பிரிக்கப்பட்ட உறுதி |

**பதிவாளர் நாயகத்தின் திணைக்களம்**
**இல : 234/ஏ3**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாகாண கல்வித் திணைக்களம்

## வடமேல் மாகாணம்

## 6 முதல் 12 வரையான வகுப்புகளுக்கான ஆய்ந்தறிதல் (Diagnostic) பரீட்சை வினாத்தாள்களை அச்சிட்டு விநியோகிப்பதற்கான பெறுகை

**NWP/EDU/PRO.ACC/07/3-20/2021**

2021ஆம் ஆண்டில் 6 முதல் 12 வரையான வகுப்புகளுக்கான ஒத்திகை ஆய்ந்தறிதல் வினாத்தாள்களை அச்சிட்டு விநியோகிக்கும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வட மேல் மாகாண, மாகாண கல்விப் பணிப்பாளரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார்.

2) பின்வரும் அட்டவணையில் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| தொகுதி இல | தரம் | ஒவ்வொரு மொழி மூலத்திற்குமான வினாத்தாள்களின் எண்ணிக்கை (அண்ணளவாக) | | | பொது ஆங்கில வினாத் தாள்கள் | விலைமனுப் பிணையின் பெறுமதி (இலங்கை ரூபாவில்) | விநியோகிக்க வேண்டிய திகதி (வலயக் கல்வி அலுவலகங் களுக்கு) |
|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | | | |
| 1. | 6 | 37322 | 6675 | 3264 | | 90,000/- | 2022.03.01 |
| | 7 | 36743 | 6290 | 3033 | | | |
| | 8 | 37988 | 6701 | 2903 | | | |
| | 9 | 37093 | 6186 | 2297 | | | |
| 2. | 10 | 34869 | 5925 | 2304 | | 70,000/- | 2022.03.01 |
| | 11 | 33682 | 5215 | 2011 | | | |
| | ஒவ்வொரு மொழி மூலத்திற்குமான வினாத்தாள்களின் எண்ணிக்கை (அண்ணளவாக) | | | | | | |
| 3. | 12 | 96222 | 12537 | 3074 | 26607 | 45,000/- | 2022.03.01 |

ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள அனைத்து மொழி மூலங்கள் மற்றும் தரங்களுக்கும் விலைமனுக்கூறுகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

**விநியோக அமைவிடம்:** வட மேல் மாகாணத்திலுள்ள முப்பத்தொரு வலயக்கல்வி அலுவலகங்களுக்கும் வழங்கல் மற்றும் விநியோகம் மேற்கொள்ளப்படல் வேண்டும். (குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்கள்)

3) விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறை மூலம் நடாத்தப்படும்.

4) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவலை (037-2222422 என்ற தொலைபேசி/ தொலைநகல் எண்ணினூடாக) குருநாகல், கண்டி வீதி, வட மேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை)

5) தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு :

i. கடந்த மூன்று வருடங்களில் வினாத்தாள்களை அச்சிடுவதிலிருந்து பெறப்பட்ட ஆகக் குறைந்த சராசரி நிதிப்புரள்வு பின்வருமாறு இருத்தல் வேண்டும். (2017-2020)

| லொட் இல. | புரள்வு |
|---|---|
| 1 | 4.8 மில்லியன் ரூபா |
| 2 | 3.5 மில்லியன் ரூபா |
| 3 | 3.9 மில்லியன் ரூபா |

ii. வினாத்தாள்களை அச்சிடுவதில் ஆகக் குறைந்தது 3 வருட கடந்தகால அனுபவம்.

iii. அச்சிடுவதில் ஆகக் குறைந்தது 5 வருட கடந்தகால அனுபவம்.

iv. விலைமனுதாரர் தொழில்நுட்ப தகைமை மற்றும் தேர்ச்சி பெற்று பணியாட்களுள்ள அச்சகத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6) மீளளிக்கப்படாத கட்டணமாக மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை (3500.00 ரூபா) (வமேமா) மாகாண கல்விப் பணிப்பாளரிடம் செலுத்திய பின்னர், கீழேயுள்ள 8ஆம் பந்தியிலுள்ள முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 2021 டிசம்பர் 06ஆம் திகதி முதல் 2021 டிசம்பர் 26ஆம் திகதி வரை வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப்பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும் அல்லது வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு எமது www.nwpedu.lk இணையத்தைப் பார்க்கவும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக 2021 டிசம்பர் 20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெறும். என்பன 2021 டிசம்பர் 20ஆம் திகதி மு.ப. 8.30 மணிக்கு எமது www.nwpedu.lk இணையத்தில் பிரசுரிக்கப்படும்.

7) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “16-12ஆம் வகுப்புகளுக்கான ஆய்ந்தறிதல் வினாத்தாள்களை அச்சிட்டு மற்றும் ஒப்படைத்தலுக்கான விலைமனு” என குறிப்பிட்டு 2021 டிசம்பர் 28ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது குருநாகல், கண்டி வீதி, வடமேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் “கேள்விப் பெட்டியில்” உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2021 டிசம்பர் 28ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு குருநாகல், கண்டி வீதி, வட மேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடியதும் விரைவாகவே திறக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து விலைமனுக்களும் “விலைமனுப்பிணையொன்றுடன்” இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக இந்த பெறுகை தொடர்பிலான ஏதும் மாற்றங்கள் இருக்குமாயின் எமது www.nwpedu.lk இணையத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

8) மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு :

**A.S.K. ஜயலத்,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம் (வமேமா),**
**கண்டி வீதி, குருநாகல்.**

**தொலைபேசி** : **037-2222422/037-2220221**
**தொலைநகல் இலக்கம்** : 037-2222422
**இணையத்தள முகவரி** : **www.nwpedu.lk**
**மின்னஞ்சல் முகவரி** : **provincialeducationnwp@yahoo.com**
**திகதி : 2021 டிசம்பர் 06**

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## அலுவலக போக்குவரத்து சேவைகளின் பதிவு

1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 08 க்கு இணங்க, பேருந்து சேவைகளை வழங்குவதன் மூலம் பொதுமக்களின் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்ய தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கட்டளையிடப்பட்டுள்ளது.

கோவிட் 19 தொற்றுநோய்களின் போது பொதுமக்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளை உறுதி செய்யும் நோக்கத்திற்காக தினசரி பேருந்து சேவைகள் பற்றிய தரவுகளை சேகரிக்கும் பொருட்டு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (NTC) அலுவலக போக்குவரத்து வசதிகளை வழங்கும் அனைத்து மாகாணங்களுக்கும் இடையே இயங்கும் அனைத்து பேருந்துகளையும் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, நீங்கள் அலுவலகப் போக்குவரத்துப் பேருந்தின் உரிமையாளராக காணப்படின், பின்வரும் வடிவத்தின் மூலம் கோரப்பட்டுள்ள தகவல்களை தேசிய போக்குவரத்து ஆணையகத்திடம் **2021.12.20** ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

மேலும், உங்கள் நிறுவனம் தினசரி போக்குவரத்துக்கு அலுவலக போக்குவரத்து சேவை பேருந்துகளைப் பயன்படுத்தினால், பின்வரும் வடிவத்தின் மூலம் கோரப்பட்டுள்ள தகவல்களை தேசிய போக்குவரத்து ஆணையகத்திடம் **2021.12.20** ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

| பேருந்து இல | பேருந்து உரிமையாளர்கள் | புறப்படுமிடம் மற்றும் சேருமிடம் |
|---|---|---|
| | 1. பெயர்<br>2. விலாசம்<br>3. தொலைபேசி இல : | |

மேலதிக விபரங்களுக்கு உதவி பணிப்பாளரிடமிருந்து (ஓட்டுநர் மற்றும் சேவை மேற்பார்வை) 011-2587372 பெற்றுக்கொள்ளலாம் கொள்ளலாம்.

தலைவர்,
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
241, பார்க் வீதி,
கொழும்பு 05.

தொலைநகல் – **2503725** **Email- chairman@ntc.gov.lk**

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## விலைமனுக் கோரல்

### மாணவர் பேருந்து சேவைக்கு பயன்படுத்தப்படும் பேருந்துகளுக்கு ஸ்டிக்கர் அச்சிடுவதற்கான (திரையச்சீடு) விலைமனுக் கோரல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் மாணவர் பேருந்து திட்டத்திற்கு சொந்தமான பேருந்துகளில் நான்கு வகையான ஸ்டிக்கர்களை அச்சிடுவதற்காக (திரையச்சீடு) அனுபவத்தினைக் கொண்ட பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

- மனுக்கோரலானது தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.
- ஆர்வமுள்ள வழங்குனர்களுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கொள்முதல் பிரிவை தொடர்பு கொள்வதன் மூலம் வார நாட்களில் **மு.ப. 10.00 மணி முதல் பி.ப.2.00** மணி வரை மனுக்களை பரிசீலனை செய்ய முடியும்.
- இந்த அச்சிடும் பணிக்காக **2022.02.21** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் **ரூ.17,000.00** மனுப் பிணை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- முழுமையான விபரங்களுடனான மனு ஆவணத்தினை, ஆணைக்குழுவின் உதவி பணிப்பா-ளருக்கு (கொள்முதல்) எழுத்துப்பூர்வ கோரிக்கை ஒன்றினை மற்றும் மீள் செலுத்த முடியாத **ரூ.500.00** கட்டணத்தினை பணமாக செலுத்தி **2021.12.06** ஆம் திகதி முதல் **2021.12.20** ஆம் திகதி வரை **மு.ப.09.00** ஆம் திகதி முதல் **பி.ப.3.00** மணிவரை கொள்முதல் பிரிவில் பெற்றுக்கொ-ள்ள முடியும்.
- அனைத்து மனுக்களும் **2021.12.21** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு முன் கொள்முதல் பிரிவில் மனுக்கள் இடுவதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்,
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
241, பார்க் வீதி,
கொழும்பு 05.
தொலைபேசி – 0112503969

### உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

# மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

01. கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பொறியிடப்பட்ட விலைமனுக்களை, கிழே குறிப்பிடப்படும் மூடப்படும் நாள் மு.ப.10.00 மணிவரை, சுகாதார அமைச்சு, பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக்கொள்வார்

| | உருப்படி | விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளக் கூடிய காலம் | | மூடப்படும் திகதி | BES அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய மீளளிக்கப்படாத கட்டணம் | மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) மில்லியனில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 550Nos. syringe Pumps | 06.12.2021 | 21.12.2021 | 22.12.2021 | 12,500.00 | 55.00 |
| 2 | 200 Nos. Suction Apparatus | 06.12.2021 | 21.12.2021 | 22.12.2021 | 3,500.00 | 40.00 |
| 3 | 20 Nos. Roplants | 06.12.2021 | 21.12.2021 | 22.12.2021 | 3,500.00 | 20.00 |
| 4 | 150 Nos. Multipara Monitor Basic | 06.12.2021 | 21.12.2021 | 22.12.2021 | 3,500.00 | 45.00 |

02. இலங்கை சந்தைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கும் உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் / மொத்த பெயர் குறிப்பிடும் பிரதிநிதிகள் மாத்திரம் இப்பெறுகையில் கலந்துகொள்ளத் தகைமை பெறுவர்

03. எந்த ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்களாலும் கொள்வனவு செய்யப்படும் நகல்களுடனான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களில் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. மேலே குறிப்பிடப்படும் கால எல்லையில் மு.ப.09.00 முதல் பி.ப.3.00 இற்கு இடையில் கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

(தொ.பே - 011-2691916, 2694479 - பெக்ஸ் இல -011-2698317)

05. கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக திறக்கப்படும்.

06. கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இன் அலுவலகத்தில் இலவசமாக விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

07. விலை ஆவணங்களுடன் கம்பனி பதிவாளரால் வழங்கப்படும் ஒப்பந்த பதிவு சான்றிதழை தயவுசெய்து சமர்ப்பிக்கவும்.

08. மேலதிக தகவல்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இடமிருந்து தொ.பெ இல : 2684732 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் / பெறுகைக்குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு - 10.**

# ஆசிய இளையோர் பாரா போட்டிகளில் இலங்கைக்கு நான்கு பதக்கங்கள்

பஹ்ரைனின் மனமா நகரில் நடைபெற்றுவருகின்ற 4ஆவது ஆசிய இளையோர் பாரா விளையாட்டு விழாவில் இலங்கை அணியினர் ஒரு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான ரி 47 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் குளியாபிடிய சூரதூத மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஜனனீ விக்ரமசிங்க வெண்கலப் பதக்கம் வென்றார்.

போட்டியை நிறைவுசெய்ய 29.36 செக்கன்களை அவர் எடுத்துக்கொண்டார்.

இந்தப் போட்டியில் ஜப்பான் மற்றும் தாய்லாந்து வீராங்கனைகள் முறையே தங்கம், வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.

ஆண்களுக்கான எப் 41 குண்டெறிதல் போட்டியில் கேட்வே சர்வதேசப் பாடசாலையைச் சேர்ந்த ஜேசன் ஜயவர்தன வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கினார். போட்டியில் அவர் 6.64 மீற்றர் தூரத்தைப் பதிவுசெய்தார்.

இதில் இந்தோனேஷிய வீரர் அல் அய்யூபி (8.01 மீற்றர்) தங்கப் பதக்கத்தையும், ஈரானின் கொர்பானி கொலனிஜாடிட் (5.87 மீற்றர்) வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இதுஇவ்வாறிருக்க, பெண்களுக்கான எஸ்10 சாதாரண நீச்சல் போட்டியில் ஷலீனா பண்நாயக்க தங்கப் பதக்கம் வென்று அசத்தினார். போட்டியை அவர் 5 நிமிடங்கள் 25.27 செக்கன்களில் நிறைவுசெய்தார். குறித்த போட்டியில் ஜப்பான் மற்றும் ஹொங்கொங் வீராங்கனைகள் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

ஆண்களுக்கான எஸ் 610 சாதாரண நீச்சல் போட்டியில் பங்குகொண்ட இலங்கை வீரர் நவீட் ரஷீன் வெண்கலப் பதக்கம் வென்றார். போட்டியை நிறைவுசெய்ய 5 நிமிடங்கள் 20.59 செக்கன்களை அவர் எடுத்துக் கொண்டார்.

இந்தப் போட்டியில் தென் கொரியாவின் ஜுன்டு யேஉம் தங்கப் பதக்கத்தையும், ஈரானின் எப்.அலி வெள்ளிப் பதக்கத்தையும் வெற்றி கொண்டனர்.



OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2021
SINCE 1978 43rd
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

43வது ஒப்சவர் SLT–மொபிடெல்

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2021

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2021

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2021

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
Sunday Observer
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

43வது ஒப்சவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT-மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 11-12-2021 இல. 10




# இறுதி வரை போராடியும் சம்பியன் கிண்ணத்தை இழந்த யாழ். மத்திய கல்லூரி



இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையிலான 19 வயதின்கீழ் பிரிவு 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடரின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை 17 ஓட்டங்களால் வீழ்த்திய காலி வித்தியாலோக கல்லூரி தொடரின் சம்பியன் பட்டத்தை வெற்றி கொண்டது.

எதிரணிக்கு கடுமையான போட்டியைக் கொடுத்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வீரர்கள் தமது அணியின் வெற்றிக்காக இறுதி ஓவர் வரை போராடினர்.

யாழ் வீரர்கள் தமது அரையிறுதிப் போட்டியில் ஹங்வெல்ல இராஜசிங்க மத்திய கல்லூரி அணியை 7 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டும், வித்தியாலோக அணியினர் மொறட்டுவை மெதொடிஸ்ட் உயர் நிலைப் பாடசாலையை 4 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்ட நிலையிலும் இந்த இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர்.

தொடரின் சம்பியனைத் தெரிவு செய்வதற்கான இறுதிப் போட்டி சனிக்கிழமை (04) கொழும்பு நாலந்த கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதன் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வித்தியாலோக அணியின் தலைவர் லக்ஷான் சந்தீப முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

இதன்படி, லக்ஷான் மற்றும் ஷமத் நிர்மால் ஜோடி முதல் விக்கெட்டுக்காக சிறப்பாக ஆடி 60 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். ஷமத் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அணி 109 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் இரண்டாவது விக்கெட்டாக அணியின் தலைவர் லக்ஷான் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இந்த முதல் இரண்டு விக்கெட்டுக்களும் ரன் அவுட் முறையில் வீழ்த்தப்பட்டன.

அதன் பின்னர் யாழ் மத்திய கல்லூரியின் கஜன் மற்றும் அஜேய் இருவரும் அடுத்தடுத்து 3 விக்கெட்டுக்களை பகிர்ந்துகொள்ள 117 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் காலி வீரர்கள் தமது முதல் 5 விக்கெட்டுக்களையும் இழந்து தடுமாற்றம் கண்டனர்.

அதன் பின்னர் ஜோடி சேர்ந்த கவிந்த மற்றும் சொனால் ஜோடி அணி 202 ஓட்டங்களைப் பெறும் வரையில் தமது விக்கெட்டுக்களை இழக்காமல் 85 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

இந்த இணைப்பாட்டத்தின் துணையுடன் வித்தியாலோக அணியினர் 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றனர். அவ்வணியின் துடுப்பாட்டத்தில் மத்திய வரிசை வீரர் கவிந்த 47 பந்துகளில் ஒரு சிக்ஸர் மற்றும் 5 பௌண்டரிகளுடன் 53 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்த ஓட்ட எண்ணிக்கையானது, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு எதிராக ஒரு அணி இந்த தொடரில் பெற்ற அதி கூடிய ஓட்டமாகவும் பதிவாகியது.

யாழ். மத்திய கல்லூரியின் பந்துவீச்சில் அஜேய் 9 ஓவர்கள் வீசி 38 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்ற, கௌதம் மற்றும் கஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை கைப்பற்றினர்.

அதன் பின்னர் சவால் மிக்க 211 என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு ஆடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. அரையிறுதிப் போட்டியில் அரைச்சதம் கடந்த விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் சாரங்கன் 5 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் இரண்டாவது ஓவரிலேயே ஆட்டமிழந்து சென்றார்.

அதன் பின்னர் வந்த வீரர்கள் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திய போதும் மத்திய வரிசை வீரர்கள் வேகமாக ஓட்டங்களைப் பெற முயற்சித்தமையினால் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து வீழத் தொடங்கியது.

ஒரு கட்டத்தில் 32 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றிருந்த யாழ் மத்திய கல்லூரி அணிக்கு இன்னிங்ஸின் இறுதி ஓவர்களில் வேகமாக ஆட வேண்டிய நிலை ஏற்பட்டமை பெரிய ஒரு அழுத்தமாக மாறியது.

இறுதி ஓவர் வரை போராடிய அவ்வணியினர் 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்று வெறும் 17 ஓட்டங்களால் தோல்வியடைந்து சம்பியன் கிண்ணத்தை தவறவிட்டனர்.

சம்பியன் அணி – வித்தியாலோக கல்லூரி

யாழ் மத்திய கல்லூரியின் துடுப்பாட்டத்தல் சிறப்பாக செயற்பட்ட சன்சயன் 88 பந்துகளில் ஒரு சிக்ஸர் மற்றும் 5 பௌண்டரிகளுடன் 55 ஓட்டங்களைப் பெற்றார். முதலில் நிதானமாக ஆடி பின்னர் அதிரடி காண்பித்த சகலதுறை வீரர் அஜேய் 73 பந்துகளில் 3 சிக்ஸர்கள் மற்றும் ஒரு பௌண்டரியுடன் 45 ஓட்டங்களைப் பெற்றார்.

வித்தியாலோக கல்லூரி அணியின் பந்துவீச்சில் சசிந்து, செனித் பிரவீன் மற்றும் உமங்க ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்த முடிவுடன், இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையிலான 19 வயதின்கீழ் பிரிவு 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடரில் வித்தியாலோக கல்லூரி சம்பியன் கிண்ணத்தை வெற்றிகொள்ள, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரர்கள் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்றனர்.

# விளையாட்டு மைதானங்கள் நவீன மயப்படுத்த திட்டம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



வடமத்திய ஆளுநர் மஹிபால ஹேரத்

வடமத்திய மாகாணத்தில் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் நோக்கில் மாகாணத்திலுள்ள சகல விளையாட்டு மைதானங்களையும் நவீனமயமாக்குவதற்கு மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

பொலன்நறுவை மாவட்டத்திலுள்ள விளையாட்டு மைதானங்களை நவீனமயமாக்குவது தொடர்பிலான கலந்துறையாடல் பொலன்நறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் (30) இடம்பெற்றது.

இந்த வருடம் பொலன்நறுவை மாவட்டத்திலுள்ள விளையாட்டு மைதானங்களில் 04 மைதானங்களை முதலில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அதனூடாக செவனபிட்டிய விளையாட்டு மைதானம், புதிய நகரில் அமைந்துள்ள அரச சேவை விளையாட்டு மைதானம், ஹிங்குராங்கொட பொது விளையாட்டு மைதானம் மற்றும் அரலகங்வில பொலிஸ் பயிற்சி விளையாட்டு மைதானம் என்பனவைகளை அபிவிருத்தி செய்வதற்கு எதிர் பார்க்கப்பட்டுள்ளன.

தற்போது நிலவும் சீரற்ற கால நிலை காரணமாகவும் வருடம் முடியப் போகும் நிலையிலும் குறுகிய காலத்தை எதிர்கொண்டு குறித்த அபிவிருத்தி திட்டங்களை துரிதப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆளுநர் மஹிபால ஹேரத் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்காக மாகாண சபை மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு நிதி என்பன வழங்கப்படவுள்ளன. கலந்துறையாடலின் போது வடமத்திய மாகாண பிரதான செயலாளர் சந்திரசிறி பண்டார விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் கே.எம்.ஆர். டப்ளியு. குமாரகம, மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் நெவில் குணசேகர மற்றும் பொலன்நறுவை மாவட்ட விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 டிசம்பர் மாதம் 6ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.